வாரம் பதிப்பு விலை சதம் 20
தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்


மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 புரட்டாதி திங்கள் 3-ம நாள் (18—9—60) ஞாயிற்றுக்கிழமை ரபி.அவ். 26 | இதழ் 16

# குதூகலிப்பதற்கு இன்னும் சந்தர்ப்பம் இல்லை!

## எதிர்காலம் ஆபத்துக்கள் சூழ்ந்ததாக இருக்கின்றது

## எனவே எல்லோரும் ஒன்றுபட்டுத் தொடர்ந்து எதிர்க்க வேண்டும்

### திருமலையில் தமிழரசுத் தந்தை

"உங்கள் மகத்தான வரவேற்புக்கு நன்றி கூறுகின்றேன். ஆயினும் நீங்கள் இப்படிக் குதூகலிப்பதுபற்றி நான் சந்தோஷமடைய முடியவில்லை. ஏனென்றால் சந்தோஷமடையக் கூடியதாக தமிழ் பேசும் மக்கள் அரசியல் துறையில் குறிப்பிடத்தக்க அளவில் இன்னும் எதையும் பெற்றுவிடவில்லை" என்று தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு திருமலையில் ஒரு பொது வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ்வரவேற்புக்கு திருமலை நகராண்மைத் தலைவர் திரு பி. நேமிநாதன் தலைமைதாங்கினார்.

தமிழரசுத் தந்தை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

1949 தொடக்கம் நாம் எமது கொள்கையை மக்கள் முன் வைத்து வருகிறோம். இடைக்காலத்தில் ஒரு பகுதியைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இந் நாட்டில் வாழும் எமது 16 லட்சம் சகோதரர்களின் உரிமை, வாக்குரிமை யாவற்றையும் இழந்திருக்கிறோம்.

குதூகலிப்பது எப்படி?
பாராட்டுவது ஏன்?

இழந்த இந்த உரிமைகளை மீண்டும் இந் நாட்டும் பணியில் எமது கட்சி மூலைந்து நிற்கிறது. எவ்வாவற்றிலும் மேலாக கிழக்கு, வடக்கு மாகாணங்களில் எம்மை நாமே ஆளும் வகையில் இலங்கையில் இணைப்பாட்சி ஏற்படுத்தும்பொருட்டுப் போராடுகிறோம். இந்த எமது குறிக்கோள்களை நாம் அடையாதிருக்கும் பொழுது நாங்கள் குதூகலிப்பதற்கு

(9ம் பக்கம் பார்க்க)



திருமலையில் அளிக்கப்பட்ட பொது வரவேற்பில் கலந்துகொள்வதற்காக திருமலை சென்றிருந்த தமிழ் பிரதிநிதிகளை இங்கே காணலாம்.

## பெரியார்கள் நினைவு விழா

மறைந்த தமிழ்ப் பெரியோர்களாகிய பொன். இராமநாதன், கு. வன்னியசிங்கம், திரு. வி. க., மறைமலையடிகள், பாரதியார் ஆகியோர் நினைவு விழாவொன்று கொழும்புத் தமிழ் இளைஞர் சார்பில் 21-9-60 புதன்கிழமை பி. ப. 6 மணியளவில் வெள்ளவத்தை சைவ மங்கையர்

(9-ம் பக்கம் பார்க்க)

பாடசாலை தேசியமயம்

## ஆசிரியர் சங்கங்கள் அவசரப் படுவது கூடாது

### தலையிருக்க வால் ஆடுவதா?

"பாடசாலைகளை அரசாங்கம் கைப்பேற்பது மொழியாலும், மதத்தாலும் சிறுபான்மையினராக உள்ளவர்களுக்குப் பாதகமாக அமைந்துவிடாதபடி எவை பயன் தெரிவிக்கப்படும் இந்த சமயத்தில், பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் சட்டதிட்டங்கள் எப்படி அமையுமோ என்ற விவரம் எதுவும் தெரியாத இன்றைய குழப்பமான சூழ்நிலையில், ஆசிரியர்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்கள் ஒன்று கூடி 'அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதை வரவேற்கிறோம்' என்று தீர்மானம் நிறைவேற்றிப் பத்திரிகைகளிலும் அவற்றைப் பிரமாதப்படுத்தி வெளியிடச் செய்வது அவசரபுத்தியும், தான்தோன்றிப் போக்கும், பட்டமைத்தனமும் நிரம்பிய காரியமாகும்"

மேற்கண்டவாறு மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவரும், அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க முன்னாள் உபதலைவருமான வித்துவான் இ. சி. சோதிநாதன் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### கண்டிக்கும் அறிக்கை

உதவி பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்வதை மனப்பூர்வமாக வரவேற்பதாக சமீபத்தில் மேல்மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாகசபைக் கூட்டம் தீர்மானித்துச் செய்தி வெளியிட்டமையைக் கண்டிக்குமுகமாகவே வித்துவான் சோதிநாதன் மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

பிரஸ்தாப அறிக்கையில் அவர் தொடர்ந்து கூறுவதாவது:-

(8ம் பக்கம் பார்க்க)



பகலென்றும் இரவென்றும், பனியென்றும் குளிரென்றும் பாராது, பணி யொன்றே மேலென்று பணி செய்த கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம். அன்னார் பிரிவின் ஓராண்டு நினைவு இதழாக இவ்வார சுதந்திரன் மலர்கிறது.

## தொய்வு (ASTHMA) சங்காரி

## ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(RICHELET'S PECTORAL)

* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர் புர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டை வலி






இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. சுவாச நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தும் என்றும் வாழும் சிறந்த செம்மல்

## தமிழர் வரலாற்றில் தனி இடம் பெற்ற தலைவர் வன்னியசிங்கம்

—o—

## 'எல்லாம் தமிழ்' இயக்கத்துக்கு வல்லமை தந்த வள்ளல்

"தம்பி! உயிரற்றவர் என்பதைப், பிணம் என்று பேசுகின்றோம். ஒருவன் செத்தால், உயிரற்றவனாகிறான் என்று பொதுவாகக் கூறும் போது அது உண்மைதான்—ஆனால் சாவு வேறு; உயிரற்றுப் போவதென்பது வேறு. தத்துவம் பேசுவதாக எண்ணிக் கொள்ளாதே, தம்பி! உண்மையை உரைக்கின்றேன். சாகாமலே உயிரற்றவர்களாகி விட்டவர்கள் உண்டு. செத்தும் உயிரோட்டம் தருபவர்களும் உண்டு.

முல்லைவர், கொள்கைப் பற்றற்று, வாழ்க்கைச் சுவையில் மூழ்கி, நாடு, மொழி, இனம் மறந்து இடக்கும் உருவங்கள், உயிர் இருக்கும், உண்ண, உறங்க, உறவாட, உரையாட, பொருள் தேட, நடமாட! ஆனால் இனம் வாழப் பீடு நடைபோட, மொழி வாழ, வழி வகுத்திட வேண்டும் என்ற உணர்ச்சி, துடிப்பு, செயலார்வம் அற்றுப் போயிருக்கும்.

அவர் தான் உள்ளபடி உயிரற்றார். கொள்கைக்காகவே வாழ்ந்து கொடியவரின் முறையின் கோரப் பற்களுக்கோ இரையாகி இறந்து படும் மாண்பினர், உயிரற்றார் எனும் பட்டியலில் அல்ல உயிரூட்டம் தருவோர் வரிசைக்குத் தங்களை உயர்த்திக் கொள்கிறார்கள் என்பதுதான் நாம் போற்றிடத் தக்க பேருண்மையாகும்."

### வரலாற்றில் வன்னியசிங்கத்திற்கு இடம் உண்டு

மேற் கூறிய இத்தகைய அரிய கருத்தை எம் தாயகத்து அறிஞர் அண்ணா 21-8-60-ல் தம்பிக்கு எனத் தான் வரைந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இக் கருத்தினை யான் உருகும் போது தான் பிறந்த நாட்டிற்கு, தான் தோன்றிய இனத்திற்கு, தாம் பேசும் மொழிக்கு தம்மை அர்ப்பணித்த பல பெரியோரின் நினைவு அலைகள் என் நெஞ்சத்தில் மோதின. தன் இனத்தின் விடுதலைக்குப் போராடிய இப் பெரியார்

**ஈழவேந்தன்**

வரிசையில்—வரலாற்றில் தன் பெயர் குறிப்பிடத் தக்க தனியிடம் எய்தியவர் தான் மறைந்தும் மறையாத நம் மாபெரும் தலைவர் வன்னியசிங்கம் ஆவர்.

### ஓர் ஆண்டு முடிவுற்றது

திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் தன் உடலினை உதறித் தள்ளி இன்றோடு (17-9-60) ஓராண்டு நிறைவெய்துகிறது. ஆனால் அவர் ஒவ்வொரு தமிழ் உள்ளத்திலும் அழியாத உறைவிடம் எய்தி விட்டார். இத்தகைய பெருமகனைப்பற்றி சென்ற மார்ச் மாதத்தில் சுதந்திரனில் யான் வரைந்த கட்டுரையில் அன்னாரின் மொழியுரிமை, குடியுரிமை, இட உரிமைப் போராட்டங்களைப் பற்றியும் அவர் உள்ளத்தின் சில இயல்புகளைப் பற்றியும் ஓரளவு விரிவாக எடுத்துரைத்தேன்.

இக்கட்டுரையில் 1956-ல் இருந்த சந்திப்பும் அவரோடு நெருங்கிப் பழகியதால் ஏற்பட்ட சில மறக்க முடியாத என் நெஞ்சில் இருந்து என்றும் நீங்காத சில நிகழ்ச்சிகளை குறிப்பிடுதல் நலம் பயக்கும் எனக் கருதி அவற்றை மொழிவாம்.

1947-ஆம் ஆண்டு தொட்டு திரு. வன்னியசிங்கம் அவர்கள் அரசியலில் அரிய தொண்டு ஆற்றுகிறார் என்பதை யான் அறிந்திருந்தேன். ஆனால் அவர் யார், எத்தகையவர் என்று அறியும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. ஏதோ ஒரு நாள் பரியோவான் கல்லூரியில் (St. John's College) யான் மாணவனாக இருந்த காலத்தில் ஏதோ ஒரு சொற்பொழிவு அன்னார் நிகழ்த்தியது நினைவிருக்கிறது. பின்பு 1952-ல் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அவர் நிகழ்த்திய கருத்தாழம் மிக்க நகைச் சுவையும் மிண்டலும் கலந்த சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

### அணிமைக்கால நெருங்கிய உறவு

எனினும் தனிச் சிங்களந்தான் நாட்டின் அரசாங்க மொழி என யு. என். பி. கண்டியில் தீர்மானம் நிறைவேற்றிய பின், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து நடைபெற முடிவெய்த வம் வாய்ந்த 1956-ம் தேர்தலோடுதான் திரு. கு. வன்னியசிங்கம் அவர்களுடன் நெருங்கிப் பழகி அவர் உள்ளத்தைத்தொட்டு உணரும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. 1956-ல் எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட நெஞ்சம் கலந்த உறவு அவர் இறக்கும் வரையும் ஒரு அணுவளவும் குறையாது நாளுக்கு நாள் வளர்ந்தோங்கியது.

### செல்வாவின் இல்லத்தில் சந்திப்பு

1956 தொட்டு கொழும்பில் உள்ள தந்தை செல்வாவின் இல்லத்தில் தமிழ் அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி கூடுவது வழக்கம். அக்கூட்டங்களில் பங்கு பற்றும் தகுதியை யான் பெற்றிரா விட்டாலும் தமிழ் உணர்ச்சியினால் உந்தப்பட்டு அக்கூட்டங்களில் கலந்து யான் என் கருத்துக்களை தெரிவிக்கும் போது பொறுமையோடும், புன்சிரிப்போடும் செவி மடுத்தவர்களுள் எம் தந்தை செல்வாவும், என் வழிகாட்டி திருவாளர் வன்னியசிங்கமும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இக் கூட்டங்களிலும் மட்டுமல்ல, மற்றும் ஏனைய செயற்குழுக் கூட்டங்களில் யான் பங்கு பற்றி என் இளமையின் துடிப்பிற்கு ஏற்க புரட்சிகரமான கருத்துக்களை தெரிவிக்கும்போது பலர் என்னுடன் மாறுபட்டு ஆத்திரம் கொண்டதும் உண்டு. அப்பொழுதெல்லாம் தனக்கே உரிய புன்சிரிப்போடு தம்பியின் கருத்துக்களில் ஏற்கத் தக்கன பல உண்டு என என் சார்பில் பேசி ஊக்கமும் ஆக்கமும் அளித்த அண்ணல் [illegible] போதும், 1957-லும், 1958-ஆம் நடந்த மட்டக்களப்பு வவுனியா மாநாடுகளின் போதும் எத்தனையோ பிரச்சினைகளுக்கிடையிலும், எத்தனையோ பெருமக்கள் அவரைக் காணக் காத்திருந்த போதும் எம் போன்ற இளைஞரின் உள்ளக் குமுறுதலை உணர்ந்து, யாம் தீர்க்க விரும்பிய ஐயங்களுக்கும், கேட்ட கேள்விகளுக்கும் தீர்க்கமான பதில்களைப் புன்சிரிப்போடு எமக்கு அளித்து எம்மை மதித்த பெரியாரை யாம் என்றும் மறக்க முடியாது.

### 1958 இனக்கலவரங்கள்

1958-ல் நடந்த வவுனியா மாநாட்டை அடுத்து ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது யான் யாழ்ப்பாணத்தில் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது அவரின் இல்லத்திற்கு சென்று அவர் கூறிய பணிகளை இயன்றளவு செய்தேன். சில வேளைகளில் உணர்ச்சிவசப்பட்டு யான் ஏதும் கூறியிருப்பின் அவர் என் மீது கோபித்ததும் உண்டு. ஆனால் அவர் கோபம் தோன்றிய இடம் தெரியாது அடுத்த நிமிடமே மறைந்து போய்விடும். அவ்வினக்கலவரத்தின் போது குறிப்பாக அநுராதபுரம், பொலநறுவை முதலிய இடங்களில் இருந்து அடிபட்டு, உதைபட்டு ஓடி வந்த ஏழை இந்திய வம்சா வழியினருக்கு யாழ்ப்பாணத்தின் பல பாகங்களுக்கும் ஓடோடி உள்ளத்துடிப்போடு அவர் ஆற்றிய பணியை என் கண்ணாரக் கண்டேன். அப்பொழுதே தமிழ் பேசும் இனம் பெற்றெடுத்த கண் கண்ட தெய்வம் இவர் என்ற முடிவிற்கு யான் வந்தேன்.

### எல்லாம் தமிழ் இயக்கமும் 'கு-வ'வும்

இவை ஒரு புறம் இருக்க எம் போன்ற இளைஞர் தோற்றுவித்த "எல்லாம் தமிழ் இயக்கத்திற்கு" சொல்லிலும் செயலிலும் ஆதரவு காட்டியவர் திரு. கு. வன்னியசிங்கம். 1959-ல் ஆகஸ்ட் 15-ல் முற்றவெளியில் நடந்த தமிழ் அரசுக் கூட்டத்தில் "எல்லாம் தமிழில் செய்வோம் எம் வாழ்வாம் தமிழைக் காப்போம்" என்ற பெயர் பொறித்த தமிழ் இயக்கத்தைப் பற்றியும் ஏதும் குறிப்பிடுங்கள் என்று கூறினேன். அவர் அப்பாவின உணர்ச்சியோடு வாசித்த எல்லாம் தமிழ் இயக்கத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்திய பாங்கு என் நெஞ்சில் இருந்து என்றும் அகலாது.

### கடைசிச் சந்திப்பு

இக் கூட்டத்தை அடுத்து நடந்த பாராளுமன்றக் கூட்டத்தில் அவரை யான் கடைசியாக சந்தித்து பல விடயங்களைப்பற்றி உரையாடினேன். அப்பொழுது "எல்லாம் தமிழ் இயக்கத்தை" நல் முறையில் "அமுல்" நடத்த வேண்டும்என்றேன்; அப்பொழுது அவர் "அமுல்" தமிழ் இல்லை என்று கூறிச் சிரித்தார். யானும் அவர் உரையாடலில் காணப்பட்ட ஓர் இரு பிற மொழிச் சொற்களை எடுத்துக் காட்டியபோது யாம் இருவரும் சிரித்தோம். அது தான் யான் கண்ட மறக்க முடியாத கடைசிச் சிரிப்பு.

### கடைசியாக தொலைபேசியில் அவர் கூறியவை

எனினும் அவர் இறப்பதற்கு ஒரு கிழமைக்கு முன் திரு. செல்வநாயகம் அவர்களின் இல்லத்தில் இருந்து தொலைபேசியில் அவருடன் பேசினேன். அது தான் அவரோடு யான் நிகழ்த்திய கடைசி உரையாடல். அதன் பின் அவரின் தமிழ் உருவத்தை யான் கண்டதும் இல்லை. அவரின் கனிந்த தமிழ்க் குரலைக் கேட்டதும் இல்லை. ஆனால் அவர் அன்று கூறிய கருத்துக்கள் மட்டும் இன்றும் என் காதுகளில் ஒலித்தபடியிருக்கின்றன. அது பின்வருமாறு: "தம்பி! எம் தமிழ் பேசும் இனத்தின் அரசியலில் பிரச்சினைகளைத் தொலைபேசியில் பேசித் தீர்க்க முடியாது. விரைவிலே யாம் போராட்டத்திற்கு உரிய வழி வகைகளைக் காண முயலவேண்டும்" என்றார். அவர் கூற்றுக்களை இன்று மீண்டும் மீண்டும் நினைக்கும் போது ஆம்! யாம் வெறும் சலுகைகளை நம்பி ஏமாற முடியாது. "வெகு விரை

(15-ம் பக்கம் பார்க்க)

## அன்புவாழ் நெஞ்சம்!

அன்புவாழ் நெஞ்சம் அறம்கவரு லட்சியமும்
பண்பென்று சொன்ன; பகலிரவு—என்றும்
பாராது; தாய்மொழிக்காய் பாடு படவுழன்ற
தாரான சிந்தை; தன்மானம்;—ஏராளம்
மக்கட்குத் தந்தெழுந்த நாள்முதலாய்,
தகைசால் நிறைந்த சாதுரியம்;—தக்கபடி
"வாழு—வாழவிடு" மந்திரத்தை சங்கதி
ஆழ்வோர்க் கறமுரைத்த பேரறிவு;—"கீழ்சாதி
மேல்சாதி என்றோர் வெறும்கூச்சல் எம்மிடையே
ஆகா"தெனவுரைத்து பாவநுக்கும்—நீதி
சாதனையில் தந்த தாழ்வுயர்வும் பேதமற்ற
சாதனைகள்; போதனைகள்—சற்குணங்கள்—[illegible]
அத்தனையும் பார்த்தெம் அன்னை தமிழன்னை
நித்தம் பரிவினிக்க நேர்ந்தாள்;—நித்தம்
உந்து மடியோ டுவற் றுயிலிடுமவ்
அந்தகனுக் காளாய் ஐயகோ!—அந்தநாள்
கட்டுண்ட மக்கள் கண்ணீர் சொரிந்துருகக்
கொட்டுண்ட நிலை குறைய—வெட்டுண்ட
ஈழத் தமிழர் எல்லாரும் ஒன்றாய்
"வாழு—வாழவிடு" மந்திரத்தை—நாளும்
ஓதியோர் ஆண்டாக உன்மெய் வழிநடந்து
பாதிவரிசை பதித்தார்கள்—சேதி
சொல்லத்தான் இன்று நோதந்திரத்தி னுலமுத நோம்
மெல்லென்வே வாராய் விரைந்து.

தாயே! தமிழே!! உன் தவ மடிமீந்த
சேயவன் சிங்க திருநாமன்—ஆயவனை
மீண்டும் கொணர்ந்துன் விழிமுன்னர் விட்டோம்யாம்
ஈண்டின் இதயத் திடமளித்து—யாண்டுமவன்
எண்ணங்கள் ஈடேற இலட்சியங்கள் வெற்றிபெற
மண்ணவர்க்கு அவன்றமை வாழ்ந்திருக்க—விண்ணுலகில்
முறையாய் அவனுத்மா முக்காலும் சாந்தியுற
இறைவனுமுன் ஆசியொரு லட்சம்.

—குரு—பரன்


★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், சவுக்கை பாவாடை கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்!

குண்டன்மால்ஸ்,

26, கெய்லர் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைப் போராட்டம் தேசத்துரோகமானல் தூக்கு மேடை ஏறவும் தயார் என்று கூறிய தேசபக்தர்

## மேடைப் பேச்சில்—கேள்வி பதிலில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார்

ஆயிரமாயிரம் இலட்சாதிலட்சம் மக்கள் மண்ணிலே பிறக்கிருர்கள், உயிர் வாழ்கின்ருர்கள், வாழ்வு முடிந்து மறைகிருர்கள். இந்த உலகில் இருந்தார்களே அவர்கள். எங்கே போய் விட்டார்கள்? அவர்களை நினைப்பவர் யார்? அவர்கள் வாழும்போது மற்றவர்களை எண்ணி வாழவில்லையானுல் அவர்களை மற்றவர்களும் இனிமேல் நினைக்கப் போவதில்லை.

இந்நிலைமைக்கு மாருக இறந்தாலும் இறவாமல் ஓராண்டல்ல நூருண்டல்லப் பல்லாண்டுகளாக வாழுகிருர்களே சில பேர்கள். எப்படி, வாழாமல் வாழுகிருர்களென்று நாம் சிந்திக்கும்போது 'பூதவுடம்பழிந்தும் புகழுடம்பழியாமல்' வாழத்தெரிந்து வாழ்பவர்கள்தான் அவர்கள் என்று அறிகிறேம்.

அப்படிப்பட்ட ஓர் உயர்ந்த இலட்சியத்துடன் வாழ்ந்து மறைந்து வருடமொன்ருகியும் குடும்பத்தின் மத்தியிலல்ல, நண்பர்களின் மத்தியிலல்ல, சொந்த ஊரின் மத்தியிலல்ல, தேசத்தின் மத்தியிலே, பல இலட்சம் மக்களினது உள்ளங்களிலே மறைந்தும் மறக்க முடியாமல் வாழுகிருர் அமரர் வன்னியசிங்கம் அவர்கள்.

### எதை வர்ணிப்பேன்!

திரு. வன்னியசிங்கமவர்கள் அமரத்துவமடைந்த ஒரு வருடப்பூர்த்தியை அனுசரித்துப் பல கோணங்களிலிருந்து நோக்கும் எழுத்தாளரின் எழுத்துச் சித்திரத்தின் மத்தியில் அடியேனும் எனது சிறு பங்கைச் சமர்ப்பிக்க எண்ணியபோது—தேர்தல் காலத்திலும், வேறு பிரச்சினைகள் கிளம்பிய

எம். டானியல் ஜேச்

காலத்திலும் மேடையில் நின்று வாடையும் தென்றலும் கூடிக் குலாவும் தோரணையில் பேசிய நிலைமைகளை வர்ணிப்பேனு? அல்லது பாராளுமன்றத்தில் தலை நிமிர்ந்து நின்று தமிழினத்தின் தலைவனென்ற பான்மையில் அங்கினத்தின் இன்னல்கள் திர உருக்கமாக உரை நிகழ்த்தி, விளக்கமான பதில் கொடுத்து, பொருத்தமான ஆதாரங்கள் காட்டினர்களே அதை வர்ணிப்பேனு? அல்லது ஆட்சியாளரைப் பார்த்து இனத் துவேஷத்தின் காரணத்தால் பாகுபாடு காட்டி எம்மினத்திற்கு அநீதி செய்யும் அரசாங்கமே! நீ செய்யக் கூடியதைச் செய்து பார், தமிழரசு நிறுவியே தீருவோம், தமிழ் நாட்டின் சிகரத்தில் என்ருே ஒரு நாள் தமிழ்க் கொடி பறந்தே தீரும் என்று அஞ்சா நெஞ்சுடன் ஆணையாளர்க்கு அறை கூவிவிட்ட சவால்களை வர்ணிப்பேனு?

### "மேடைப் பேச்சு விடை"

"ஒருவன் தன் மொழிக்காகப் போராடுவது தேசத்துரோகமென்ருல், எமது பாரம்பரியம் அழிந்தொழியாது பாதுகாக்கப் போராடுவது தேசத்துரோகமென்ருல், இந்த நாட்டையே தமது தாயகமாகக் கொண்டுள்ள தொழிலாளரின் குடியுரிமைக்காகப் போராடுவது தேசத்துரோகமென்ருல், இன்றுள்ள அரசியலமைப்பை மாற்றிக் கூட்டாட்சி முறைக்காக அறப்போர் நடத்துவது தேசத்துரோகமென்ருல், இத்துரோகத்தின் பேரால் குற்றஞ்சாட்டப்பட்டுத் தூக்குமேடையில் தொங்குவதையே நான் மகிழ்ச்சியோடு வரவேற்பேனன்றி எனது இனம் இழித்துப் பழிக்கப்பட்டு சிதைந்து சீரழிந்து அழிவதைச் சகியேன்" னென்று இடிமுழக்கம் செய்த தியாகத்தின் விரக்கணைகளை வாளிப் பேனு—என்று பல சிந்தனைக் கேள்விகளின் மத்தியிலே "மேடைப் பேச்சு விடை"யிலே ஏற்படுத்திய ஒரு புரட்சிகரமான புதுமையில் சில கூற ஆசித்துள்ளேன்.

### சமாளிப்பவர்கள் வகை

நம் வாழ்க்கையில் எத்தனையோ மேடைப் பேச்சாளரின் சீரான, நேரான, அலங்காரமான, ஆவேசமான, உணர்ச்சியான பல பேச்சுக்களைக் கேட்டிருந்தாலும் அவர்கள் பேசும்போது குறுக்குக் கேள்வியெழுந்தால் முகத்திலறைந்து மடக்குவதுபோல் பதில் கொடுத்து மடக்குவதையோ, கேட்டவரைச் சொல்லம்புகளால் தாக்குவதையோ அல்லது அவர்களுடைய கேள்வி ஒன்ருக இருப்பதில் வேருென்ருகத் திரும்பி விடுவதையோ, சிற்சில சமயங்களில் பதில் சரியாக இருப்பதுபோல் கூறிச் சமாளிப்பதையோ, கூட்டக் கடைசியில் பதில் கூறுவதாகக் கூறிக் கடத்திவிடுவதையோ கண்டிருக்கிறேம்.

ஆனல் அமரர் வன்னியசிங்கமவர்கள் கலந்து கொண்ட கூட்டங்கள் அப்படியல்ல. அவைகளிலெல்லாம் ஒரு புரட்சிகரமான புதுமை மணம் கமழ்ந்தது. அதிலே தன்னம்பிக்கையின் துணிகரம் ஜொலித்தது அவருடைய நெஞ்சத் துணிவின் சுடர் பீறி எழுந்தது. அது அகங்காரத்தினலல்ல மக்களைத் திருப்திபடுத்தும் பாதையில் பண்பாக இருந்தது.

### மேடைப் பதில்

திரு. வன்னியசிங்கமவர்கள் கலந்து கொள்ளும் தமிழரசுக் கூட்டங்களில் எவரும் எந்தக் கேள்வியையும் துண்டுப் பத்திரங்களில் எழுதி அனுப்பலாம் என்ற ஒரு வழக்கம் வளர்ந்து [illegible] திருப்திகரமாக, பொறுப்பாளியாகத் திரு. வன்னியசிங்கம் அவர்களே திகழ்ந்ததை யாவரும் அறிவோம்.



கட்சித் தலைமைப் பொறுப்பேற்கும் தளபதி—1954

இவர்களிடம் சட்ட அறிவோ, அரசியலறிவோ, தேசத் தலைவர்களைப் பற்றிய அறிவோ தமிழறிவோ, சமய அறிவோ எந்தத் துறையிலும் நல்ல அறிவு இருந்ததினுலும் பேச்சுத் திறமையும் அதற்கேற்ப அமைந்திருந்ததினுலும் யாரும் குறை கூருதபடி 'மேடைப்பதில்" அழகாக அமைந்திருப்பதுண்டு.

### மன்ஞரில்

1951-ம் ஆண்டு தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களடங்கிய பிரசாரக் குழு மன்ஞர்வாடி வீட்டில் தங்கி இருப்பதாக அறிந்து அங்கு சென்று ஒவ்வொருவரையும் கண்டு பேசினேன். அவ்வேளை திரு. வன்னியசிங்கமவர்கள் அறிமுகம் குறைவான ஓர் இளைஞராக இருந்தார். அதிகம் அவரோடு பேசவில்லை. அவர் என்னை அவ்விடத்திற் கவரக் கூடியதாகவும் நிலைமை இருக்கவில்லை. திரு. அமிர்தலிங்கத்துடன் உரையாற்றினேன்.

அவர்களோடு பேசும்போது சில சந்தேகங்களைக் கிளப்பினேன். பிற்பகல் நடைபெறும் கூட்டத்தில் எங்கள் சந்தேகங்களை எழுத்து மூலம் கேட்கலாமென விளம்பரத்தையும் சுட்டிக்காட்டிப் பேசினேன். எழுத்து மூலம் நேரில் கொடுப்பதற்குக் கொஞ்சம் மனம் கூசியது. தலைவர் செல்வநாயகத்தைத் தவிர மற்றவர்கள் அறிமுகமற்றவர்களாகவுமிருந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வன்னியர் புகழுக்கு வரம்பும் உண்டோ?

—கா. சி. ஆனந்தன்—

வன்னியர்தம் புகழுக்கு வரம்புகட்டி
வைமென்ருர்! கட்டுரையும் கவியும் கேட்டார்!
விண்ணுக்கு வேலியிடச் சொன்னர்! தங்க
வெய்யோனைப் பெட்டியிலே பூட்டுமென்ருர்!
அன்னைக்கு உயிர்தந்து செத்தமேதை
அஞ்சாத சிங்கத்தை அளந்து கோடிப்
பண்ணுலும் கவியாலும் பாடினலும்
பகலுக்கு விளக்கிட்ட கதையே அன்ருே?

மூச்செல்லா தமிழ்மைந்தன்! 'அரசு' கோரி
மூவர்ணக் கொடியோடு முழக்கமிட்டோன்!
பேச்சுக்குஞ் செயலுக்கும் பாலங்கண்ட
பேராளன்! தமிழ்ப் பெரியார் 'செல்வர்'
வாய்ச் சொல்லைத் தட்டாத தொண்டன்! வீரன்!
வருமானம் தமிழ்மானம் என்று வாழ்ந்த
போர்ச் செல்வன்! இவனுக்கு நிகரும் உண்டோ?
போற்ருத கவிஞர்க்கு வெறியும் உண்டோ?

'சிறை கொண்டு வைத்தாலும் எனது வாழ்வு
செத்தாலும் பட்டாலும் சிதறினலும்
குறிகொண்டு சுட்டாலும் ஈழநாட்டில்
குடியென்று தமிழனை வாழச்செய்வேன்!
அறிவின்றி வாட்டாதீர்—தமிழர் கூட்டம்
ஆடல்ல மாடல்ல தெரிவீர்!' என்று
வெறிகொண்டு போரிட்ட மறவன் மேனி
வீழ்ந்தாலும் புகழுக்கு வீழ்வுண்டாமோ?

புற்றரவு நஞ்சோடு தமிழர் நெஞ்சைப்
புண்ணக்கி வஞ்சனையில் புலமைகாட்டும்
எட்டப்பர் வட்டாரம் கொட்டம்போட
ஈழத்தே தமிழ்மாந்தர் ஒன்ருய்க்கூட
முற்றுகைக்குக் காலமிட்ட பயனுள்ளுமல்
மூச்சுக்குத் தடைபோட்டு எங்கே போனன்...
பட்டாளம் சிறையிட்டு வைத்த செம்மல்!
பாடைக்குள் மறையாத தமிழர் செல்வம்!

வன்னியரின் சிறந்த வரம்பும் உண்டோ?
வாயில்லாப் பூச்சிகளும் அவரைப்பாடும்
அன்னரைப் பெற்றதத் தமிழனுக்கும்
அடிபேறும் கொள்ளிக்கும் உணர்வேயில்லை!
எந்நாளும் தமிழ்போல வாழப்பெற்ருன்
இவனைப் போல் மன்னவாழும்! நிலவு வாழும்!
கண்ணேறு ஒளி வாழும்! தமிழர் நெஞ்சக்
காட்டோடு 'சிங்கநிகர்' புகழும் வாழும்!




## திருமண அழைப்பு

மணமகன்:- ஜனுப் அ. அக்பர் (யாழ்ப்பாணம்)
மணமகள்:- செல்வி நூறுல் இதாயா (மாளிகாவத்தை)
இடம்:- 359/3 மாளிகாவத்தை மருதானை
நாள்:- 18—9—1960 ஞாயிறு—திங்கள் இரவு

## தேநீர் விருந்து

25—9—1960 ஞாயிறு பிற்பகல் 5 மணிக்கு மணமகன் இல்லத்தில் திரு. அ. அமிர்தலிங்கம், பா. உ. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திருமண விழாவிலும், தேநீர் விருந்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

தங்கள் நல்வரவை நாடும்,
ஜனுப் கா. அப்துல் றகுமானும் பரிவாரும்

1, ஜும்மா மொஸ்க் ஒழுங்கை,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைப் போராட்டம் தேசத் துரோகமானல்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் திரு செல்வநாயகம் தலைமையில் கூட்டம் நடந்தது. பிரசாரக் குழுவினர் பலரும் பேசினர்கள் அவ்வேளை டாக்டர் நாகநாதனுடைய பேச்சு உணர்ச்சி உந்த, ஆங்கிலம் தொண்டையிலடைபட, தமிழ் நாவில் தத்தளிக்க அடிக்கடி அடே, பிடே என்று இளம் வாலிபர் திரு. அமிர்தலிங்கத்திடம் தமிழ் கேட்டது வேடிக்கையாக இருந்தது. டாக்டர் திரு. வன்னியசிங்கமவர்களும் கொஞ்சம் தமிழ் உதவி கொடுத்தார்கள்.

### தயக்கமும் கேள்வியும்

எனது கேள்விகள் சில அனுப்புமுன் அவைகளில்சில சந்தேகங்கள் மனதில் எழுந்தன. எந்தக் கேள்விக்கும் உடனைக்குடன் பதில் இறுப்பார்களென்ன பிரகஸ்டந்களா? உலையையில் பதில் கிடைக்குமா? அல்லது பேய்க் காட்டிவிடுவார்களா? அல்லது கேட்டவரைப் பேயன், பித்தன் என்று தாக்கி விடுவார்களா? அல்லது கேள்வி ஒருபுறமிருக்கப் பதில் வேறொருபுறம் சென்று விடுமா என்ற கலக்கத்தோடும், மனக் கூச்சத்தோடும் சில கேள்விகளை இன்னோர் நண்பரின் ஆலோசனையுடன் தயாரித்தனுப்பினேன். அதில் ஒரு கேள்வியின் சாரமும், பதிலும் பின்வருமாறு:—

கல்வி அறிவும், அரசியலறிவுமில்லாத பாமர மக்களுக்கு நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே கட்சியை ஒரே முகமாக ஆதரிக்க வேண்டுமென்று கூறுகிறீர்களே எது நல்ல கட்சியென்று தெரியும் அறிவு அவர்களுக்குண்டா? இவர்களை ஒன்று சேரப் பண்ணுவதிலும் விஷயம் விளங்கிய தலைவர்கள் ஒரு சிலராக இருப்பதால் அவர்களே ஒன்று கூடி ஒரே வழியிற் செல்லுவது இலேசல்லவா?

### அவரின் விடை

விடையின் சாரம்: தலைவர்களின் தவறுகளை உணரப் பண்ணுவதும், தகுந்த தலைவர்களைத் தெரிவதும் அவர்களுக்குப் பெலனைக் கொடுப்பதும் பொது மக்களின் கைகளிற் தான். அரசாங்கம் அவர்களிடம் வாக்குரிமையைகளித்திருப்பதால் அவர்களே ஒன்றுதிரண்டு தகுந்த பிரதிநிதிகளை தெரியவேண்டும். அந்த நிலைமை வரும்போதுதான் ஒன்றைச் சாதிக்க முடியுமென்ற சாரமைமய விளக்கினர். அதன் உண்மையை அன்னரின் மறைவின் பின்புதான் இன்று காண்கிறோம்.

8-1-56-ல் ஜனநாயக காங்கிரசின் மன்னார்க் கிளைப் பிரமுகர் திரு. வேலுச்சாமியால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கூட்டத்தில் பலபேச்சாளருள் திரு. தொண்டமானும் திரு. வன்னியசிங்கமும் முக்கிய பேச்சாளர்களாக வீற்றிருந்தனர். அவ்வேளை ஜனநாயக காங்கிரஸ் பிளவுபட்டுத் தொண்டமான் கட்சி, அஸீஸ் கட்சி என்ற நிலைமை இருந்தது. இதைப் பிடித்து எஸ். எஸ் ஸி. படித்த சில குறும்புக்கார வாலிபர்கள் இரண்டு நீண்ட கேள்விக்கடதாசிகளை இரு தலைவர்களுக்கும் அனுப்பி வைத்தனர். அதில் யாருமே கையொப்பமிடவில்லை.

கட்சித் தலைவராயிருந்த அஸீசை மற்றவர்கள் சுயநலத்தால், சூழ்ச்சியால், தலைமைப்பதவி ஆசையால் பிரித்தனரென்றும் அதை ஒன்றுபடுத்தி நடத்த முடியாமல் மற்றவர்களுக்கு உபதேசிப்பதில் பயனில்லையென்ற சாரமமைய திதொண்டமானைத் தாக்கி இருந்தது அக்கடிதத்தில்;

### யாழ்ப்பாணத்தார்

மறு கடிதத்தில் யாழ்ப்பாணத்தார் சுயநலமிகள், சுரண்டும் பேர்வழிகள், மன்னார்ப் பகுதிகளில் வந்து இங்கு உத்தியோகத்தில், வியாபாரத்தில் அமர்ந்திருப்பவர்கள் யாழ்ப்பாணத்தார்க்கே உதவி கொடுப்பர். ஏராளமான பொருள்களைச் சுருட்டிக் கொண்டு தங்கள் நாட்டுக்குக் கொண்டு போய்க் குவிக்கிறார்களென்ற சாரமமைய இருந்தது.

திரு. தொண்டமானுடைய பேச்சுவேளை அக்கடிதத்தையும் படித்தார். பதில் கூறும்போது அஸீஸ், பிரிவின் காரணமாக நடந்த சம்பவத்தின் சுருக்கம் கொடுத்து விளக்கினர். என்றாலும் உணர்ச்சிக் கொதிப்பும் தோன்றியது. தன்னைத் தாக்கிய அக்கடிதத்தினைரையும் அதற்குக் காரணராயிருந்த அஸீசையும் சற்றுக் கடுமையாகக் கொண்டு தாக்க முயன்ருர். ஆவேசமாக இருந்தது அவரின் பேச்சு.

### கேட்டவர் கூசினர்

திரு. வன்னியசிங்கம் எழுந்தபோது அதற்கு மாருன நிலைமை அவரிடம் காணப்பட்டது.

சாதாரணமாகப் பேச எழும் ஒரு பேச்சாளனின் நிலைமையில் நின்ருர். கடிதத்தை வாசித்தார். அதற்குப் பதில் கூறினர். ஆவேசமோ, ஆத்திரமோ அவர் பேச்சில் காணப்படவில்லை.

யாழ்ப்பாணத்தார் மன்னரார் என்ற பிரதேச முறையில் செய்த குறைபாடுகளை நீங்கள் இக்கடிதத்தில் காட்டவில்லை. இம்மேடையில் வந்து யாராவது எடுத்துக் காட்டக்கூடுமானல் தயவு செய்து வாருங்கள். (சிலநிமிஷம் பொறுத்து) அப்படி இல்லாவிட்டால் கடிதமூலம் எனது விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். அல்லது பத்திரிகைகளிலாவது அதை எழுதி வெளியிடுங்கள் பிழையென்றால் ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கோருகிறோம். பிழையான விளக்கமென்றால் சரியான பதில் கொடுக்கிறோம். தனிப்பட்ட முறையில் முடிச்சுமாறிகள் யாரும் அப்படி இப்படிச் செய்திருந்தால் அதற்கு சமூகமோ தேசமோ பொறுப்பாளிகளல்ல என்ற

(13-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தம்பி.. ஞாலம் பெற வரினும் சீலந்தவரு நேர்மையாளர் வன்னியசிங்கம்

எங்கள் கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி அவருடைய மூத்த சகோதரியார் திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம் எழுதும் தொடர் கட்டுரை இது.



திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம் B. A.(Hons), (Lond), M. Litt

இக் கட்டுரைக்கு கட்டுரை ஆசிரியர் சூட்டிய மகுடம் "எனதம்பி வன்னியசிங்கத்தை உருவாக்கிய பரம்பரையும் சூழலும்" என்பதாகும்.

அமரர் வன்னியசிங்கத்தின் தந்தையார் திரு குமாரசாமி அவர்கள் ஒரு பட்டதாரியாகவும், பிரபல பிரக்கிராசியாராகவும், துறைபோய்ந்த தமிழறிஞராகவும் விளங்கினர். அவருடைய மூத்த புதல்வியார்தான் திருமதி இராஜ ராஜேஸ்வரி அம்மையார்.

திருமதி இராஜ ராஜேஸ்வரி தமது ஆரம்பக் கல்வியைக் கொல்லங்கலட்டியில் பெற்ருர். பின்னர் மஹாஜனக் கல்லூரியிலும், இராமநாதன் கல்லூரியிலும் சேர்ந்து பயின்று லண்டன் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறினர்.

இராமநாதன் கல்லூரியில் ஆசிரியையாகச் சேர்ந்து கல்வி போதித்துக்கொண்டிருக்கும் போதே லண்டன் இண்டர்மீடியேட் பரீட்சையிலும், பின்னர் வெளி மாணவியாக லண்டன் பி. ஏ. பரீட்சையிலும் தேறினர் தமிழில் விசேஷ சித்தி பெற்ருர். தொடர்ந்து அண்ணுமலை சர்வகலாசாலையில் M. Litt பட்டமும் பெற்ருர். தற்சமயம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றி வருகின்ருர்.

தமிழிலும், உளத்தத்துவ சாத்திரத்திலும் பாண்டித்தியம் பெற்றவராக விளங்கும் அம்மையார் அமரர் வன்னியசிங்கத்தின் அகப்புற வளர்ச்சியை அணுவணுவாக ஆராய்ந்து இக் கட்டுரையை எழுதியுள்ளார். "என் தம்பி......" என்று அம்மையார் உரிமையோடும் வாத்ஸல்யத்தோடும் இக் கட்டுரைத் தொடருக்கு தலைப்புக் கொடுத்திருந்தே அமரர் வன்னியசிங்கத்திடம் அவர் கொண்டிருந்த பெருமையும், ஈடுபாடும் புலனுகின்றன.

—ஆசிரியர்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்ற பழமொழிக்கிணங்க சிறு பிராய முதலே என் பெரிய தம்பியிடம் விவரிக்க முடியாத ஏதோ ஒரு கவர்ச்சி இருந்தது. அவருடன் பழகும் அத்தனை பேரது அபிமானத்துக்கும் அவரைப் பாத்திரமாக்கியது அக்கவர்ச்சிதான். அந்த வசீகர சக்தி இன்னதென வரையறுத்துக் கூறுவது கடினம். ஆயினும் அதன் அம்சங்களிற் பெரும்பாலானவற்றைப் பகுத்தறிந்து அவரது உயர்வுக்குப் பெரிதும் காரணமான குணநலன்கள் இவையெனக் கூற முடியும்.

### வன்னியசிங்கமும் பாலசிங்கமும்

குடும்பத்தின் மூத்த புதல்வன் என்பதால் பிறக்கும் போதே தாய் தந்தையரது விசேட அபிமானத்துக்குரியவராகப் பிறந்தார் வன்னியசிங்கம். முதற் குழந்தை பெண்ணுகப் பிறந்ததால் ஏமாற்றமடைந்த தந்தையார், நோன்பிருந்து, தலவிநாயகருக்குச் செய் கடன் நேர்ந்து பெற்ற தலைமகனிடம் தனி அன்புடையராதல் இயல்பே. வன்னித் தம்பி என்னும் தம் தந்தையார் பெயரையே காலப் போக்கிற்கு ஏற்பச் சிறிது மாற்றி வன்னியசிங்கம் எனப் பெயர்சூட்டினர் மகனுக்கு. இப்பெயருடன் இசையவே இளைய மகன் பெயர் பாலசிங்கம் ஆயிற்று. இருவருக்கும் இடையில் பிறந்தவர் என் தங்கை. நாங்கள் நால்வர் உடன் பிறந்தோர்.

### தத்துக்கழிந்தது


அருமையாகப் பிறந்த மூத்த மகனுக்கு ஐந்து வயதில் ஒரு "தத்து" என்ற சோதிடச் செய்தி தந்தையாரது மகிழ்ச்சியில் சிறிது கவலையையும் கலந்தது. "தத்து என்பதால் இவனிடம் அதிக பற்று வைக்கக் கூடாது என்று நான் எண்ணினலும் இவன் தன் பேச்சாலும் சிரிப்பாலும், குறுநடையாலும் குறும்பு விளையாட்டாலும், கொஞ்சலாலும் கெஞ்சலாலும் என் மனத்தைக் கவர்ந்துவிடுகிருனே. இவன் ஆயுளோடு இருக்க வேண்டுமே ஈஸ்வரா!" என்று என் தகப்பஞர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஐந்து வயதுத் தத்து ஏதோ ஒரு சிறு நோயோடு போயிற்று. பிராணபத்து என்னுமளவுக்குப் பெரிய நோய் எதுவும் தாக்கியதாக நினைவில்லை.

### விசேஷ பிரியம்

தந்தையார் தாயார் இருவரது குணவிசேடங்களிலும் அமைந்த சிறந்த அம்சங்கள் எல்லாம் இவருடைய குண இயல்பில் அமைந்துவிட்டன. நான்கு பிள்ளைகளுள் இந்த மகனிடமே தத்தம் குணவிசேடம் ஒன்றின் சாயலையேனும் அல்லது தம் வாழ்க்கைத் துணைவரது குணவிசேடங்களுள் போற்றுதற்குரிய ஒரு சிறந்த இயல்பின் தோற்றத்தையோ பெற்றோர் இருவரும் தனித்தனி [illegible]ளோ என்னவோ இருவருக்கும் இவரிடம் விசேஷ பிரியம் உண்டு.

### ஞாலம் பெற வரினும்...

எங்கள் தந்தையாரது குடும்பத்தினருடன் அக்காலத்தில் நாங்கள் அதிகம் பழக நேர்ந்ததில்லை. எங்கள் சிறுபிராயத்துப் பழக்கவழக்கங்களையும் குண இயல்புகளையும் உருவாக்கியவர்கள் எங்கள் தாய் தந்தையரும் மாமன்மார் இருவருமே. பெரிய தாயாரும், அரசாங்க வைத்திய சேவையில் டாக்டர் உத்தியோகம் வகித்த மூன்றுவது மாமனும் வெளியூர்களில் இருந்தார்கள். எங்கள் தாயார், அவரது சகோதரி, சகோதரர் மூவர் ஆகிய ஐவரிடத்திலும், நாங்களும் அவர்களோடு பழகிய மற்ற யாவரும், கண்ட குண ஒற்றுமை யாதெனில், தமவும் பிறவும் ஒப்பநாடி, நெடுநுகத்துப்



அமரர் வன்னியசிங்கம் தமது அருமைத் துணைவியார் திருமதி கோமதி வன்னியசிங்கத்துடனும், மூத்த மகளுடனும் உட்கார்ந்து எடுத்துக்கொண்ட ஒரு குடும்பப் படம் இது.

பகல்போல நடுவு நின்று, வடுவஞ்சி வாய்மையே மொழிகின்ற மாருத நேர்மையாகும். இது எங்கள் நால்வருக்குமே தாய்வழிப் பரம்பரைக் குணமாகக் கிடைத்தது! போதனையாலும் முன்மாதிரியாலும் போற்றி வளர்க்கப்பட்டது. அரசியலில்—அதுவும் இன்றைய இலங்கை அரசியலில்—நேர்மை ஒரு "ஒறுத்த சரக்கு" ஆகிவிட்டது. வன்னியசிங்கம் பொதுவாழ்வை—அரசியலைப் பிரவேசித்தும் ஞாலம் பெற வரினும் சீலம் தவறு நேர்மையாளராக விளங்கினர்.

### பரம்பரையின் பண்பு

உடலுழைப்பை உவந்து மேற்கொள்ளும் சுபாவம் வன்னியசிங்கம் தாயாரிடமிருந்து பெற்ற மற்ருெர் அருங்குணமாகும். இக்குணத்தில் எமக்குக் கிடைத்த பங்கு குறைவு. அந்தக் குறைப் பங்கும் சேர்ந்து [illegible] எங்கள் பிதாமகர் (வன்னித் தம்பியார்) மானிப்பாய் ஆஸ்பத்திரியில் ஆங்கில வைத்தியராகப் பயிற்றப்பட்டு அரசாங்க உத்தியோகம் வகித்துப் பாம்பனுக்கு மாற்றப்பட்டபோது பிற[illegible]த் தம்மை அனுப்ப இசையாத தாய் சொற்படி உத்தியோகத்தை உதறி எறிந்துவிட்டு உழுதுண்டு வாழ்ந்தவர்.

### உடலுழைப்பு

எங்கள் தந்தையார் உடலுழைப்பை அறியாதவர், எங்கள் மாதாமகர் விவசாயி; உடலுழைப்பிலேயே பெருமை சேர்த்தவர். தம்காலத்துச் சாதாரணத் தொழிலாளிகள் நால்வர் செய்யும் வேலையைத் தாம் ஒருவரே செய்து முடிக்கும் சுறுசுறுப்புள்ளவர் தன் தகப்பனர் என்றும், அவர் ஒரு நாளிற் செய்து முடிக்கும் வேலை இன்றைய தொழிலாளி ஒருவனுக்குக் குறைந்தது பதினைந்து நாள் கூலிக்காவது போதும் என்றும் தாயார் பெருமிதத்துடன் கூறிக்கொள்வார். மாமன்மார் மூவரும் உடலுழைப்பின்றியே வளர்ந்து வாழ்ந்தவர்கள். பெரிய தாயார் வீட்டுச் சமையலன்றி வேறு பணிகள் செய்யாதவர். ஆனல் எங்கள் தாயாரோ தன் தகப்பனரது உடலுழைப்பு முழுவதும் தான் ஒருத்தியே தனி உரிமையாகப் பெற்றவர்; உழைத்து உழைத்து உரம் பெற்ற உடல் அவருடையது.

### கன்று காலி

ஆண்பிள்ளைகள் நன்ருகப் படித்து உத்தியோகம் வகிக்க வேண்டும்; பெண்பிள்ளைகள் சிறிது படித்துவிட்டு வீட்டுப் பணிகளைச் செவ்வனே செய்யப் பயின்று சிக்கனமாகக் குடும்பம் நடத்த வேண்டும் என்பதே எங்கள் தாய் தந்தையரது இலட்சியம். அதனுல், சிறு வயதில் வயதுக்கேற்ற சிறிய உடலுழைப்புப் பணிகளைத் தாமும் தந்து அவற்றைச் செய்து முடிக்கும்படி எங்களில் எவரையுமே அவர்கள் கட்டாயப்படுத்தியதில்லை. நால்வரில் "பெரிய தம்பி" மட்டுமே தாயாருக்கு உதவியாக மாடு கன்றுகளுக்குத் தீனி தேடிப் போடுதல், நீர்காட்டுதல், நட்ட மரங்களுக்குத் தண்ணீர் வார்த்தல் போன்ற சிறு வேலைகளை விருப்புடன் மேற்கொண்டு செய்வார். பிராணிகளை வளர்ப்பதிலும் இவருக்குப் பிரியம் உண்டு.

### அவர் வளர்த்த மயில்

மாடு கன்றுகளை வளர்ப்பதை வன்னியசிங்கத்துக்குப் பத்து வயதளவில் தாயார் நிறுத்திவிட்டார். வெவ்வேறு காரணங்களுக்காக ஆடு, கோழி, பூனை, நாய் எதுவும் வளர்க்க அனுமதிக்கமாட்டார் தாயார். வீட்டில் எந்தப் பிராணியுமே வளர்த்ததில்லை. சிலகாலம் தாயாரின் அனுமதியுடன் ஒரு மயில் வளர்த்து வந்தார் வன்னியசிங்கம். துரதிஷ்டவசமாக அதுவும் தோகை முளைத்து ஓராண்டு திரம்பு முன்—ஒருமுறை இறகுதிர்த்து மறுமுறை தோகை முளைத்து அழகு நிறைவெய்துமுன்—மயிற் கால் எண்ணெய்க்காக வேட்டைக்காரரால் கொல்லப்பட்டுவிட்டது. அதன் பிறகு பிராணிகள் வளர்ப்பதில்லை. மரஞ்செடி கொடிகளை நட்டு நீரூற்றி வளர்ப்பார். உடன் பிறந்தார் நால்வருளும் இவரே பிற்கால வாழ்விலும் [illegible] தப்பாமல் தம் [illegible] பயன்மரங்களை நட்டு வளர்த்தும் விவசாயத்தை முற்றிலும் கைவிடாது பற்றி வாழ்ந்தவர்.

### மாற்று வெற்றிலையும் சாய்ப்பு வெற்றிலையும்

வீட்டு வளவில் குத்தகைக்காரர் வெற்றிலைத் தோட்டம் போட்டிருப்பார்கள்; மாற்றுப் பயிராக குரக்கனும் விளைவிப்பதுண்டு. ஓரங்களில் வாழை நட்டிருக்கும். கத்தரி வெண்டி முதலியன நடுவதுமுண்டு. தமக்கு அந்தப் பயிர்களால் லாபநட்டம் இல்லாவிட்டாலும் பழக்க வாசனையால் தாயார் அவற்றில் கரிசனை காட்டுவார். சிலசமயம் குத்தகைக்காரருக்கு பயிர்ச் செய்கை பற்றி நல்ல யோசனைகள் சொல்லிக்கொடுப்பதும் உண்டு. எங்களில் பெரிய தம்பி மட்டும்தான் எந்தக் கொல்லையில் கொழுந்து செழிப்பாக வளர்கிறது, எங்கு நோயால் அழிகிறது, எந்தக் கொல்லை நல்ல பயன் தரும், மாற்று வெற்றிலைக்கும் சாய்ப்பு வெற்றிலைக்கும் பேதம் என்ன, எந்தக் காய்கறிச் செடி துளிர்த்தது எது பூத்தது, எது காய்க்கிறது என்பதில் எல்லாம் கரிசனம் காட்டுவார். குரக்கன் பயிரிடுவது பற்றிய விவரங்களும் அவர்தான் தெரிந்து வைத்திருப்பார்.

### கொழுந்து நடுகை

கொழுந்து நடுகைக்காக வெட்டும் தினத்தில் நிறைய வேலையிருக்கும். [illegible] ஆண்டுகளாகக் கொழுந்து நடுகைக்கென்று வெட்டுவார்கள்; கழிக்கப்பட்ட நுனித்தண்டுகளை வேறுகட்ட பொறுக்கிச் சேர்த்து இலைகளை ஆய்ந்து அடுக்க வேண்டும்; நடுகைக்குரிய துண்டுகளையும் வேருகச் சேர்த்து அடுக்க வேண்டும் [illegible] முதலிய

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான்" என்பவரல்லர் வன்னியசிங்கம்

## பிழையைப் பிழையென்று ஏற்கும் பெருந்தகையாளர் அவர்

## இந்தப் பண்பே தலைவர்களுள் இமயப் பதவியை அவருக்கு ஈட்டிக் கொடுத்தது

ஏ. ஆர். ஆசிர்வாதம்

திருவாளர் வன்னியசிங்கம் காலமான பொழுது ஆங்கில வாரப் பத்திரிகையாகிய 'டிரிபியூன்' எழுதியது:"திரு வன்னியசிங்கம் ஏழையாகவே இறந்தார்" என்று. இலங்கையின் எந்த அரசியல்வாதிக்கும் கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த பாராட்டுதல் இது!

ஒரு மனிதனுகவோ, அல்லது நியாயவாதியாகவோ அல்லது அரசியல்வாதியாகவோ அவரின் எந்தத் துறையைப் பார்த்தாலும் அவரிடம் பல குணசிறப்புகளை நாம் காண முடியும். இந்தச் சந்ததியில் தமிழருக்குள் வேறு எந்த ஒருத்தரும் அடைய முடியாத உயர்வை இவர் பெற்றதின் காரணம் இவரின் இந்த குணதிசயங்களேயாகும்.

### அரசியல்வாதியின் இலக்கணம்

இருந்தும் நான் வன்னியசிங்கத்திற்கு அஞ்சலி செலுத்தும் காரணம் இதுவல்ல. தான் செய்த பிழையைப் பிழையென்று நேருக்குநேர் ஒத்துக்கொள்ளும் பண்பு இவரிடமிருந்தது. அரசியல்வாதி ஒருவன் பிழையை ஒத்துக்கொள்வதென்பது அபூர்வமான செயல். அதற்குப் பதிலாகப் பிழையை மறைப்பதில் எதிர்வாதம் செய்வான் அரசியல்வாதி. வார்த்தைகளில் திருகுதாளங்கள் நிகழும்; தட்டிக்கழிப்பதற்கு ஏற்ற வழிகள் அனைத்தும் கையாளப்படும்; தவறினால் பிழை இழைத்தது தானல்ல மற்றவர் என்று கூறிவிடுவான் அரசியல்வாதி. இவைதான் அரசியல்வாதியின் இலக்கணம்! ஆனால் வன்னியசிங்கம் இந்த ரகத்தைச் சேர்ந்தவரல்ல. அவர் பண்பாளர்!

### முக்கிய குணதிசயம்

வன்னியசிங்கம் வார்த்தெடுக்கப்பட்ட அச்சு வேறு. தனது கொள்கைகளின் உரமான நம்பிக்கை அவருக்குத் திடத்தைக் கொடுத்தது. இதனுல் தான் மேற்கொண்ட நிதானிப்புகளில் தவறு ஏற்படும்பொழுது அவர் அதை நேராகவே ஏற்றுக்கொள்ளும் துணிவையும் பெற்றிருந்தார். வார்த்தைகளில் மருட்டிவிட்டு அவர் நேரத்தைச் செலவழிப்பதில்லை. பிழையைச் சரியென்று வாதிட அவர் காரணங்கள் கண்டுபிடிக்க முற்படவில்லை; 'தன்னைத் தவறாகப் புரிந்துகொண்டார்கள்' என்று உயர் வேதாந்தம் கூறி அதில் அவர் ஒதுக்கிடம் தேடியதில்லை. அவர் பிழையை ஒத்துக்கொள்வார்; அதற்குரிய முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வார்.

இதுதான் என்றும் அன்னவரின் முக்கிய குணதிசயமாயிருந்தது.

### ஒரு சம்பவம்

1951ல் நடந்த ஒரு சம்பவம். கொழும்பு நகர சபை மண்டபத்தில் தமிழரசுக் கட்சி ஒரு பகிரங்கக் கூட்டம் நடத்தியது. மண்டபம் நிறைந்து வழிந்தது. தலைவர்கள் பேசினார்கள். அரசாங்க குமாஸ்தாக்கள் சேவை யூனியனில் ஆற்றிய பங்கிற்காகச் சில நாட்களுக்குமுன்னர்தான் நான் வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தேன். தொழிற் சங்க (திருத்த) மசோதாவிற்கு ஆதரவாக 1948ல் வன்னியசிங்கம் உட்படத் தமிழ்க் காங்கிரஸ் அங்கத்தவர்கள் வாக்களித்திருந்தார்கள். இதனுல் யூனியனின் தலைவர் என்ற முறையில் தமிழ்க் காங்கிரஸ் பாரதூரமான தவறிழைத்துவிட்டதாகவே நான் என்றும் கருதியிருந்தேன். எனவே திருவாளர் வன்னியசிங்கத்திற்குத் துண்டிலெழுதி மேடைக்கு ஒரு கேள்வியை அனுப்பினேன். 'தொழிற் சங்க (திருத்த) மசோதாவிற்கு ஆதரவாக ஏன் வாக்களித்தீர்கள்? அரசாங்க ஊழியர்களை ஏன் காட்டிக்கொடுத்தீர்கள்?"

### தலைவர் சரி செய்துவிட்டார்!

வன்னியசிங்கம் பதில் கூற எழுந்தார். கொழும்பில் தமிழரசுக் கட்சிக்கிருக்கும் ஆதரவில் பெரும்பகுதி அரசாங்க ஊழியரிடமிருந்தே கிடைப்பதால், இந்தக் கூட்டத்தில் மேற்படி ஊழியரைப் பாதிக்கும் இக்கேள்வி கேட்கப்படுவது பற்றி மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். எதுவித பிகுப்போ மழுப்பலோ இன்றித் தெட்டத்தெளிவான பதில் கூறினார்: "இவ்விஷயத்தில் நாங்கள் ஒரு பெரிய தவறிழைத்துவிட்டோம்! இந்தத் தவறை நாம் பகிரங்கமாகவே ஏற்றுக்கொள்ளுகிறோம். எங்கள் நிதானிப்பில் தவறு ஏற்பட்டுவிட்டதைக் கூறும்பொழுது நாம் வெட்கப்படவில்லை. எமக்குப் பின்புறத்தில் நடந்த ஒரு சதிக்கு நாம் பலியாகிவிட்டோம், அந்த நேரத்தில். எங்கள் கட்சித் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஒருத்தரை எங்களுக்கு முன் கொண்டு வந்து நிறுத்தினார். இவர்தான் குமாஸ்தாக்கள் யூனியனின் காரியதரிசி என்றும், மேற்படி மசோதாவின் ஷரத்துக்கள் தாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியன என்றும் கூறினார்.

### மன்னிப்புக் கோருகிறோம்

நாம் இதை நம்பினோம். இதற்குச் சாதகமாக வாக்களித்தோம். இப்பொழுது எங்களுக்குத் தெரிகிறது, எமக்குக் காட்டப்பட்டது மாயமான் என்று. அரசாங்கக் குமாஸ்தாக்களிடம் நாம் மன்னிப்புக் கோருகிறோம். எமது தவறு மிகப் பெரிது; எங்களை மன்னியுங்கள் என்றே கோருகிறோம்"

"இந்தக் கூற்றில் உண்மையிருக்கிறது என்பது தெளிவாயிருந்தது. அவர் நேர்மையாகக் கூறினர், தவறு நடந்துவிட்டது என்ற நம்பிக்கையில் திடம் தொனித்தது!

### எமது ஆசை

வன்னியசிங்கம்போல் உண்மை நிறைந்த அரசியல் தலைவர்கள் நம் மத்தியில் தோன்றுவதாக! நேர்மையுள்ளவர்கள் எம்மிடையே வளர்வதாக! அரசியல் வாழ்வின் ஆரம்பத்திலேயே இவரிடமிருந்த தைரியம் இன்னும் பலரிடம் நாம் காண்போமாக!

இந்தக் குணதிசயங்களினுலதான் இவர் உயர்ச்சி பெற்றுர். இந்த வானுயர்ந்த தலைவரையே நாம் இன்று இழந்துவிட்டோம்! இவர்போன்ற மாமலைகளையே நாம் வேண்டுகின்றோம்.

## அமுதம் குறைந்திடுமா?

—திமிலைத்துமிலன்—

தெள்ளிய வானத் திரையைவிட் டேயொளித்
திங்கள் மறைந்திடுமா?—முத்தை
அள்ளித் தெளிக்கும்க டலைவிட் டோடி
யலையுங் குறைந்திடுமா?—மலர்க்
கள்ளைப் பனிக்குநற் காவைவிட் டேதென்றற்
காற்றுத் தவழ்ந்திடுமா?—தமிழ்
உள்ளத்தை விட்டொளிர் வன்னிய சிங்க
உருவம் அகன்றிடுமா?

ஆடும் புவனம் அழியும் வரையிந்த
ஆக்கம் தடைப் படுமா?—துணை
தேடும் மனத்திடைக் காதல் எனும்புதுத்
தேக்கம் தடைப் படுமா?—புயல்
கூடிப் பெருமழை கொட்டும் வரையுமிக்
கூதல் தெளிந்திடுமா?—உடல்
ஓடி யொளிப்பினும் வன்னிய சிங்கத்
துயர்வும் அழிந்திடுமா?

பாயும் புலிசிறு கண்டெலி யோடு
பசியை யடக்கிடுமா?—இவர்
ஈயும் சலுகைகள் எங்கள் இலக்கினின்
றேணி எடுத்திடுமா?—எரி
தோயும் பொழுதினும் உள்ளம் தமிழின்
உரிமை மறந்திடுமா?—யுகம்
ஆயிரம் போகினும் வன்னிய சிங்கத்
தமுதம் குறைந்திடுமா?

## வன்னியசிங்கம் நினைவு விழா

ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மட்டுவில் வடக்கு சிறீ வேற்பிள்ளை வாசிகசாலை மைதானத்தில் வன்னியசிங்கம்—பாரதியார் நினைவு விழா பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

அமரர் கு. வன்னியசிங்கம் அவர்களின் உருவப் படத்தை தமிழரசுத்தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் திரைநீக்கஞ் செய்து வைப்பார்.

வித்துவான் பொ. முத்துக்குமாரன், புதுமைலோலன், ராசா, சங்கீத பூஷணம் வினுசித்தம்பி, வடமாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் பேச்சாளர்களாகப் பங்குபற்றுவார்கள்.

"சித்தாடை கட்டிக்கிட்டு
சிங்காரம் பண்ணிக்கிட்டு
மத்தாப்புச் சுந்தரி ஒருத்தி
மயிலாக வந்தாளாம்"

என்னும்படி பிறர் மனதை மயக்கும் வசீகரத் தோற்றம்

அளிக்க இதோ!

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட் !!

கண்ணுக்கினிய கலர்கள், கருத்திற்கினிய கச்சிதமான டிசைன்கள், கசங்காத் தன்மை, எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றது.

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட் ஒன்றே.



ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

இல்லறை வியாபாரப் பகுதி: 110 & 114, மெயின் வீதி, கொழும்பு மொத்த வியாபாரப் பகுதி: 26, கெய்சர் வீதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களக் குடியேற்றத்தை ஒரு தந்தி மூலம் தடுத்து நிறுத்திய தீரர்

## திருமலைத் தமிழருக்கு முதலிக்குளத்தைக் காப்பாற்றிக் கையளித்த காவலர்

## அந்தப் பிரதேசத்தை 'வன்னிய மாநகர்' என்றோ 'வன்னியசிங்க புரம்' என்றோ பெயரிட வேண்டும்

கோப்பாய் கோமான் வன்னியசிங்கனார் மறைந்து ஓராண்டு மறைந்தோடி விட்டது. ஆனால் அவரைப் பற்றிய நினைவு மனதில் இன்னும் பசுமையாகவே இருக்கிறது. இந்த நினைவு சாதாரண நினைவு அல்ல, அன்பும், பக்தியும் ஒருங்கே கலந்த நினைவு. அன்பு அவரது உயர்ந்த குணங்களை நினைத்து—பக்தி அவரது சிறந்த தொண்டினை யெண்ணி.

### பேட்டியா? அறிக்கையா?

பன்னிரண்டு திங்களுக்கு முன் அதிகாலை. வழக்கம் போல் யன்னல் வழியாக உள்ளே விழுந்த பத்திரிகையை கையில் எடுத்தேன். எழுத்துக்கள் கண்ணில் படுமுன், முதலில் கண்ணில் பட்டது மறைந்த தலைவரின் படம்தான் 'ஓகோ தமிழ் மக்களை வாட்டும் ஏதோவொரு பிரச்னைபற்றி அரசாங்கத்தை சாடி அறிக்கையொன்று விட்டிருக்கிறார். அல்லது பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருப்பார், அதைத்தான் பத்திரிகை, படத்தையும் போட்டுப் பிரசுரித்திருக்கிறது. இந்த எண்ண அலைகள் தான் முதலில் மனதில் ஓடின. வேறு விதமாக எப்படி எண்ண முடியும்? காரணம் வேண்டாமா? அதற்கு முன் எண்ணி ஏழு நாட்களுக்கு முன் தானே அவரை முழுப்படியாகப் பாராளுமன்ற நூல் நிலையத்திலைவத்துச் சந்தித்தேன்—பேசினேன்—பின் சிங்கத்தின் கர்ச்சனையைச் சபையிலும் கேட்டேன். அடுத்துக் கூடும் பாராளுமன்றத்துக்கு வரமாட்டேன் என்று முன் கூட்டியே தெரிந்து கொண்டவர் மாதிரி, தமது கடைசிப் பேச்சில் இடி, மின்னல், முழக்கம் இத்தனையும், குழைந்து சபையிற் பொழிந்து தள்ளினார்.

### கற்பகதரு

இவையெல்லாம் காதிலும் கருத்திலும் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கும் பொழுது பத்திரிகையில் போட்டிருந்த 'செய்தி! தலைவரின் மறைவுச் செய்தி' யென்று எண்ணிக்கூட எண்ணியிருக்க முடியுமா?

ஆனால் நடக்க முடியாதது—நடந்து விட்டது. வன்னிக் காடு இருக்க கற்பகதரு வெட்டப்பட்டு விட்டது.

மறைந்த தலைவர் வன்னியனார் தமிழ் இனத்தின் அரசியல் விடுதலைக்காக, பல காலம், பல துறைகளில் எவ்வளவோ எதிர்ப்புக்கு மத்தியில், அல்லும் பகலும் பாடுபட்டவர். அவரது அயராத உழைப்பு, ஒரு துறையில் மிகவும் நல்ல—உடனடியான-பயனை அளித்தது. அந்தத் துறைதான் குடியேற்றம். மற்ற எல்லாப் பிரச்னைகளையும் விட, தமிழ் மக்களை நேரடியாகப் பாதிக்கும் பிரச்னை இது என்பது நாம் அறிந்ததே.

### மொறவேவாவும் முதலிக்குளமும்

1958-ம் ஆண்டு அல்லை, கந்தளாய், கல்லோயாபோன்ற திட்டங்களையடுத்து, பெரிய அளவில் கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் ஒரு குடியேற்றத் திட்டத்தை உருவாக்கும் பொருட்டு, அதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருந்தது. திட்டத்தின் பெயர் 'மொறவேவா', பெயர் வித்தியாசமாக இருக்கிறதே, திட்டம் கிழக்கு மாகாணத்தில் இல்லை; வேறு எங்கோ தெற்கில் இருக்க வேண்டும் என்று தான் யாரும் நினைப்பர். உண்மையென்னவோ 'மொறவேவா' திட்டம் தமிழரது வருங்காலத் தங்கத் தகடம் என வர்ணிக்கப்படும் திருமலைக்கு அருகாமையில், பதினாறு கல் தொலைவில், திருகோணமலை அனுராதபுரப் பாதையில் இருக்கிறது. இதன் அழகான தமிழ்ப் பெயர் 'முதலிக்குளம்' ஒரு குளமும், அதனைச் சுற்றிலும் ஏராளமான முதலி மரங்களும் இருப்பதால் இந்த இடத்துக்கு இப்பெயர் காரணப் பெயராக அமைந்தது.

### சமுத்திரத்தின் தஞ்சம்

இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள சுமார் 9000 ஏக்கர் நிலம் இரண்டாயிரத்துக்குச் சற்றுக் குறைவான குடும்பங்களுக்கு 5 அல்லது 6 ஆண்டுகளுக்குள் படிப்படியாக, ஆண்டொன்றுக்கு 300 கண்டங்கள் வீதம் கொடுக்கப்படும். இங்குள்ள குளத்தை திருத்தும் வேலை முடிவடைந்ததும், வேளாண்மைக்கு வேண்டிய தண்ணீர் வசதியும் ஏற்பட்டுவிடும்.

ஏற்கனவே திருமலை மாவட்டத்தில் பல ஆயிரம் ஏக்கர் நிலம் சிங்களக் குடியேற்றத்தின் பெயரால் (அல்லை, கந்தளாய், பதவிக்குளம்) விழுங்கப்பட்டன. முதலிக்குளத்தின் கீழ் உள்ள 9000 ஏக்கரையும் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு, அப்புறம் இன்னும் பத்து, இருபது வருடங்களுக்குள், திருமலைத் தமிழர்கள் இந்து மகா சமுத்திரத்துக்குள் குதிப்பதைத் தவிர வேறு வழி இருக்காது. ஆனால் இதனையே அரசாங்கம் எதிர்பார்த்துத் திட்டமிட்ட 'சதி' செய்தது.

### சட்டம் சொல்லுவது

குடியேற்றத்திட்டம், அல்லது கிராம விஸ்தரிப்புத் திட்டம்—இவற்றின் கீழ் காணி வழங்கும் பொழுது அக் காணி வழங்கும் கிராமம் அதற்கு அருகாமையில் உள்ள கிராமங்கள் இவைகளில் வதியும் காணியற்ற நிரந்தர விவசாயிகளுக்கு மட்டும் கொடுக்கப்பட வேண்டும் என்பது காணிச் சட்டத்தில் (Land Ordinance) காணப்படும் விதியாகும். இந்த விதியை அரசாங்கம், முன் நடந்தேறிய குடியேற்றத் திட்டங்களில் அமுல் நடத்தவில்லை. ஆனால் முதலிக்குளத் திட்டத்தைப் பொறுத்த மட்டில் இந்த விதி முன்போல் அல்லாமல், கட்டாயம் அமுல் நடாத்தப்படும் என்று திருமலை அரசாங்க அதிபர் உள்ளூர் த. அ. கட்சி எம். பி. இராஜவரோதயத்திடம் உத்தியோக முறையிலும், தனிப்பட்ட உரையாடலிலும் வாக்குறுதி அளித்திருந்தார். இதை எம். பி.யும் நம்பினார்; நாமும் நம்பினோம்.

### வாக்குறுதி எங்கே...

ஆனால் அரசாங்க அதிபர், வெளியில் எங்களது கருத்துக்கு இசைவது போற் பாவனை காட்டிவிட்டு, உள்ளூர அதற்கு நேர் எதிராக அந்தப் பத்து வருடகால விதியை தளர்த்துவதில் அரசாங்கத்தோடு, குறிப்பாகச் சொன்னால் அன்றைய காணி அமைச்சரோடு, ஒத்துழைத்து, தமிழரசு ... காணிக் கச்சேரி விளம்பரம் வெளிவந்த பொழுது தான் எமக்கோடி வெளித்தது அது மட்டுமல்ல, அப்போது பிரிட்டிஷ் கடற்படைத் தளத்தில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட பல்லாயிரம் தொ-

**தங்கவேல்**

ழிலாளர்களுக்குக், காணி வழங்குவதில் விஷேச சலுகை காட்டப்படும் என்று முன்பு அமைச்சர் த. அ. கட்சி பாராளுமன்ற ஆறுக் குழுவிடம் கொடுத்த வாக்குறுதியும் விளம்பரத்தில் சேர்க்கப்படவில்லை.

### எங்கும் நிறைந்தவர்: எல்லாமறிந்தவர்

இரண்டு விதத்திலும் ஏமாற்றப்பட்டு விட்டதைக் கண்டு நாம் ஆத்திரப்பட்டோம். த. அ கட்சி வாலிப முன்னணி, திருமலை எம். பி., மற்றும் சில உள்ளூர் ஆட்சி மன்றங்கள் தனித்தனியே கடித மூலமாகவும், தந்தி மூலமாகவும் தமது எதிர்ப்பை மந்திரிகளுக்கும் காணி அமைச்சருக்கும் எடுத்துக் காட்டின. அத்தோடு இன்னொரு நல்ல முடிவையும் செய்தோம். உடனடியாகத் திருவாளர் வன்னியசிங்கத்திடம் யாழ்ப்பாணம் சென்று இது விஷயம்பற்றி—அவருக்கு இந்தத் திட்டத்தின் முழுவரலாறும் தெரிந்திருந்தது—காண்பதென்பதுதான் முடிவு. அதன்படி நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். அன்று சித்திரை வருடப் பிறப்பு. தலைவரின் வீடு பூட்டிக் கிடந்தது. சரி, சிறிது பொறுத்து வருவோம் என்று யாழ்ப்பாண நகர்ப் பக்கமாகப் போய் ஒரு புத்தகக் கடைக்குள் நுழைந்தேன். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல, நான் உள்ளே நுழைவதற்கும், வன்னியனார் கையில் பல பத்திரிகைகளோடு வெளியில் வருவதற்கும் சரியாக இருந்தது.

### அறிந்ததுதான்!

கண்டதும் 'இந்து வருடப் பிறப்பு, சில உறவினர் வீட்டுக்குப் போகக் குடும்பத்தோடு புறப்பட்டு போய்க்கொண்டிருக்கிறேன்' என்றார். நான் போன விஷயத்தை 'மள மள' வென்று கொட்டி முடித்தேன். அவற்றையெல்லாம் தனது 'டயரியில்' குறித்துக்கொண்டு "இவற்றை நான் ஓரளவு எதிர்பார்த்தவன்தான். இப்போது நான் உறவினர் வீட்டுக்குப் போகவில்லை. நேரே தபால் நிலையத்துக்குப் போய் காணி அமைச்சுக்குத் தந்தி கொடுத்துவிட்டு, இரண்டொரு நாளில் கொழும்பு போய் அமைச்சருடன் இதுபற்றி வாதாடுவேன்" என்றார்.

### மீண்டும் விளம்பரம்

திருமலை திரும்பியவுடன் நல்ல செதி என்னைக் காத்திருந்தது. காணி அமைச்சு தந்தி மூலம் அரசாங்க அதிபரை, முதலிக்குளத் திட்டம்பற்றி மேற்கொண்டு எது விதமான நடவடிக்கை

(14-ம் பக்கம் பார்க்க)



பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கையைத் தொடர்ந்து மட்டக்களப்பு மைதானத்தில் காலஞ்சென்ற ராஜேந்திரன் அரங்கில் நடைபெற்ற மாபெரும் மாநாட்டு மேடையில் அமரர் கு. வன்னியசிங்கம் ஆழ்ந்த சிந்தனையோடு அமர்ந்து முக்கிய நிர்மாணம் ஒன்றினை ஆராயும் காட்சி.

# சேவையின் மூலம் மக்கள் தம் சிந்தையெல்லாம் குடிகொண்ட கோமான்

## அழைத்த போதும் அழையாத போதும் அன்புடன் வந்து அரும்பணியாற்றிய அண்ணல்

## வன்னியர் நினைவு மட்டக்களப்பில் இன்னும் பசுமையாகவே இருக்கின்றது

அமரர் கு. வ. அவர்களை நினைக்கும் போதெல்லாம், கிழக்கிலங்கை மக்கள் மீது அவருக்கிருந்த பற்றுதலும், தன்னந்தனியாக மட்டக்களப்பு முதல் பிரதிநிதி திரு. செ. இராசதுரை கிழக்கிலங்கையில் தமிழரசு விதையை விதைக்க முன்னின்றபோது அவருக்கு உறுதியிக்க ஆதரவு அளித்து அவர் ஆற்றிய வியப்புமிக்க பணியும் எனது மனக்கண் முன்னே தோன்றுகின்றன.

### புனித சித்திரம்

சுமார் ஆறேழு ஆண்டுகளாக 'சுதந்திரன்' 'வீரகேசரி' பத்திரிகைகளின் மட்டக்களப்பு மாவட்ட நிருபராக நான் பணியாற்றி வருவதனால் அமரர் கு. வ. மட்டக்களப்புக்கு வரும்போதெல்லாம், அவரைச் சந்தித்துப் பழகும் வாய்ப்பும், நட்... [illegible] ...ருணக்களை உணரும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்து வந்தது. ஒவ்வொரு தடவையும் அவர் கிழக்கிலங்கைக்கு வந்தபோதெல்லாம் அவர் கலந்துகொள்ளும் சகல அரசியற் கூட்டங்களிலும், மகா நாடுகளிலும், விழாக்க-

**ம. த. லோறன்ஸ்**

ளிலும் நானும் உத்தியோக பூர்வமாகவும் அனுதாபி என்ற முறையிலும் கலந்து கொண்டிருப்பதனால், அமரர் கு. வ வைப் பற்றி ஒரு விரிவான-புனிதமான சித்திரமே எனது மனத்திரையில் பதிந்துள்ளது.

### புன்சிரிப்பும் சாதுரியமும்

அமரர் கு வ. பேசிய அமர வாக்குகளையும், ஆணித்தரமான விவாதங்களையும், நகைச்சுவை மிக்க ஆழமான கருத்துக்களையும், எனது பேனா சிறைபிடித்த பக்கம் பக்கமாக செய்திக் கோவைகளை எழுதியுள்ளது. அமரர் வன்னியசிங்கத்தின் பலவித முக பாவங்களையும், நடவடிக்கைகளையும் எனது புகைப்படக் கருவி தன்னுள் அடக்கிச் செய்திப்படங்களாக நேயர்களுக்கு அளித்துள்ளது அந்தந்த நேரத்தில் பத்திரிகை நிருபர் என்ற முறையில், நான் கேட்ட பலவித சிக்கலான கேள்விகளுக்கெல்லாம் அவர் தமக்கே உரியதான புன்சிரிப்புடன் மிக்க சாதுர்யமாக பதிலளித்த அவரது ஆற்றலையும் அழகையும், திறமையையும் எப்படித்தான் மறக்கமுடியும்?

### இதயத்தில் இடம் கொண்டார்

அமரரின் ஆற்றலில் கட்டுண்ட கிழக்கிலங்கை மக்கள், அவரது கட்சிப்பிரசார வெறிக்குப் பலியாகிய மீன் பாடும் தேனாட்டு மக்கள், தமிழரசு இலட்சியத்தைச் சார்ந்த மட்டக்களப்புத்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1960 செப்டம்பர் மாதம் 18-ந் தேதி

194 எ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.

# தொடர்ந்து எதிர்க்கத் தயாராவோம்

திருகோணமலையில் கடந்த வாரம் தமிழ் பேசும் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பட்ட ஒரு பொது வரவேற்பில் கலந்துகொண்டு பேசுகையில் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பின்வருமாறு கூறினார்:

"நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். ஒன்று பட்டுத் தொடர்ந்து எதிர்க்க வேண்டும். போராட்டத்தில் கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராயிருக்க வேண்டும். எவர்மீதும் எங்களுக்குப் பகைமை கிடையாது. நாம் அழிந்து போகாது நம்மை நாம் பாது காத்துக் கொள்ளவே நாம் போராடுகிறோம்"

மேற்படி கூற்றில் "ஒன்று பட்டுத் தொடர்ந்து எதிர்க்க வேண்டும்" என்ற வாசகத்தை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தங்கள் தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஏனென்றால் சிறீமாவோ அரசாங்கம் ஒரு புறம் தமிழ் பேசும் மக்களை அரவணைத்துக் கொள்வதுபோல் வெளிக்குக் காட்டிக்கொண்ட போதிலும், மிகவும் பாரதூரமான விளைவுகளையுடைய செயல்களை மறுபுறம் செய்வதற்கு முனைந்து கொண்டு நிற்கிறது. உதாரணமாக, ஆட்சி மொழியை ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு அதிவேகமாக மாற்றுவதைக் குறிப்பிடலாம்.

அரசியல் ஆட்சியும், நிர்வாகமும் சிங்களத்தில் மட்டுமே நடைபெறும் என்று அரசாங்கம் செயலாற்றத் தொடங்கினால், ஆட்சித் தொடர்பைப் பொறுத்தவரையில், தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒரு நொடிப் பொழுதில் கல்வி அறிவோ, படிப்பு வாசனையோ அற்ற நிரட்சர குக்ஷிகளாக்கப்பட்டு விடுவர். ஜனநாயக தத்துவத்துக்கு முற்றும் முரணான இச்செயல் அக்கிரமமும் அநியாயமும் நிறைந்ததாகும்.

அது மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான தமிழ் உத்தியோகத்தர் இராவோடிரவாக வேலையற்றுப் போக வேண்டியவராவார்கள். எதிர்காலத்தில் தமிழ் வாலிபர்கள் அரசாங்க சேவையில் நுழைய முடியாதவர்களாவார்கள்.

இந்தப் பேராபத்தை எதிர்த்துப் போராடத் தமிழ் பேசும் மக்கள் திரண்டெழ வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

எனவேதான் தமிழரசுத் தந்தை "நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்; ஒன்று பட்டுத் தொடர்ந்து எதிர்க்க வேண்டும்; போராட்டத்தில் கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராயிருக்க வேண்டும்" என்று திருமலையில் வைத்துச் சூசகமாக எச்சரிக்கை விடுத்துள்ளார் போலும்.

ஒன்று பட்டு எதிர்த்துப் போராடுவது என்றால், எப்படி எதிர்ப்பது? எந்த ஆயுதத்தைக் கொண்டு போராடுவது?

கல்லையும் செம்பையும் ஆயுதமாக உபயோகிக்க ஆரம்பித்த மனிதன், அம்பையும் வில்லையும் தாண்டி, இரும்பையும், சுடு படைக்கலங்களையும் பிரயோகித்து இன்று அணுவாயுதங்களையும், ஏவாயுதங்களையும் ஏவக் கொண்டிருக்கிறான். எனினும் இவற்றையெல்லாம் விட வலிமை வாய்ந்த ஆயுதம் பிறிதொன்றிருக்கிறது. அந்த ஆயுதத்தின் முன்னால் இந்த ஆயுதங்கள் எல்லாம் தூசிக்குச் சமானம். அந்த ஆயுதந்தான் திடசித்தம், மனஉறுதியோடு கூடிய அஹிம்சா ஆயுதமாகும்.

அந்த ஆயுதத்தின் அற்புத சக்தியைப் பற்றிச் சென்ற வாரம் கொழும்புக்கு வந்திருந்த இந்திய பாதுகாப்பு அமைச்சரான திரு வி. கே. கிருஷ்ண மேனன் வெகு அழகாக எடுத்துரைத்தார்.

அவர் கூறினார்: "அடக்கு முறையையும், ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடுவதற்கு திடசித்தத்துடன் ஏகோபித்து எழுந்து நின்று 'முடியாது' என்று ஒரே குரலில் கூறுவதைப் போன்ற அதிவலிமை வாய்ந்த ஆயுதம் வேறொன்று கிடையாது. இந்த மகத்தான ஆயுதத்தைப் பிரயோகிக்கத்தான் மகாத்மா காந்தி எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அதைக் கொண்டே தாங்கள் மாட்சிமையும் வல்லமையும் பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெற்றியீட்டினோம். வீர தளபதிகளின் பரம்பரையில் காந்திஜியும் இடம்பெறத் தக்கவர். உண்மைத் தளபதி தன் கைவசமுள்ள படைக்கலத்தில் வலி மிகுந்ததையே தக்க தருணத்தில் பயன்படுத்துவான். அதன் பிரகாரம் காந்திஜீ பயன்படுத்திய ஒப்புயர்வற்ற ஆயுதம் 'சாத்வீக எதிர்ப்பு' என்ற ஆயுதமாகும்"

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களும் திரு. கிருஷ்ண மேனன் கூறியுள்ள 'சாத்வீக எதிர்ப்பு' என்ற உன்னத ஆயுதத்தைப் பிரயோகித்தே தங்கள் உரிமைப் போராட்டத்தை நடத்த வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

ஒரு இனம் சுதந்திர தாகம் உடையதாகத் தலைநிமிர்ந்து நின்று 'முடியாது; நாம் ஒருபோதும் அடி பணியமாட்டோம்' என்று சொல்லக் கூடிய நெஞ்சுறுத்தத்தையும் ஓர்மையையும் பெற்றால் உலகில் உள்ள எந்த சக்தியும் அதை நசுக்கவோ, வெற்றி கொள்ளவோ முடியாது. சரித்திரத்தின் பொன் ஏடுகள் புகட்டும் பாடம் இது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் சிங்கள மொழி ஆதிக்கத்தைத் தகர்க்க வேண்டியிருக்கிறது. தமிழ்ப் பிரதேசத்தை விடுவித்து அங்கு சமஷ்டிக் கூட்டாட்சியை அமைக்க வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு அரிய சாதனைகளையும் ஆற்றுவதற்குத் தமிழரசுத் தந்தையின் ஆணைப்படி நாம் விழிப்புடனிருந்து, ஒன்றுபட்டுத் தொடர்ந்து எதிர்க்கத் தயாராவோம்.

# WHAT YOUR COUNTRY EXPECTS OF YOU

C. Vanniasingam, Esqr B. A. (Lond), Advocate, Mariddapuram.

IN a magazine intended for students I would have preferred to write in Tamil so that even students of the lower forms could understand more readily. But as I was requested to write a few lines in English, I do so. For the reasons again, that the magazine is a students' magazine I do not want to say anything that may be considered controversial.

In a country whose Governor sees nothing intrinsically wrong about nepotism, one could not hope to enter the *Government Service*, which has been described "as *the only industry in Ceylon*," unless he can wield a considerable amount of influence. The great majority of students will therefore have to think what they would do in life on the completion of their education.

The days have passed when every man who had a decent English education could count on being employed on what is normally considered a good job. But at the present time education can guarantee only one thing and that is an educated man will be a man with a certain amount of knowledge. Socrates had preached the doctrine that "*knowledge is virtue*." There is also a saying that '*knowledge is power*' But one knows as a matter of experience that virtue and knowledge do not always go together. Sometimes knowledge is applied for the furtherence of evil. Similarly it is also not correct to say that "knowledge is power." One should apply his knowledge before he can convert his knowledge into power. In other words, knowledge is only an aid to power.

As you are all being given the necessary knowledge, I propose in these few lines to tell you briefly how you should set about to utilise it. If you utilise your knowledge properly, then you would have almost done what the country expects of you.

Any man should not be a drag in society but should pull his own weight. That is, each able bodied person should be able to earn for his own sustenance by all lawful and moral means at his disposal without being dependent on others. At least to a certain extent unemployment in the present day is due to the fact that educated youth feel it below their dignity to work as farmers, traders or labourers. They do not want to venture way on new lines of industrial enterprise. But if one is determined to keep himself self-supporting without of course disobeying the laws of morality and the laws of the state he could easily live up to that principle.

But man does not live by bread alone. It is also necessary that you should as a social being try to make your contribution to the advancement of society. It may be work for the advancement of religion, or rendering social service, temperance, mass education or any other similar activity which is useful to society.

In addition to these one shall imbibe a spirit of toleration towards others. This would be absolutely essential for any democracy. One should have a *team spirit* and one should be able to co-operate with another in the achievement of a common object. One should also be able to take a defeat in the proper spirit. It is all these that I summed up in the word "*toleration*". If this principle of toleration and co-operation is acted upon by you all, then there is hope for the future. More than anything else lack of mutual trust and self confidence have resulted in the backwardness of the people of this country in several fields.

If one adopts these as the rules for his life, then he will be a good and useful citizen and he would have done for his country what it expects of him.

That your elders have failed in any or all of these matters is not any reason for you to refrain from trying to live up to that ideal. Where they have failed it may still be your glory to succeed.

13.4 1940

இருபது வருடங்களுக்கு முன்னர் மாவிட்டபுரத்து மாணவ மாணவர் கழகத்தாரால் வெளியிடப்பட்ட மாணவ மாணவன் என்ற வெளியீட்டில் அமரர் வன்னியசிங்கம் எழுதிய ஆங்கிலக் கட்டுரை இது. இதன் தமிழாக்கம் அடுத்த வார சுதந்திரனில் இடம் பெறும்.

மேற்படி வெளியீட்டின் அப்போதைய ஆசிரியராக விளங்கிய திரு எம். எஸ். சிதம்பரப்பிள்ளை இக்கட்டுரை பொதிந்த இதழைப் பொன்னேபோல் பாதுகாத்து வைத்திருந்து இப்போது பிரசுரத்துக்கு உதவினார்.

# ஆசிரியர் சங்கங்கள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதை எதிர்ப்பதோ ஆதரிப்பதோ என் நோக்கம் அல்ல. அதுபற்றி ஆசிரியர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கக்கூடிய அளவிற்கு இன்னும் நிலைமை தெளிவாகவில்லை என்பதே என் கருத்தாகும். உரிய சட்டங்கள் வெளியான பின்னர் தான், சாதகபாதகங்களை ஆராய்ந்து இது சம்பந்தமாக எதுவித தீர்மானத்துக்கும் நாம் வரக்கூடியதாக இருக்கும்.

## பாரதூரமான விளைவுகள்

மேலும் இது ஒரு பாரதூரமான விஷயம். எந்த ஆசிரியர் சங்கமும் தன் பொதுச் சபையைக் கூட்டிப் பரந்த அடிப்படையில் ஆழ்ந்து ஆராய்ந்து அபிப்பிராயம் வெளியிட வேண்டிய விஷயம். திரு. வ. நடராசாவின் தலைமையில் போதிய அனுபவம் அற்றவர்களும், இன்றைய அரசியல் சிக்கல்கள் விளங்காதவர்களுமான இருவர் பேரும் ஒரு பெண்மணியும் கூடித் தீர்மானித்துச் சிறுபிள்ளைத்தனமாக அறிக்கை வெளியிடுவது பெரிய பாரதூரமான விளைவுகளுக்கு வழிகோலுவதாகும். 'பிள்ளை ஆறைப் பெண்ணுக்கு' என்பு மாமநாதன் என்று பெயரிட்ட' கதையாக இருக்கிறது அவசரப்பட்டுக் கைகட்டிக்கொண்ட இச் செயல்.

தாய்ச் சங்கமான அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் இவ்வாறு நடை... [illegible] ...கெனறு பின்வரும் தீர்மானத்தை முன் அறிவித்தல் செய்திருக்கிறது:

## தீர்மானம்

"அந்நியராட்சிக் காலம் முதல் இன்றுவரை கல்வித் தொண்டும், சமயப் பணியும் புரிந்து வரும் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் தேசிய மயமாக்குவதனுல் கல்வித் தரமும், மத பகுதிகளும் குறைந்து நடுவீதிப் போக்கான நிலைக்கு இட்டுச் செல்லப்படக் கூடுமாதலால் இவ்விஷயத்தைப் பற்றி அரசாங்கம் தீர்க்கமாக ஆலோசனை செய்ய வேண்டுமென இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது"

## தகப்பன் சாமித்தனம்

தலைச்சங்கத்தில் மேற்குறிப்பிட்ட தீர்மானம் ஆலோசனைக்கு வருகையில் கிளைச் சங்கம் தலையை முந்திக் கொண்டு அபிப்பிராயம் வெளியிட்டது 'தகப்பன் சாமித்தனமாகும்'. தலையிருக்க வாலாடும் இத்தச் செயலுக்குத் தாய்ச்சங்கம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் கையேற்கும் விஷயத்தில் தாய்ச் சங்கம் கூட அவசரப்பட்டு அபிப்பிராயம் வெளியிடுவது சரியென்று எனக்குத் தோன்றவில்லை இவ்விஷயத்தைப் பின்போட்டு, பாடசாலைகளை கையேற்கும் சட்டவிதிகள் வெளியான பின், அவை ஆசிரியர்களையும், மாணவர்களையும், சமுதாயத்தையும், இனத்தையும், மொழியையும் எப்படிப் பாதிக்கின்றன — அல்லது பாதுகாக்கின்றன என்பவற்றை ஆராய்ந்து பின் ஒரு சமயத்தில் தீர்மானம் நிறைவேற்றலாம் இதுவே விவேகமான செயலாகும்.

## முதுகில் குத்துவதா?

மற்றுமொரு விஷயம், சரியாகவோ தவறாகவோ தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவம் பெற்ற அரசியல் கட்சிகளும், பிரதிநிதிகளும் அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதை எதிர்க்கின்றன. அப்படி அவை எதிர்ப்பதற்கு நாம் அறிய முடியாத, நமக்குப் புரியாத அரசியல் சூட்சுமங்கள் ஏதாவது இருக்கக்கூடும். அவை விளங்காமல்— அவர்கள் எதிர்க்க தமிழ் ஆசிரியர்களாகிய நாம் ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றுவது, தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்ப்பியக்கத்தைப் புறமுதுகில் குத்தி வீழ்த்தும் இழிசெயலாக மதிக்கப்படலாம். இந்தச் செயலை அவசரப்பட்டுச் செய்த பழி தமிழாசிரியர்களைச் சேர வேண்டுமா என்பதைச் சிந்திக்கும்படி வேண்டுகின்றேன்.

மேற்கண்டவாறு வித்துவான் இ. சி. சோதிநாதன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்வீக எதிர்ப்பு, பொதுமக்கள் அபிப்பிராயம்

## இவையே பலமிகு ஆயுதங்கள்

### நாடு வளர்ச்சி பெற எமக்கு நிம்மதி தேவை

### கோஷ்டிப் பிரிவினைகளில் இந்தியாவிற்கு அக்கறை கிடையாது

ஆசிய ஆபிரிக்க நாடுகளில் ஜனநாயகம் வளர்ந்த படிகளை சரித்திர விபரங்களுடன் எடுத்துப் பேசினார் மேனன். தொடர்ந்து அவர் கூறினார்:

"சுதந்திரப் போராட்டத்தில் துண்டுகோலாக இருந்தவர் காந்திஜி. "சாத்வீக எதிர்ப்பு" என்பதின் உண்மைத் தத்துவத்தை அவர் மக்களுக்கு விளக்கினார். சிறந்த தளபதி தன்வசமுள்ள வலிமிக்க படைக்கலங்களையே களத்தில் பிரயோகிப்பான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க எங்களிடம் வெடி மருந்து, விமானங்கள், டாங்கிகள் ஆகியவை இருக்கவில்லை. இருந்தும் எவராலும் மடக்க முடியாத மாபெரும் ஆயுதக் குவியலைக் காந்திஜி எமக்குக் கண்டுபிடித்தார். அதுவே, எத்துணை இராக்ஷஸ எதிரிக்கும் (பணிந்து போக) "முடியாது" என்று சொல்லும் எமது திட சித்தம்! சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை அடிபணிய வைத்தது இந்த ஆயுதம்.

இந்திய சுதந்திரத்தைத் தொடர்ந்து ஆபிரிக்காவிலும் விழிப்பு ஏற்பட்டது. இன்று சுமார் 20-க்கு மேற்பட்ட நாடுகள் சுதந்திரம் பெற்றுவிட்டன. ஆபிரிக்காவிலே இங்கேயுள்ள பல அரசாங்கங்கள் சீர் இல்லாதிருக்கின்றன. உண்மைதான். ஆனால் என்ன குறைபாடுகள் தானிருந்தாலும் அவை எங்கள் அரசாங்கம். அதுவே எமக்கு வேண்டும், அதுவே எமக்குப் பெரிது.

இன்று இந்தியா சுதந்திர நாடு. சுமார் 40 கோடி மக்களுக்கு நாம் உணவு, உடை, வீடு, கல்வி வசதிகள் அளிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். எனவே எமக்கு நிம்மதி தேவை. எனவேதான் நாம் வல்லரசுக் கோஷ்டிகளுடன் பக்கம் சாய்வதில்லை. எம்மைச் சிலர் "நடு நிலைமை வாதிகள்" என்று (குறைவாக) கூறிக்கொள்ளுகிறார்கள். நாம் நடுநிலைமைவாதிகளென்றால் யாரோ இருவர் யுத்தஞ் செய்கிறார்களென்றல்லவா கருத்து. இத்தகைய யுத்த கோஷ்டிகளில் எமக்கு அக்கறையில்லை. இவர் பக்கமோ அவர் பக்கமோ நாம் சாய விரும்பவில்லை. எனவே நாம் எம்மைப் 'பக்கம் சாயாதவர்கள்' என்று கருதுகிறோம். உலக பிரச்சினைகளின் தராதரத்தைப் பொறுத்து நாம் நீதியின் பக்கம் மாத்திரமே சார்ந்திருப்போம்.

உலகில் வலிகுறைந்த நாடுகளுக்கு இடமில்லை என்பது தவறு. உலக அபிப்பிராயத்தை உருவாக்குவதில் இந்நாடுகளின் பணி மிகப்பெரிது. சூயெஸ் நெருக்கடி போன்ற பற்பல கட்டங்களில் (வலி குறைந்தவர்களின்) பொது அபிப்பிராயம் சந்தர்ப்பத்தின் போக்கையே மாற்றியிருக்கிறது. உலக அபிப்பிராயம்தான் சைப்பிரஸ் கிரீஸுடன் சேர வேண்டுமென்ற பெரும்பான்மைக் கிரேக்க—சைப்பிரியர்களின் பிடியைத் தளர்த்திற்று. சைப்பிரஸிலுள்ள சிறுபான்மைத் துருக்கிய—சைப்பிரியர்களின் விருப்பிற்கு மாறாக, சைப்பிரஸ் கிரீஸுடன் சேர வேண்டுமென்று பெரும்பான்மைக் கிரேக்க—சைப்பிரியர்கள் சுதந்திரமடைந்தவர்களே! நீங்களே இதை விரும்ப மாட்டீர்களென நான் அறிவேன்; அதற்கு உங்கள் நாட்டிலும் ஏற்ற காரணங்கள் இருக்கின்றன அல்லவா?

பொதுமக்கள் அபிப்பிராயமே இன்று பிரமாண்டமாக விளங்குகிறது. இல்லாவிட்டால் அமெரிக்காவிலும் ருஷ்யாவிலும் குவிந்திருக்கும் அணு ஆயுதங்களை எங்கள் தலையிலும் தங்கள் தலையிலுமே போட்டுக் கொள்வதை வேறென்ன தடுத்து வைத்திருக்கிறது?

## என் தம்பி....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்ந்து எடுத்து அடுக்க வேண்டும்; வெற்றிலை அடுக்குகளைச் சேர்த்துக் கட்டாக அமைத்து விற்பனைக்குத் தயாராக்க வேண்டும். அடி இலை நீக்கப்பட்டு இரண்டு இலைகளுடன் உள்ள அண்டை எடுத்து, தண்டின் தலையும், முளை தோன்றும் போது தளிர் முளையும் வெயில்பட்டுக் காயாமற் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, கீழ் இலையின் நடு நரம்பில் தண்டு பொருந்தும்படி கீழ் இலையைக் காம்பு முறியாதபடி பக்குவமாக நேரே நீட்டி, மேல் இலையையும் காம்பு முறியாதபடி வளைத்து மற்ற இலைக்கும் தண்டுக்கும் குறுக்கே வைத்து அவை இரண்டையும் சுற்றிச் சுருட்டிக் கட்ட வேண்டும். கட்டு 'பொட்டணி'க் கட்டாக இருக்கலாகாது.

இப்படி மூவாயிரம் நாலாயிரம் என்று கொழுந்து கட்ட வேண்டியிருக்கும். அண்டை அயல் வீடுகளில் ஆயிரம் இரண்டாயிரம் என்று கொடுத்துக் கட்டுவிப்பார்கள். தாயாருக்கும் ஒரு பங்கு வரும். பெரும்பாலும் தாயாரும் பள்ளிக்கூடம் இல்லாத வேளையில் மூத்த மகனும் அந்த வேலையில் ஈடுபடுவார்கள், வைமயம் மற்றப் பிள்ளைகளும் சேர்ந்து கொள்வார்கள். வந்த கொழுந்து முழுதும் கட்டி முடிக்க வேண்டும் என்று நியதி இல்லை, பொழுதுபட்டதும் கட்டிய கொழுந்தையும் கட்டாமலிருப்பதையும் எடுத்துப் போய் குறைவேலையை முடிக்க வேறு ஏற்பாடு செய்து கொள்வார்கள். மறுநாள் குழிபறித்துக் கொழுந்தைக் குழியிலிட்டு மண் தள்ளி மூடி வைத்து விடுவார். சந்தைக்கு எடுப்பிக்கும்பொழுதும் வன்னியசிங்கம் "கொழுந்து போடப்" போய்ச் சேர்ந்து கொள்வார். சிலவேளைகளில் மற்றவர்களும் சேர்வதுண்டு.

### குடும்பப் பொதுப்பணி

எங்களுக்குரிய பயன் மரங்களான தென்னை மா, பலா, எலுமிச்சை ஆகியவற்றில் கூட மற்ற மூவருக்கும் கவனம் செல்லாது. வன்னியசிங்கம்தான் தேங்காய் பார்த்து எடுத்து வருவார். பலாக்காயை அடிக்கடி தட்டிப் பார்த்துப் பழுத்தால் அறிந்து சொல்வார். பன்னிரண்டு வயதுக்குமேல் தாமே பழுத்ததைப் பக்குவமாக இறக்குவார்; மாங்காய் அணில் கொந்தி விழுந்ததை எடுத்து வந்து கடிவாய் நீக்கித் தோல் சீவி அரிந்து ஆளுக்கொரு துண்டு கொடுத்துத் தீர்வார்; மாங்காய் பிடுங்குவார்; பழுக்க வைப்பார்; பழுத்தவற்றைத் தெரிந்தெடுத்து மேசை மேல் வைப்பார். இப்படியான குடும்பப் பொதுநலப் பணிகளில் ஈடுபாடு காட்ட வழமை பிற்காலத்தில் ஈழத் தமிழர் சமூகத்தின் பொதுநலப் பணியில் ஈடு எடும் தியாகமுமாகப் பரிணமித்தது எனலாம்.

(தொடரும்)

## குதூகலிப்பதற்கு இன்னும்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்ன இருக்கிறது? நீங்கள் எங்களைப் பாராட்டுவதற்கும் என்ன இருக்கிறது?

### பதின்மூன்றில் ஒன்று

சுதந்திரக் கட்சி எமது பிரச்சினைகளை ஒரு புதிய கோணத்திலிருந்து நோக்குகிறதென்பது உண்மைதான். இதற்குரிய பல குறிகளை நாம் காணுகிறோம். சிம்மாசனப் பிரசங்கத்தைத் தமிழிலும் நிகழ்த்தியதும், திருகோண்டயானைப் பாராளுமன்றத்திற்கு நியமனம் செய்ததும் நாம் வரவேற்க வேண்டிய சமிக்ஞைகளே. ஆனால் இவையிரண்டும் எங்கள் கட்சியின் குறிப்பிடக்கூடிய பெறுபேறுகளாகிவிட முடியுமா? மலைநாட்டுச் சகோதரர்களின் எண்ணிக்கையின்படி அவர்கள் பிரதிநிதிகள் 13 பேர் இன்று பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியவர்கள். ஆனால் தொண்டமான் ஒருவர்தான் நியமனம் பெற்றிருக்கிறார்! இத்துடன் எமது பணி முடிந்துவிட்டதென்று நாம் விழா நடத்த முடியுமா?

### நம்பிக்கை

நம்பிக்கையூட்டும் சமிக்ஞைகளாக பாராட்டுவதற்கு இருக்கிறது என்று கூறினேன். சபையில் பி. டி. சில்வா சிம்மாசனப் பிரசங்கத்தின்போது பாராளுமன்றத்தில் நிகழ்த்திய பேச்சும் அச்சமிக்ஞைகளில் ஒன்றாகும். நல்லவை நடக்கும் என்ற நம்பிக்கையை இப்பேச்சில் நாம் காண முடிகிறது.

இவை ஒருபுறமிருக்க, எமது முன் அபாயங்கள் இல்லாமலுமில்லை. ஆட்சி மொழி ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு வேகமாக மாற்றப்படுவது இவ்வாபத்துக்களில் மிகப்பெரியது. இவ்வாறாகும் "சிங்களத்தில் மாத்திரமே" நிகழும் என்று அரசாங்கம் செயலாற்றத் தொடங்கினால் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒரு நொடியில் கல்வியறிவற்றவர்களாகி விடுவார்கள். அத்துடன் ஆயிரக்கணக்கான தமிழ் உத்தியோகத்தர்கள் இரவோடிரவாக வேலையற்றுப் போக வேண்டியும் ஏற்படலாம். அத்துடன் தமிழ் பேசும் மக்களை ஒழித்துக் கட்டுவதில் தீவிர வகுப்புவாதச் சக்திகள் இன்னும் இயங்கி வருகின்றன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

### தயாராயிருங்கள்!

இந்த நிலைமையில் நாம் மகிழ்ந்து கொண்டாட முடியுமா? நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்; ஒன்றுபட்டு, தொடர்ந்து எதிர்க்க வேண்டும்; போராட்டத்தின் கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராயிருக்க வேண்டும்.

எவர் மீதும் எங்களுக்குப் பகைமை கிடையாது. நாம் அழிந்து போகாது எம்மைப் பாதுகாக்கவே நாம் போராடுகிறோம்.

பெருமை மிகு சாதனை

எமது சாதனைகளில் ஒன்று பற்றி நாம் பெருமைப்பட முடியும். கிழக்கு, வடக்கு மாகாணங்களை அமைதியின் ஓரே கொடியின் கீழ் ஒன்று படுத்திவிட்டோம்! இந்த ஒற்றுமையை நாம் நிலைக்கச் [illegible] வேண்டும்.

### பெரியார்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கழக மண்டபத்தில் நிகழுகிறது.

மலைநாட்டுப் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பங்குபற்றுவதாக அறியவருகிறது.

கூட்ட முடிவில் ராஜ் நகைச் சுவை நாடக மன்றத்தினரால் "மூச்சை விடு; பேச்சை விடாதே" என்ற நாடகமும் நடிக்கப்படும்.


### அறிவித்தல்

மணியோடர், தந்தி மணியோடர், காசுக் கட்டளைகளின் மூலம் பணம் அனுப்பிவைப்பவர்கள், கிழக்கண்ட விலாசத்திற்கே அனுப்பி வைக்க வேண்டுமென இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

"மானேஜர்
சுதந்திரன்,
கொழும்பு"

விற்பனையாகிறது!

அமரர் வன்னியசிங்கம் நினைவு மலர்

"தியாகமாமலை"


கவர்ச்சியான மூவர்ண அட்டைப் படமும், புகைப் படங்களும் தமிழரசுத் தந்தையின் முன்னுரையும் இடம் பெறுகின்றன.

தனிப்பிரதி விலை ரூபா 1-00.

விபரங்களுக்கு கீழ்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

கிடைக்குமிடம்:-

எஸ். நடராஜா,
"சத்தியஸ்தன்"
மல்லாகம்.



சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச் சிறந்தவை

கொழும்பு கொமேர்ஷல் கொம்பனி லிமிட்டெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

C 916

அரசியல் நாடகம்

# வன்னிய(ர்)சிங்கம்

கரிகாலன்

கற்பனையிலேயெழுந்த நவீன காலம். ஈழநாடு இரு இராச்சியங்களாக இருந்த நேரம். சிங்கநாடு ஆண்டிருந்தான் சிலுக்கன் ஒற்றையாட்சி. அவனுக்கு ஆதரவாக நின்றனர் அராசுருசநபெளத்தமும், அமைச்சன் வருப்புவாதமும் அந்நாளில் தமிழ்நாட்டிலே......

காட்சி 1

அரியணையிலிருக்கின்றுன் மன்னன் மக்களொளி. அரசகுரு பீடத்திலே அமர்ந்திருக்கிறுர் தமிழ்ச் செல்வம்—

மக்: அவையோர்களே, குருதேவரே! காவிமுகக் களத்திலே எங்கள் அமைச்சர் சிங்கம் காட்டிய வீரமும் கடமையுணர்ச்சியும் மறக்கக்கூடியதன்று. ஆகவே அமைச்சர் சிங்கத்தையே எங்கள் தளபதியாகவும் நியமிக்கின்றேன். சரிதானே குருதேவா!

தமிழ்: பொருத்தமான செயல்-காவிமுகப் போராட்டத்திற்கு சுராண்டுகட்குப் பின்னர்தான் இதனைச் செய்ய முடிந்ததே என்பது துரதிருஷ்டமானது.

மக்: ஆமாம், ஆமாம்...... எங்கே அமைச்சர்?

சிங்: (வந்துகொண்டே) மன்னிக்க வேண்டும் மன்னவா, மூச்சங்கத்தோடு முறிந்துபோன தமிழ்ச் சங்கத்தை புனருத்தாரணம் செய்ய முன்னேற்பாடுகள் செய்துவிட்டு வருகிறேன்.

மக்: பல்விஜேப் புலவரே! உமது கடமையுணர்ச்சிக்கும் திறமைக்கும் பட்டயமாகத் தளபதி பதவியையும் உமக்கே அளிக்க வேண்டுமென சபை அபிப்பிராயப்படுகிறது.

சிங்: மன்னிக்க வேண்டும் மன்னவா! பட்டமளிப்பும் பதவி வழிப்பும்பற்றிப் பேசுகின்ற இந்நேரம், மொட்டவிழா மலராக, பட்ட மரமாகப்பாதகன் ஒற்றையாட்சியின் பிடியிலே உழல்கின்ற அன்னை-இந்நாட்டரசி-கன்னித் தமிழைமொட்டி என்னவிப் பார்க்கிறேமா? பாராண்ட தாய் பறிபோய் சுராண்டுகள் ஆகிவிட்டனவே. மன்னர் மன்று! தமிழ்த் தாய் இருக்க வேண்டிய தங்கள் ஆசனத்தின் ஒருபாதி வெறிச்சென்று கிடக்கிறதே. கன்னித் தமிழைக் காக்கும் கடப்பாடு இல்லாத எனக்கு எதற்காக பட்டம்? வெட்கம்! வெட்கம்!! தளபதி இரதகஜ துரகபதாதிகள், படை பட்டாளம் இத்தனையும் உண்டு. ஆனல் நாட்டின் தாயகியைக் காப்பாற்றும் துணிவு இல்லை.

மக்: சிங்கா! ஆத்திரத்தில் பேசுகிறுய்.

சிங்: அடி வயிறு பற்றி எரியும்போது ஆத்திரமில்லாமல் ஆனந்தமா மன்னவா பிறக்கும்? அரசர் பெருமானே! பதவியேற்கத் தயார், ஆனல் தளபதி என்ற முறையில் நான் முதல் தொடுக்கும் போராட்டம் மாதாவை மீட்கும் போராட்டம். ஆம் என்று சொல்லுங்கள். ஆணை தாருங்கள். அரை நொடியில் அன்னையின் விலங்கொடித்துத் தருகிறேன்...உம்...உத்தரவு தாருங்கள் மன்னு!

(இந்நேரம் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் அழுது கொண்டு வருகிறுர்கள். அவர்கள் பெயர் இராமசாமி, மீனுட்சி)

மக்: யாரவர்கள்? என்ன வேண்டும்? அழுகையின் அர்த்தம் என்ன?

சிங்: ...அனர்த்தம் என்று அர்த்தம் மன்னவா. இவர்கள் மலைநாட்டிலிருந்து வருகின்றனர். சிங்க நாட்டான் ஒற்றையாட்சி ஏதாவது தொல்லை கொடுத்திருப்பான். எல்லைப்புற மக்களல்லவா? இலகுவாகத் தாக்குகிறுன்.

இராம: ஆமாங்கசாமி, என் பேரு இராமசாமிங்க இவ பேரு மீனுச்சிங்க; என் சம்சாரமுங்க......நெனைச்சாலே நெஞ்சம் பதறுது சாமி. தொண்டை அடைக்குது... சிங்க நாட்டு ராஜனில்ல... ராஜன்...அவன் பேருகூட...

சிங்: ...ஒற்றையாட்சி

மீனு: ஆமாங்க......அவனுடைய பட்டாளங்கள் நாம ரெண்டு கண்ணைப்போல வளர்த்த செல்வக் குழந்தைகளை தூக்கிவிட்டுப் போட்டாங்க ரெண்டுக்கும் பிரஜாவுரிமை, வாக்குரிமையின்னு பேருங்க...

சிங்: என்ன? (துணுக்கம்)

இராம: எலும்பை ஒடிச்சிக் கொடுத்தோஞ் சாமி ரத்தத்தை இறைச்சிக் கொடுத்தோம் சாமி. சிங்க நாட்டுக்கும் சேத்து சோறுபோட்டவங்க நாங்க சாமி. நம்மையெல்லாம் கூறு போட்டு வுட்டாங்களே சாமி.

மீனு: தேடக்கிடைக்காத நம்ம செல்வக் குழந்தைகளை பெற வழி செய்யுங்க மவராஜா. இல்லாட்டா நாங்க செத்திடுவோம். அவங்க இல்லாம நாம வாழ முடியாதுங்க.

சிங்: தமிழர் தம் கண்ணீர்த் தடாகத்திலே நீந்தி செந்நீரால் தாகசாந்தி செய்து கொள்கிறுன் ஒற்றையாட்சி. மன்னவா! வாளும் வேலும் தாங்கிய நாம் இவ்வஞ்சகத்தையும் தாங்கிக்கொள்ள வேண்டுமா?

தமிழ்: சிங்கா, அமைதியற்றிருக்கிறுய், பொறுமை வேண்டும்.

சிங்: குருதேவா, தங்கள் கூற்றுக்கு எதிர்மாற்றம் கூறியறியாதவன் நான். ஆனல் பொறுமையின் போர்வையிலே கோழைத்தனம் குடிபுகுந்துவிட்டதாக சிங்கநாட்டான் கருதுகிறுன். இதோ பாருங்கள், பிறந்த பெருமை எனக்குண்டு. கன்னித் தமிழரின் சட்டறுக்க, மலைநாட்டாரின் கண்ணீர் துடைக்க வன்னித் தமிழ் வாலிபர்கள் தயாராக இருக்கிறுர்கள். ஆணையிடுங்கள். வன்னி நாட்டில் வீரர் மாநாடு கூட்டி யுத்தப் பிரகடனம் செய்வோம்.

[அவை உறுப்பினருள் அம்பலப்பொன் எழுந்து]

அம்: காட்டிக் கொடுத்த காக்கை வன்னியனும் வன்னி நாட்டுப் பெருமகன் என்பதை தளபதியார் மறந்துவிடக்கூடாது.

சிங்: அறிஞர்கள் சூழ்ந்த இவ்வவைக்களத்தில் அம்பலப் பொன்னும் மின்னுவது போல வன்னித் தமிழ்த் தங்கங்கள் மத்தியிலே காக்கை வன்னியன் என்ற காக்காய்ப் பொன்னும் மின்னியது ஆச்சரியமல்லவே மன்னவா.

மக்: ஆமாம், ஆமாம், குருதேவரே! தளபதியாரின் யோசனை...

கண்ணீர் வடித்து நிற்கும் மீனுட்சியும் இராமசாமியும் யார்? உப்பிட்டதும், உணவூட்டியதும், இவர்தம் கரங்களல்லவா? அந்தக் கரங்களிலே விலங்கு...

மக்: ...உணர்கிறேன் சிங்கா, என்ன செய்ய வேண்டுமென்கிறுய்?

சிங்: வாழப்பிறந்த தமிழ் மகனை, வாய்மை நிறைந்த தமிழ்த்தாயை, தன்கொடிக்கீழ் ஆளத்துடிக்கின்ற அரக்கனின் கரங்களை ஒடித்து வருகிறேன். உத்தரவு தாருங்கள் மன்னவா.

மக்: கல்லோயாக் களத்திலே போராடிக் களைத்திருக்கிறுர்கள் வீரர்கள். அதனல் யோசித்தேன்.

சிங்: ...கேவலம், வீரர்க்கா [illegible]

[illegible]

வன்னியர் பரம்பரையில்

தமிழ்: ...தவிர்க்க முடியாதது......அங்ஙனமே செய்ய ஆணையிடுங்கள்...

சிங்: (மகிழ்ச்சியுடன்) குருநாதா!

தமிழ்: ஆனல் ஆத்திரத்திற்கு இடமளிக்காமல் நடந்துகொள்வாயாக.

சிங்: தங்கள் வாக்கே என் தாரகமந்திரம்...(வீரன் ஒருவனிடம்) யாழ்ப்பாணு! இவர்களைப் பாதுகாப்பாக மலைநாடுவரை கொண்டு விட்டு வா.

இரா: ஐயையோ, யாழ்ப்பாணமு! வேணுஞ் சாமி. கூட இருந்து குழி தோண்டுறவரு இவரு...

மீனு: இவர் செய்யிற உதவியும் சிங்கநாட்டான் தர்ர உபத்திரவமும் ஒண்ணு [illegible]

சிங்: அப்படியெல்லாம் சந்தேகப்படாதீர்கள். நீங்கள் நினைக்கிற பழைய யாழ்ப்பாணமல்ல இவன். திருந்தியவன்; தன் தவறுக்காக வருந்தியவன். பயமில்லாமல் செல்லலாம்.

இருவரும்: அப்படிங்களா? மிகச் சந்தோஷஞ் சாமி. நாங்க வர்ரோம் (போதல்)

சிங்: எனக்கும் விடை கொடுங்களரசே.

மக்: வெற்றியுடன் விரைந்து வா சிங்கா.

சிங்: குருநாதா!

தமிழ்: சத்தியமே ஜெயம். வெற்றியோடு திரும்புவாயாக. (சிங்கம் ஏகல்)

மக்: தியாக பரம்பரையில் வந்த வீரனல்லவா. வன்னிஉருக்கேற்ற வாரிசு சிங்கம் இல்லையா குருநாதா. (தமிழ்ச் செல்வம் புன்முறுவல் பூத்தல்)

காட்சி 2

இடம்: ஒரு பூங்கா, தன் காதலி இலட்சியத்திடம் விடைபெற வருகிறுன் சிங்கம். அவள் கண்களைப் பொத்துகிறுள்.

இல: போதும் அத்தான் குறும்பு, கைகளை எடுங்கள்.

சிங்: ஆமாம், நான்தானென்று எப்படித் தெரிந்து கொண்டாய்.

இல: தளபதியும் அமைச்சருமான சிங்கத்தின் காதலியைத் தீண்டுவதற்கு வேறு யாருக்கு தைரியம் உண்டாம்?

சிங்: அடேயப்பா, ஆமாம், நான் தளபதியாக்கப்பட்டேன் என்று எப்படியறிந்தாய் இலட்சியம்?

இல: இந்த இலட்சியத்தின் எண்ணமெல்லாம் எப்போதும் தங்களைப்பற்றியது தானே அத்தான் தங்களைப் பற்றிய தகவல்களையெல்லாம் எப்போதும் அறிந்து கொண்டேயிருக்கிறேன்.

சிங்: ஐயயோ, அப்படியா? அவ்வளவு தூரம் என் மீது சந்தேகமா! அப்படியானல் அந்தச் சம்பவமும் தெரியுமோ!

இல: எது?......

சிங்: ...அன்றொரு நாள் ஆற்றோரம் நானும் ஒரு பெண்ணும் பேசியிருந்தோம். ...நல்ல நிலவு, பால் கொட்டிவிட்டதோ எனப் பார்ப்போர் வியக்கும் வெள்ளை மணலின்மேலே, பால் மழையோ எனப் பாவலர் வியக்கும் வெண்மதியின் தண்ணொளியின் கீழே, அவ்வணங்கின் மடிமீது தலை வைத்து மெய் மறந்து நித்திரை செய்ய முற்பட......

இல: (பொறுமையிழந்து) அப்புறம்......

சிங்: ...அப்புறம்...நேரமாகிவிட்டதடா தம்பி, வீட்டுக்குப் போகலாம் எனத் தட்டினுள் என் பாட்டி; சரி பத்து ஆண்டுகட்கு முன்பு நடந்த சம்பவம், இப்போதும் ஞாபகமாக இருக்கிறது.

இல: அப்பாடா......நான் ஏதேதோ எண்ணிவிட்டேன்.

சிங்: என்ன உயிர் வந்துவிட்டதா? எண்ணறப் பேசி எழுதறக் கற்றாலும்...... ஏதோ என்று கூறுவார்கள். இலட்சியம்! என் இன்பக் கனவே! உன்னை நான்மறக்க முடியுமா? என் இலட்சியம் என் மனதோடு உறவாடி உயிரோடு கலந்திட்ட வஸ்து... எங்கே...

இல: என்னத்தான் அப்படிக் கண்ணை உற்றுப் பார்க்கிறீர்கள்.

சிங்: இல்லையில்லை, கண்ணொடு கண்ணினை நோக்கொக்கு மாறல்லவா காதலுக்கு இலக்கணம் வகுத்திருக்கிறுன் வள்ளுவன்.

இல: புலவனது பொன்மொழியை வரிக்கு வரி கடைப்பிடிக்கிறீர்களாக்கும்.

சிங்: எழுத்துக்கெழுத்து கடைப்பிடிக்கிறேன்

(12-ம் பக்கம் பார்க்க)

# அரிமா எங்கே?

—பா. சத்தியசீலன்—

நாட்டுக்கு உழைப்போர்கள் நாங்கள் என்று
நயவஞ்சக் கூட்டத்தைத் தலைமேற் கொண்டோம்
கோட்டுக்கு உழைத்திடவே அவர்கள் சென்றுர்;
குவித்திட்டார் பொருள்புகழைக்; குறுக்குப்பாதை
கேட்டுக்கு விற்றிட்டார் தலைமை தன்னைக்;
"கெட்டழிந்தாய் தமிழ் மகனே! திட்டம் ஈதோ
விட்டுக்கு வாக்கிடுவாய் வீணர் தம்மை
விரட்டிடுவாய்" என்முழங்கித் தமிழைக் காத்தாய்.

நாவலியை வழக்குரைக்கத் தந்தா யின்னே;
நந்தாயின் நலம் காக்க நாவைத் தந்தாய்;
மாவலியைத் தமிழ்மானம் நாட்டத் தந்தாய்;
மருள்மதியார்க் கெந்நாளும் கிலியைத் தந்தாய்
நோவலியைப் பாராதுன் உழைப்பை ஈந்தாய்
நோய்நீக்கத் தந்தவனே! உன்நோய் பாராய்;
காவலியார் எமக்களிப்பார் என ஓரா(து)
காவலுக்கேன் உயிர்தந்தாய்? கண்ணீர்தந்தாய்!

வேறு

பொதியமலைத் தவழ்தென்றற் சுகமனைத்தும் பொழிகின்ற
நின்நா நாளும்
துதிமறவா திருஞானச் செழுந்தமிழை; ஆளுமரசு
ஈயஞ் செய்யும்
சதியறியும்: "வைதீகச் சழக்கழித்துக் கோவிலெல்லாம்
திறவீர்" என்னும்;
நீதியெமை நாம்போற்றும் நின்நாவை மறந்துமொரு
நெஞ்சம் உண்டோ?

திருமலையில் 'வருக' வெனத் தீரர்களை வரவேற்ற
திறத்தன் எங்கே?
கருமமது கண்ணெனச் செந்தமிழர் மண்காத்த
காவல் எங்கே?
அரசவையில் மாற்றுர்நா அடங்கிடவே முழங்குகுரல்
அரிமா எங்கே?
சிரமதனில் கரஞ்சேர்த்துச் செந்தமிழர் நொந்தழவே
சென்றதெங்கே?


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்தவாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, இரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் கதை

சிறுகதை — எழுதியவர்: உதயணன்

வாழ்வில் ஏற்பட்ட அத்தனை இன்னல்களையும் பொறுத்துப் பொறுத்து வளர்ந்துவிட்டான். 'பொறுத்தான் புவியாள்வான்' என்று யாரோ ஒரு போக்கற்றவன் சொன்னபடி, கடைசிவரை அவனுக்குப் புவியும் கிடைக்கவில்லை. பொரியும் கிடைக்கவில்லை.

பெண்ணென்றால் பேயுமிரங்கும் என்பார்கள். ஆனால் கந்தசாமி பேயைப் பார்த்ததில்லை. பெண்களைப் பார்த்திருக்கிறான்.......

.........இந்த அவமானத்தைத் துடைக்க யாழ்ப்பாண மாதா எத்தனை தலைமுறைக்கு என்ன பிராயச்சித்தம் செய்ய வேண்டுமோ தெரியாது.

கந்தசாமி 'பைல்'களைப் புரட்டினான். கிளறினான், கட்டினான். நீரை விரல் நுனியில் பூசிக்கொண்டு ஒவ்வொரு காகிதமாக உருட்டினான்.

இல்லை.

நான்கு 'லாச்சி'களையும் இழுத்தான். கழற்றினான். மேசையில் வைத்தான். தன் கண்களில் எண்ணெயை ஊற்றிக்கொண்டு அங்குலம் அங்குலமாகத் தேடினான்.

இல்லை.

குப்பைக் கூடையை எடுத்தான். கவிழ்த்தான். கொட்டினான். கடவுளின் பாரத்தைப் போட்டுவிட்டு நெஞ்சில் கையை வைத்துத் துண்டுதுண்டாகத் தடவினான்.

இல்லவேயில்லை!

அப்படியென்றால் அந்தப் பத்திரம் எங்கே போயிருக்கும்? எப்படி மறைந்திருக்கும்?

கந்தசாமி வேலை பார்க்கும் வர்த்தக நிலையம் இன்னொரு வர்த்தக நிலையத்துடன் பத்தாயிரம் ரூபாவுக்கு எழுதிக் கொண்ட ஒரு ஒப்பந்தப் பத்திரம் அது. அந்தப் பத்திரம் இல்லையென்றால் ஸ்தாபனத்துக்கு பத்தாயிரம் ரூபா நட்டம். கம்பனிக்குப் பத்தாயிரம் ரூபா நட்டம் ஏற்படுத்திய கந்தசாமி சுலபமாகத் தப்பித்துக் கொள்வது என்பது முடிகிற காரியமா?

ஒரு நாளைக்கு இப்படி எத்தனையோ பத்திரங்கள் அவனுடைய கைக்கு வருகின்றன, போகின்றன. அவற்றிற்கான 'கருமாதி'கள் முடிவதற்குள் அந்தப் பத்திரங்கள் எத்தனையோ கைகள் மாறிச் சுற்றிச் சுழன்று திரும்புகின்றன. இந்தக் குறிப்பிட்ட பத்திரம் மட்டும் யார் கையில் சிக்கி, எவர் சட்டைப் பையில் புகுந்து, எந்தக் கதவால் வெளியேறியதோ?

ஆனால்—

கந்தசாமிதான் அந்த சொற்ப பணத்துக்கு ஆசைப்பட்டு அந்தப் பத்திரத்தை எடுத்து யாரோ மாற்றானிடம் கொடுத்துவிட்டான் என்று சக உத்தியோகத்தர்கள் சந்தியில் கையடித்துக் காண்பித்தால் முடிந்தது. உயிர் முளைத்து வந்த கோபக் கனலை அவனால் சகிக்க முடியவில்லை. சீ! இப்படி ஒரு மிருகத்தனமான எண்ணம் இருந்தால் கந்தசாமி இன்றைக்கு இந்த இடத்தில் இப்படியா தலை கவிழ்ந்து நிற்பான்? வஞ்சிப்பதும் ஏமாற்றுவதும் திருடுவதும் அவனுக்கு மனம் ஒப்பிய செயல்களாக இருந்தால் அவன் இன்று மானத்துக்கு மண்டியிட்டு கூனிக் குறுகியா நிற்பான்? கோட்டை கட்டிக் குதிக்கமாட்டான்? கொடி கட்டிப் பறக்கமாட்டான்? குபேரனாக வாழமாட்டான்?

அவனுடன் கூட வேலை செய்யும் அத்தனை பேரும் தத்தம் மேசைகளைத் தடவிவிட்டுக் கந்தசாமியை கைவிட்டுவிட்டார்கள். இன்னும் ஒரே ஒரு மார்க்கம் தான் உண்டு. பலிபீடத்தில் தன்னை வைத்து மன்றாடிப் பார்க்கலாம்.

கந்தசாமி நேராக அதிகாரி கந்தையாவிடம் சென்றான். விஷயத்தை விளக்கி விவரமாகக் கூறினான். கூறிவிட்டு அவருடைய தீர்ப்புக்காகக் காத்திருந்தான்.

"மிஸ்டர் கந்தசாமி! உன்னில் உண்மையில் குற்றம் இல்லாமல் இருக்கலாம். நான் நம்புகிறேன். கம்பனி நம்புமா? ஒரு நாள் அவகாசம் தருகிறேன். தேடிப் பார். இல்லையென்றால் பொலீஸ் வரை போக வேண்டி வரும்." என்று கந்தையா சொன்ன போதிலும் அவருக்கு உள்ளூர மகிழ்ச்சியாகவே இருந்தது. ஒரு [illegible] கொடுத்தால்—அவனுடைய வயிற்றில் அடித்து வாழ்க்கையைப் பறித்தால்—அவருக்குப் பதவி உயர்வு கிடைக்கும். பூ! தொண்டைமானும் எட்டப்பனும் க்யூவில் நிற்க வேண்டும் கந்தையாவின் கால்களைக் கழுவ!

கந்தசாமி திரும்பினான்.

ஃ ஃ ஃ

யாரோ செய்த பாவம் எங்கோ சென்று விடிந்ததால் கந்தசாமி பிறந்தான்.

வயிற்றிலே பசியைக் கட்டி, மடியிலே சிறுமையைக் கட்டி, நெஞ்சிலே பஞ்சத்தைக் கட்டி கந்தசாமி வளர்ந்தான். அவனுடைய படிப்பும் கல்வியும் வீடு வீடாகத் திரிந்து, தெருத் தெருவாக அலைந்து, ஒரு எல்லை கண்டது. வாழ்வில் ஏற்பட்ட அத்தனை இன்னல்களையும் பொறுத்துப் பொறுத்து வளர்ந்து விட்டான். 'பொறுத்தார் புவியாள்வார்' என்று யாரோ ஒரு போக்கற்றவன் சொன்னபடி கடைசிவரை அவனுக்குப் புவியும் கிடைக்கவில்லை; பொரியும் கிடைக்கவில்லை. ஒன்று மட்டும் கிடைத்தது—

ஒரு குமாஸ்தாவானான்!

கூட்டவும் கழிக்கவும் ஆயிரம் பேர் ஆயிரம் யந்திரங்களைக் கண்டு பிடித்தாலும், குமாஸ்தா வேலைக்கு ஒரு பலித யந்திரத்துக்கு ஈடாக ஒரு இரும்பு யந்திரத்தைக் கண்டு பிடிக்க எந்த மன்னனாலும் மேதாவியாலும் முடியாது. அந்தக் குமாஸ்தாக் கூட்டப் பாலத்தைக் கண்ணீரிலும் பெருமூச்சிலும் கரைக்கும் சோகக் கதையை கந்தசாமி இனிமேல்தான் அறியவேண்டும்.

கொழும்புக்கு வந்தான். குமாஸ்தாக கம்பனியிலே ஒரு அங்கமானான். நாகரிகப் போர்வையை இழுத்து மூடிக் கொண்டு நயவஞ்சகப் பாதையில் செல்லும் நாசகாரக் கும்பலையும் கண்டான். நாளைக்கு விடியும் நாளைக்கு விடியும் என்று தம்மையும் பிறரையும் காலத்தையும் ஏமாற்றி வாழும் பட்டிவிப்பட்டாளத்தில் சேர்ந்தான். நின்றால் பத்துச் சதம் இருந்தால் இருபத்தைந்து சதம் என்று பணம் பாதாளம் வரை பாய்வதை உணர்ந்தான். உணர்ந்து என்ன செய்வது? 'ஊரோடு சேர்ந்து வாழ்' என்று இன்னொரு அங்கிடுதொப்பன் சொல்லிவிட்டுப் போய் விட்டானே!

மனிதனாகப் பிறந்துவிட்டால் வாழ வேண்டிய இடத்தில் வாழ்ந்து, விழ வேண்டிய இடத்தில் வீழ்ந்து, திமிர வேண்டிய இடத்தில் திமிர வேண்டியதுதான். அதன்படி கந்தசாமி கல்யாணம் செய்ய வேண்டிய காலகட்டம் வந்தது.

மணப் பெண் [illegible]

பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். ஆனால் கந்தசாமி பேயைப் பார்த்ததில்லை. கொழும்புத் தெருவிலே 'தின்னை'யிலே, கால்பேஸ் திடலிலே பெண்களைப் பார்த்திருக்கிறான் — ஆமாம் பெண்களைத்தான்! மார்பு மடிப்பும் வயிறு விளிம்பு தெரிய வெங்காயப் பட்டுடுத்து, கண்ணிலே கதை சொல்லி, கதையிலே வழி சொல்லி, வழியிலே பழி சொல்லி விண்ணான வாழ்க்கை நடத்தும் பதிவிரதாசி(ரி)ரோன் மணிகள் வாழும் விசித்திர உலகம் இது—தா!

அல்ல! தங்கம் நல்லவள். அடக்கம், அமைதி, அருங்குணம் படைத்தவள். அவனுக்கு ஏற்றவள். கந்தசாமிக்குத் தங்கத்தைப் பிடித்தது. தங்கத்துக்குக் கந்தசாமியைப் பிடித்தது. 'மாப்பிள்ளை வந்தார், மாப்பிள்ளை வந்தார் மாட்டு வண்டியிலே, பொண்ணு வந்தாள் பொண்ணு வந்தாள்'—

வாழ்க்கை தொடங்குகிறது......

சேலை வாங்கினால் பணம் கேட்கிறாள். சட்டை வாங்கினால் பணம் கேட்கிறாள். பல்லக்கிலே ஏறினாலும் காசு வேண்டும். பஸ்ஸில் ஏறினாலும் காசு வேண்டும். குதிரை முதல் குண்டூசி வரை எதற்கும் வேண்டியது ஒரே காசுதான், காசு தான், காசுதான். தென்னை மரத்தையும் தேக்கு மரத்தையும் படைத்த தெய்வத்துக்கு—பூத்துக் காய்க்கும் மாவையும், பூவாமல் காய்க்கும் பலாவையும், பூத்தும் காயாத பாதிரியையும் படைத்த பகவானுக்கு பூவாமல் காயாமல் பணம் பொசிரியும் காசு மரம் ஒன்றைப் படைக்கும் அளவுக்குப் புத்தியில்லாமலா போய்விட்டது?

காலதேவன் ஓடிய வேகத்தில் கந்தசாமி வீட்டு வாசலில் இரண்டு குழந்தைகளை விட்டு விட்டுப் போனான். அந்தக் குழந்தைகள் கந்தசாமியை அப்பா என்றும், தங்கத்தை அம்மா என்றும் அழைத்தனர்.

இந்த நேரத்தில்—

கந்தசாமியின் அலுவலகத்துக்கு கந்தையா என்றொரு அதிகாரி வந்து சேர்ந்தார். இரும்பை ஒடித்தால் சரம் கசிந்தாலும் கசியலாம். பாறையைக் கல்லைப் பிளந்தால் நீர் சுரந்தாலும் சுரக்கலாம். கந்தையாவின் இதயத்தில் ஒரு பொட்டு இரக்கமேனும் இருக்குமா?

ஃ ஃ ஃ

தங்கம் வாசலில் வந்து நின்று கணவனை வரவேற்றாள். கந்தசாமிக்கு அவளை நிமிர்ந்து பார்க்கும் சக்தியே இல்லாமல் இருந்தது. நாளைக்கு என்ன நடக்கும்? மானம் போகுமோ, வேலை போகுமோ, இரண்டுமே போய் என்னதான் [illegible] வருடங்கள் முற்றுக் முடியவில்லை. முடிந்த காலத்திலும் யாரும் எந்த நிம்மதியையும் கண்டதில்லை. அப்படியிருக்க இப்படியும் ஒரு சோதனையா? இன்றும் கூட—

ஆமாம் இன்று காலை கந்தசாமி அலுவலகத்துக்குப் புறப்பட்ட பொழுது தங்கம் வாசல்வரை அழைத்து வந்து—

"மாலையில் கெதியாக வீட்டுக்கு வாருங்கள்" என்றாள் தங்கம்.

"ஏன் தங்கம் என்ன சங்கதி?" என்று கேட்டு அவள் பக்கம் திரும்பினான் கந்தசாமி.

"ஒன்றுமில்லை. நீங்கள் வீட்டிலில்லாத வேளை வீடு வெறிச்சோடிக் கிடக்கிறது"

"அப்படியென்றால் நான் எந்த நேரமும் உனக்குப் பக்கத்தில் இருக்க வேண்டும் என்கிறாயாக்கும்" என்று கந்தசாமி சிரித்தான்.

"அத்தான்" என்று அவளும் சிரித்தாள்.

"இன்னும் நாங்கள் மாப்பிள்ளை பொம்பிளையாக இருக்கிறோம் என்று நினைப்போ?" கந்தசாமி விஷமமாகக் கேட்டான்.

"இன்னுமென்ன? எப்பவும் நீங்க எனக்கு மாப்பிள்ளைதான். நான் உங்களுக்குப் பொம்பிளைதான்" என்று தங்கம் சொன்னாள். அவளுடைய வட்ட வதனத்தில் வண்டு விழிகள் ஓடிச் சுழித்தன.

"நீ பொல்லாதவள்" என்று கந்தசாமி தங்கத்தைத் தன் பக்கம் திருப்பி ஒரு—

ஒரு?

அன்புக் குழந்தைகளின் அமுத மொழியும் ஆசை மனைவியின் இனிய பேச்சும் ஒரு கணம் அவனுடைய சிந்தனையில் தோன்றிச் சுழன்றன. இப்படிப் பொருத்தமான ஒரு மனைவியும் அருமைக் குழந்தைகளும் யாருக்குமே கிடைப்பது அபூர்வம்—கிடைத்தும் கூட? அரிய பிறவி அரிய பிறவி என்று ஏற்றிப் போற்றும் மனிதப் பிறவியின் அந்தரங்கம் இது தானோ?

பொழுது விடிந்தது.

வழக்குத் தொடர்ந்தது.

தீர்ப்பும் நடந்தது.

முதலாவதாக கந்தசாமிக்குச் சொந்தமான பொருட்களை ஏலத்தில் விட்டு கம்பனிக்குப் பத்தாயிரம் ரூபா கொடுபட வேண்டும். பத்தாயிரம் என்பது வேறு விஷயம். சட்டி பானைகளையும் சேர்த்து விற்றாலும் ஓராயிரம் தேறுமா?

இரண்டாவதாக கந்தசாமிக்கு இரண்டாண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனை.

கந்தசாமி வெளியே வந்தான். தங்கம் ஓடிப்போய் அவனைக் கட்டிக்கொண்டு, "எனக்கும் ஒரு வழி சொல்லிவிட்டுப் போங்கள்" என்று கதறினாள்.

"தங்கம் உனக்குத் துணிச்சல் இருந்தால் ஒன்று செய்வேன்"

"என்னத்தான்?"

"தற்கொலை செய்துகொள்."

"அத்தான்......!"

"தற்கொலை செய்வது பாவம், பழி என்று சொன்னாலும் எந்த விண்ணுதி விண்ணனும் உன் போன்றவர்களுக்கு ஒரு மாற்று வழி சொல்லவில்லையே!"

தற்கொலை செய்வதும், செய்யத் தூண்டுவதும் சட்ட விரோதமானவை என்று கந்தசாமிக்குத் தெரியாமலில்லை. ஆனால் இங்கு கந்தசாமி பேசவில்லையே! அவனுக்குள் இருந்து 'ஏதோ ஒன்று' பேசுகிறதே.

அவனுடைய முகத்தில் விருப்பும் இல்லை. வெறுப்பும் இல்லை. அவன் அழவும் இல்லை. சிரிக்கவுமில்லை. துன்பத்தின் சிகரத்தையே கடந்துவிட்ட ஒரு நிலையில் இருந்தான்.

தங்கம் கதறியழுதாள்.

"தங்கம்! நல்லதங்காள் கதையை உனக்காகத்தான் எழுதி வைத்திருக்கிறார்கள். போ! எப்படியாவது வாழ். எதையாவது செய். ஒரு நாளைக்கு நீ எங்கிருந்தாலும் எப்படி இருந்தாலும் தேடி வருவேன்" சொல்லிவிட்டு அவன் போய் பொலீஸ் ஜீப்பில் ஏறினான்.

நியாயத்துக்கும் நீசத்தனத்துக்கும் பேதம் தெரியாத நீலிக் கூட்டம் உள்ளவரை நல்லவர்கள் வாழ முடியாது; நாடறிந்த உண்மையிது. வாழ்க்கையின் கதை இதுதான்; வேதனையும் சோதனையும் சேர்ந்த கதை. சமூகத்தின் கதையிதுதான்; கண்ணீரும் கவலையும் கலந்த கதை. தாரணியின் கதையிதுதான்; துன்பமும் துயரமும் தொடர்ந்த கதை. எம்மவரின் கதையிதுதான்; இன்பத்தை இன்னலள்ளி உண்ட கதை. ஆறறிவு படைத்தவனின் கதை இதுதான்; அல்லலுக்கு ஆட்பட்டு அந்தரத்தில் போன கதை.

ஆனால்—

அன்று காணமற்போன பத்திரத்தை அதே அதிகாரி கந்தையா தனது மேசையில் கண்டெடுத்த கதையும், தனக்கு ஒரு அவப்பெயர் வரக் கூடாதே என்று அதை அடியோடு மறைத்து விட்ட கதையும் யாரும் அறியாத கதை.

## இசை விழா

இலங்கைச் சங்கீத நாட்டிய சங்கத்தின் வருடாந்த இசைவிழா இம்மாதம் 23, 24, 25-ந்தேதிகளில் வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் நிகழும்.

வாய்ப்பாட்டு, வாத்திய இசை ஆகிய துறைகளிலுள்ள பிரபல இலங்கை வித்துவான்கள் அனைவரும் பங்குபற்றுவார்கள்.

சங்கீத நாட்டிய சங்கத்தினதும் சைவ மங்கையர் கழகத்தினதும் கூட்டு ஆதரவில் நடைபெறும் இவ்விழாவிற்குப் பிரவேசக் கட்டணம் எதுவும் கிடையாது.

நிகழ்ச்சிகள் நேரம்:

23, வெள்ளி: பி. ப. 5 தொடக்கம் 8-40 வரை. 24 சனி: பி. ப. 5 தொடக்கம் 9-30 வரை. 25 ஞாயிறு: மு. ப. 10-00 தொடக்கம் 11-15 வரை. பி. ப. 5 தொடக்கம் 9-00 வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிய(ர்) சிங்கம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணே, மேமே நெற்றியிலே சந்தனப் பொட்டின் மஞ்சள் நிறமும், இடையிலே சரிகைப்பட்டின் செந்நிறமும், காலிலே பகட்டுக் காட்டும் பாதச் சதங்கையின் பச்சை நிறமும் காணக் கிடைக்காத காட்சிகள் இலட்சியம்......பேசிக் கொண்டே போகிறேன். கடமை குரல் கொடுக்கிறது. உன் கட்டழகு தொட்டிழுக்கிறது. காலம் ஏகு என்கிறது. உன் கோலம் தடை போடுகிறது. அன்பே, எதற்காக வந்தேனென்று......

இல: அறிவேன் அத்தான்...நாட்டின் நாயகி கன்னித் தமிழைக் காப்பதும், மலைநாட்டான கண்ணீரைத் துடைப்பதும் புனிதமான கடமைகள். போய் வாருங்களத்தான், என் வாய்மையின் வலியும் தங்கள் வாள் வலியும் நம் நாட்டிற்கு வெற்றியை ஈட்டட்டும்.

சிங்: தமிழ் மன்னனின் தரத்திற்கேற்ற மறத்தி நீ. என் இலட்சியம் என்னும் போது எத்தனை இன்பம் சென்று வருகிறேன்...

இல: வென்று வாருங்களத்தான்.

சிங்: சொல்லித் தெரிய வேண்டியதில்லை கண்ணே. கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம். (நண்பன் ஆத்மா வரல்)

ஆத்: இருக்கும், இருக்கும்; சிங்கம், வெளியே மகாபாரதம் நடக்கிறது. நீ இங்கேயென் மதலீலையா நடத்துகிறாய்?

சிங்: யார்? யார் சண்டை செய்வது?—(வெளியே வருகிறான் அங்கே யாழ்ப்பாணன், மலைநாடு, மட்டக்களப்பு, மன்னார், திருமலை ஆகியோர் சண்டை செய்தல்)

ஆத்: ஓர் றையாட்சியை எதிர்ப்பதற்குமுன்னே இவர்களை ஒற்றுமையாக்க வேணும் சிங்கம்.

சிங்: உண்மைதான்...நிறுத்துங்கள். எதற்காகச் சண்டை போடுகிறீர்கள்?

யாழ்: என்னத்தைச் சொன்னாலும், வயித்துக் குத்தை நம்பினாலும் இந்த வடக்கத்தையானை நம்பக் கூடாது.

சிங்: ஏன், தன் உதிரத்தைச் சிந்தி உன்னை உயிர் வாழ வைக்கிறானே அந்தக் குற்றத்திற்காகவா?

மட்: நாம படிக்காதவன் தான் படிச்சது அப்படி யாழ்ப்பாணன் சொல்லிக் காரு படிப்பு பெரிசி இல்லே மனிஷன் தான் பெரிசி

சிங்: சகோதரர்களே! சற்றே எண்ணிப் பாருங்கள். சிங்களநாட்டின் அதிகாரத்தால் நசுக்கப்படும் அடிமைகளல்லவா நீங்கள்? அடிமை அடிமையைத் தாக்குவதா? அடிமைகள் மத்தியிலே பிரிவினையென்றால் அது அடக்கியாள்வோனுக்கு வாய்ப்பல்லவா? நீங்கள் முட்டி மோதிக்கொள்வதன் மூலம் எதிரியைத் தட்டிக்கொடுக்கிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்

எல்லோ: உண்மை, நீங்கள் சொல்லுறது அத்தனையும் உண்மை

சிங்: பட்டிருப்புப் பாளையத்தில் முடியிழந்த எட்டப்ப மன்னர்கள் பிரிவினையை வளர்க்க முற்படுவார்கள். ஜாக்கிரதை (அவர்கள் ஏகல்) ஆத்மா, புறப்படு வன்னிநாட்டிற்கு. (இருவரும் குதிரைகளில் தாவல்)

### காட்சி 3.

இடம்: வன்னி நாடு.

'மூன்று திங்களுக்குள் நல்ல முடிவு. இல்லையேல் போர் முழக்கம்' என யுத்தம் பிரகடனம் செய்தான் தளபதி சிங்கம். தின்டோன் வீரர்கள் திரண்டெழுந்தனர். கொட்டு முரசும் கொள்கை முழக்கமும் சூழ பைந்தமிழ்ப் பட்டாளம் திரண்டு, தளபதியின் வாயசைவு கண்டு வாளசைக்கக் காத்திருந்த வேளை...... போரின் இலக்கணம் மீறி நிராயுதபாணிகளாகிய எல்லைப்புறத் தமிழ் மக்களை வெட்டிக் குவித்தனர் ஒற்றையாட்சியின் பட்டாளத்தினர். கொள்ளை, கொலை, கற்பழிப்பு எனப் பல்வேறு துறைகளில் பணியாற்றியது சிங்களநாட்டின் கூலிப்பட்டாளம். செய்தி கேட்டு சீறினன் தளபதி சிங்கம்.

### காட்சி: 4

இடம்: சிங்கநாட்டு அவை. அரியணையில் அரசன் ஒற்றையாட்சி, அடுத்து அரசகுரு ஏகபௌத்தம், அமைச்சன் வகுப்புவாதம் முதலியோர்.

ஒற: (வந்துகொண்டே) இராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட, ராஜகம்பீர, தீர, வீர பராக்கிரம, சண்டப்பிரசண்ட ஒற்றையாட்சி மகாராஜா வர்ரேன்.

[illegible] இல்லையா?

ஏக: ஏ ராஜன்! என்னைத் தவிர வேறுயார் வந்தாலும் எவரும் எழும்ப வேண்டியதில்லை என நான் கட்டளை போட்டிருக்கிறேன்.

ஒற்: ஆகா, அதுவும் சரிதான். போகட்டும் மந்திரி தமது மாதகர் தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?

ஏக: ஏ ராஜன்! இது என்ன கேள்வி? உனக்குத் தெரியாமலா மழை பெய்கிறது?

ஒற: மன்னிக்க வேண்டும் குருநாதா, சம்பிரதாயத்துக்காகக் கேட்டேன்.

வகு: பரவாயில்லை மகராஜா, நாம் சிறையிலே வைச்சிருக்கிற தமிழ்நாட்டு அரசி கன்னித் தமிழ் நான் தவறுமல் வடிக்கிற கண்ணீர் மும்மாரியாக மோசம் போங்க. போதாததுக்கு வெள்ளை கடந்த சில நாளாச் செய்த புரட்சியாலே, தமிழனுடைய கண்ணீரும் இரத்தமும் பாலும் தேனுமாகப் பாயுது மகராஜா.

ஒற்: சபாஷ் அமைச்சரே, சரியான விளக்கம். மூன்று மாதத தவணை கொடுத்தானே முட்டாள் சிங்கன்... (சிரிப்பு) குருநாதா! சரியென்று சொல்லுங்கள் அந்தச் சிங்கனைக் கட்டி இழுத்து வந்து சபையிலே நிறுத்துகிறேன் (வந்த காவலாளியிடம்) என்ன?

காவ: மகராஜா, யாரோ தமிழ் நாட்டின தளபதியாம், சிங்கன் என்று பெயராம். அனுப்பலாமா?

ஒற: ஐயய்யோ ... வந்ததா ஆபத்து. வந்துவிட்டானே பாவி. நான் ஏதோ கேலியாச் சொன்னேன் நான் ஏன் அவனைக் கட்டப் போறன்...

ஏக: ஏய்! அனுப்பிவிடு.

ஒற: ஆமாம்... வெளியே... வந்த வழியே அனுப்பிவிடு.

ஏக: ஏ ராஜன்! உள்ளே அனுப்பட்டும் (காவலாளி செல்வன்)

ஒற: ஆபத்தாச்சே குருநாதா

ஏக: சீ! கோழைபோல் பேசாதே.

ஒற்: கோழை என்னைப் போல பேசினால், அது என் குற்றமா குருநாதா? (ஆத்மா வரல்) ஐயய்யோ வந்து விட்டானே

ஏக: நீ தான் சிங்கமோ.

ஆத்: அரியன பின்னே வருகிறது. பதில் கூறத் தயாராகுங்கள்.

ஏக: தூ... ஏ ராஜன்! என்னையே மிரட்டுகிறான் நீசப் பயல்...பிடி சாபம்...

ஆத்: ..கொண்டால் கூறுப்படி (சிங்கம் வரல்) சிங்கம், அநீதி ஆட்சி புரிகிற துரோகி நீ தேடி வந்த நீதிக்கும் இவர்கட்கும் நெடுந்தூரப் பகையாமே.

ஒற்: குருநாதா, ஏதேதோ சொல்கிறானே.

வகு: பிதற்றுகிறான் பித்தன்.

ஆத்: சொந்த அனுபவத்தை எல்லாம் கொட்டுகிறார் அமைச்சர்.

ஏக: சிங்கா, உன் வரவுக்குக் காரணமென்?

சிங்: பாவம், உங்களுக்குத் தெரியாது அப்பாதத்தானே அநீதியின் பிரதிநிதிகள்! நீதி கேட்க வந்தேன், அராஜகம் நிலைக்காது என்பதை இடித்துரைக்க வந்தேன் ஆளும் இங்கோ, உமது தாகத்தையும் ஓநாய்களையும் காண்கிறேன். தூ... விலங்கினம் கூட உங்களைப் பார்த்து வேடிக்கையாகச் சிரிக்கிறது. எச்சரிக்கிறேன் எரிமலையின் எதிர்ப்பை எதிர்நோக்கத் தயாராகுங்கள். தயாராகுங்கள்.

ஏக: தூ... துட்டனே, கோளரியின் குகைக்குள்ளே நரி [illegible]யிடுகிறது. யாரங்கே? அவனையும் அந்த வாலையும் விலங்கிடுங்கள்.

ஆத்: வாலுக்குக் கூட விசேஷ விலங்கு வெச்சிருக்காங்களா?

சிங்: (கைது செய்ய முனைய) அரச குருவே, அராஜகத்தின் உருவே! விலங்கிலே சிங்கம் என்றும், வில்லடிபட்ட வேங்கை எனமாறும் தமிழ் நாடு. ஜாக்கிரதை...

ஒற்: ஐயய்யோ வில்லடிபட்ட வேங்கையா... ஆபத்தாச்சே... ஒகோ செத்துவிடும் என்று சொல்கிறானே குருக்கும்.

இருவரும்— விலங்கிடப்பட்டு இழுத்துச் செல்லப்படல். அவையின் அத்தனை பேரும் கேலியாகச் சிரித்தல்—

### காட்சி 5

இடம்: தமிழ்நாட்டு அவைக்களம்...

மக்: அவையோர்களே! விலங்கிலே அடலேறு. விலாவொடிய நகைக்கிறது சிங்க நாடு.

எல்லோ: போர்ப்பறை முழங்கட்டும் பொய்யர் கூட்டம் அழிக்கப்படட்டும்.

தமிழ்: அமைதி... கன்னெருநவனுக்காகத் தமிழ்ப்

(13-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
த. பெட்டி: 649,
கொழும்பு.

## ஏஜண்டுகள் தேவை

சுதந்திரன் பத்திரிகை விற்பனை செய்வதற்கு கீழ்க் காணும் இடங்களில் தகுதிவாய்ந்த ஏஜண்டுகள் தேவை. விபரங்கட்கு விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| அம்பாறை | புலத்தேறாபிட்டியா |
| ஆவரங்கால் | மதவாச்சி |
| எல்பிட்டியா | மந்திகை |
| கருகம்பனை | மதுரங்குளி |
| குளியாப்பிட்டியா | முரசுமோட்டை |
| கெக்கிராவை | வத்துகாமம் |
| கேகாலை | வறக்காப்பொல |
| ஹொறணை | வட்டவெல |
| நீர்வேலி | வெல்லம்பொட |
| பண்டிருப்பு | வெலிகம |

சர்குலேசன் மனேஜர்,
சுதந்திரன்.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு—12.

இந்தியாவின் உயர்ந்தரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே



★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

சோல் ஏஜண்டுகள்:
ரெப்கோ சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன்: 4243, 5060.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் எஞ்ஜினியரிங் ஏக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.

# திருந்திய வாழ்வு



யாழ்ப்பாணம் திருநெல்வேலி பெண்கள் இருவிகப் பாடசாலை மாணவ மாணவிகள் கடந்த சனிக்கிழமையன்று "திருந்திய வாழ்வு" என்னும் நாடகத்தை நடித்துக் காட்டினர். நாடகத்தில் நடித்த நடிகைகள் நிழற்படத்தில் காண்க.

—படம்: வலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைப் போராட்டம்............

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சாறுமையைக் கூறிய கூற்றின அழகும் அன்னாரின் அடக்கமான நிலைமையும் பிறர் அவரை மதிக்கவும் பாராட்டவும் கூடியதாகவும், கேட்டவர் தானெனன் இதைக் கேட்டேனென்று மனம் கூசத்தக்கதாகவுமிருந்த பதிலைப் பார்த்த போதுவள்ளுவன் சொன்ன;

"கேட்டார்ப் பிணிக்கும் தகை
அவைக கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்று பான்மையிலிருந்த அன்னாரின் பேச்சு. இப்படியாக எத்தனையோ "கூட்ட விடைகள்" என்ற முறையில் நீட்டிக் கொண்டு போகாமல் "கடைசிக் கூட்டமும் விடையும்" என்பதற்கு வருவோம்.

## கடைசிக் கூட்டம்

மறந்தாலும் மறக்க முடியாத சுவைக்கும் அன்னாரின் சொல்லழகு கமழ்ந்த கடைசிக் கூட்டம் யாழ்ப்பாண முற்றவெளியில் 16-8-59-ல் நடந்ததென்று நினைக்கிறேன். அன்னாரின் மறைவுக்கு ஒரு மாதத்தின் முன் நடந்த மாபெருங் கூட்டம் அதுதான்.

இக்கூட்டத்திற்கு வந்த பல கேள்விகளுள் ஒன்று சுதந்திரனையும், குயுக்தியாரையும் சுதந்திரன் மூலம் கட்சியையும், கட்சி மூலம் தலைவர்கள் சகலரையும் கண்டிப்பதாக இருந்த அக்கேள்வி அதாவது, (நல்ல ஞாபகமாயில்லை திருத்திக்கொள்க)

## கொடுத்தார் பதில்

சக்தி சிவன் எம்போர்க்கு இரு பிள்ளைகளை விட வேறு பிள்ளைகள் பிறக்காததின் காரணம்—அவர்கள் கர்ப்பத்தடை அனுசரித்ததாலா என்பதாகும்.

"பேசுக் கிக்கு விடை" கூறும் மன்னன் (திரு. வன்னியசிங்கம்) எழுந்தான், நின்றான், நிமிர்ந்தான், கேள்வியைப் படித்தான், விடையைத் தொடுத்தான்.

என்னென்ன விதமான [illegible] சுட்டப் படிப்பின் கெட்டித்தனம்; மாத்திரமல்ல; இலக்கியச் சுவை சொட்டும் இன்சுவைப் பாடல்களின் ஆதாரங்கள், அலங்காரப் பொருள்களுடன் கொடுத்த மதிலேச் சண்டு பண்டிதரும் பரவசமடைந்திருப்பர் பதிலின் சாரம். இப்படிக் குயுக்தியார் தெய்வத்தைப் பழிக்கலாமா என்ற கண்டனங்களும், துணைப்பிரசுரங்களும் சில காலமாகப் பறந்து கொண்டிருந்தன இப்பக்கத்தில். அது எங்கிருந்து வந்ததென்று ஆராய்ந்தபோது அகில இலங்கை ஆனைப்பந்தித் தமிழ்க் காங்கிரஸ் காரியாலயத்தில் ஒரு கூட்டம் நடந்ததாம், அக் கூட்டத்தின் பயன்தான் இவ்வாரிப்பாட்டங்களெல்லாம்.

அக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கியவர் யார் தெரியுமா? மனுவேல் பிள்ளை அண்ணனிருக்கிறாரே அவர்தான். பார்வதி பரமசிவன் நிந்தனைக்குப் பரிகாரம் காணும் கூட்டத்திற்கு ஒரு மனுவேல் பிள்ளை அண்ணர் தான் தலைமை வகிக்க வேண்டுமா?

## இலக்கியச் சுவை

குயுக்தியாரின் பதிலுக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டங்களைக் கிளப்பிய நண்பர்கட்கு அந்தக் காலத்துப் புலவர்கள் பாடிய பாடல்கள் தெரியாமலிருக்கலாம்.

"ஆய்முத்துப் பந்தரின் மெல்
லணை மீதுன்னருகிருந்து
நீ முத்தந் தா வென்றவர்
கொஞ்சும் வேளையினித்
தனித்தும்
வேய்முத்தரோடென் குறைக
ளெல்லா மெல்ல மெல்லச்
சொன்னால்
வாய்முத்தஞ் சிந்தி விடுமோ
நெல்வேலி வடிவன்னையே"

என்ற பாடலின் இலக்கியச் சுவை சொட்டச்சொட்டத் தந்த விளக்கங்களும் இன்னும் பல பாடல்களுள்

"கோட்டானே நாயே குரங்கே
உனை ஒருத்தி
போட்டாளே வேலையற்றுப்
போய்"

என்ற பாடல்களையும் ஆதாரமாகக் காட்டி இவையெல்லாம் "நிந்தாஸ் துதி" என்ற விதியில் அமைக்கப்பட்டிருப்பதை மகிழ்ச்சியோடு படிக்கும் அன்பர்கள் இந்தக் குயுக்தியின் ஒரு விடைக்காக இவ்வளவு பாடுகள்படுகிறார்களே பக்திமான்கள்போல் என்று கூறி நின்றதே ஒரு விருந்தாகத் தானிருந்தது.

இப்படியே அவர்களின் "மேடை விடை" என்ற விஷயமாகத் திரட்டி எடுத்தால் இலக்கிய அறிவும் ஹாஸ்யச் சுவையும் நிறைந்த ஓர் புத்தகமாகவே வெளி வந்துவிடும்.

# அமரரான...

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற வள்ளுவப் பெருந்தகையின் கருத்துக்கேற்ப நாம், அன்னாரையும் அவரது அரிய சேவைகளையும் ஆண்டொரு வண்ணமும், தாளொரு வண்ணமும் நினைவுகூரத்தான் வேண்டும். ஆனால் அத்துடன் நின்றுவிடக்கூடாது. அரசியல் துறைகளில் இருள்சூழ்ந்த காலங்களில் கலங்கரை விளக்காக நின்று, தமிழர்களை வழிகாட்டிய அப்பெரியாரது தர்ம முறைகளை அடிப்படையாகக் கொண்டு நாமும் செயலிலிறங்கவேண்டும். இடைப்பதர்களிய தவப்பெரும் புதல்வனை இழந்திருக்கும் அன்னைக்கு ஆறுதல் கூற, அவரையீடுபடுத்துந் துறையில் சல்யாது அயராது, தன்வலங்கருதாது கருமமாற்ற வேண்டும். இதுவே அன்னாருக்கு நாம் காட்டக்கூடிய சிறந்த அஞ்சலியும், நன்றியும், கைமாறுமாகும்!

[illegible] வன்னியர் புகழ்! வளர்க அவர் தொண்டு!

# வன்னிய(ர்)சிங்கம்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

படையைப் பணயம் வைக்க வேண்டாம் என இதோ செய்தி அனுப்பியிருக்கிறான் எம் அரியேறு சிங்கம். இன்று கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்.

## மூன்று மாதங்கட்குப்பின்

தனித்தனி அடைக்கப்பட்டிருந்த ஆத்மா, சிங்கம் ஆகியோரின் சிறைக் கதவுகள் திறக்கப்படுகின்றன—

காவலாளி! உனக்கு விடுதலை.

ஆத்: எங்கே சிங்கம்? எங்கே அந்தத் தமிழ்த்தங்கம்? (சிங்கத்தின் அறையிலிருந்து ஒட்டியுலர்ந்த உடல் வெளிவரல்) ஐயோ சிங்கம், நீயா? அகன்ற மார்பும், நிமிர்ந்த நெஞ்சும், திரண்ட புயமும் எங்கே சிங்கம்? எட்டிப்பாய்ந்து வேலெறிந்த கரங்கள், ஒட்டி உலர்ந்த வெறும் தோலாகி விட்டனவே... ஐயகோ.

சிங்: (முக்கி முனகி பேசல்) உணவு போட மறுத்தார்கள்... உன்மத்தர்கள். விடுதலை வேட்கையால்... இதுவரை உயிர் வாழ்கிறேன் (விழப்போக ஆத்மா தாங்கிக் கொள்ளல்) எம் மினத்தின் விடுதலை என் கண்ணுக் கெட்டாது போய் விட்டது.

ஆத்: அப்படியெல்லாம் சொல்லாதே சிங்கம்.

சிங்: நான் போகிறேன். என் அன்புக்குரிய ஆத்மாவே! நீ நின்று எம்மினத்தைக் காப்பாற்று. வாழப் பிறந்து, வாழா வெட்டிகளாக்கப்பட்ட எம் பரம்பரையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உன்னைச் சார்ந்தது, என் ஆத்மாவே. அத்துடன் என் இலட்சியம்... என் இன்பக்கனவு... என் தோளிலே தொத்தி விளையாடிய கிளி, அந்தப் பச்சைக் கிளிக்குப் பாங்கான வாழ்வு கொடு நண்பா; என் மாசுமறுவற்ற இலட்சியத்தைக் காப்பாற்று. அந்த இலட்சியமே என் நினைவுச் சின்னமாக அமையட்டும்... அமை... ய... ட் ...டு...ம். (எல்லாந் தமிழாய் வாழ்ந்த ஏந்தலின் உடல் சாய்ந்து விடுகிறது. ஆத்மாவின் அலறல் தொடர்ந்து— தமிழர்களின் கூக்குரல்.)


## வெற்றிகரமாக இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் [கொழும்பு] ரெக்ஸி [வெள்ளவத்தை] வின்சர் [யாழ்ப்பாணம்] வேல்ஸ் [கண்டி] இம்பீரியல் [மட்டக்களப்பு] நெல்சன் [திருகோணமலை]

கிங்ஸ் [பதுளை] அசோகமாலா [நீர்கொழும்பு]

தலை சிறந்த நடிகர்கள் பலர் முதன் முதலில் ஒன்று சேர்ந்து திறம்பட நடிக்கும் படம்.

அற்புதமான நடனங்களும், பயங்கரமான வாள்ச் சண்டைகளும் நிறைந்த படம். நீங்கள் ஒவ்வொருவரும் தவறாது பார்த்து மகிழவேண்டிய படம்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், வைஜயந்திமாலா, பத்மினி, பானுமதி, பண்டரிபாய், நம்பியார், பாலையா, இ. வி. சரோஜா, ஸ்டன்ட் சோமு முதலியோர் நடித்த

### ராஜபக்தி



வெற்றிகரமான 2-வது வாரம்!

**கெயிட்டி** கொட்டாஞ்சேனை

அநேக மக்களின் வேண்டுகோள்களுக்கிணங்க புத்தம் புதிய கொப்பியாக காண்பிக்கப்படுகிறது.

காலஞ்சென்ற கானவள்ளல் எம். கே. தியாகராஜ பாகவதர் நடித்த **சிந்தாமணி** இன்றே பாருங்கள்

மகத்தான 5-வது வாரம்!

**செல்லமஹால்** (கொட்டாஞ்சேனை)

பாலாஜி, பிரேம் நஸீர், ராஜசுலோசனா, சந்திரபாபு, நாகையா, தாம்பரம் லலிதா நடித்த

### சகோதரி



## வெற்றிகரமான 3-வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ஒடியன் (கல்கிஸை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை) லிபேர்ட்டி (பதுளை)



இவ்வாண்டின் ஈடு இணையற்ற முழு நீள நகைச்சுவைப் படம்.

விலா குலுங்கக் குலுங்கச் சிரிப்பூட்டிக் களிப்பூட்டும் சிங்காரச் சித்திரம்,

அஞ்சலி தேவியின் [illegible] இனிய [illegible] படம்.

நீங்கள் ஒவ்வொருவரும் பார்த்து மகிழ வேண்டிய படம்.

டி. ஆர். ராமச்சந்திரன்—அஞ்சலிதேவி
தங்கவேலு—ஏ. கருணாநிதி
கே. சாரங்கபாணி—பிரண்ட் ராமசாமி
சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்,
பக்கிரிசாமி—டி. பி. முத்துலட்சுமி
எம். சரோஜா
முதலியோர் நடித்த

அஞ்சலி பிக்சர்ஸ்

### அடுத்த வீட்டுப் பெண்

இசை— தயாரிப்பு: டைரக்ஷன்:
ஆதிநாராயணராவ் ★ வேதாந்தம் ராகவையா

பின்னணி-
பி. ஸ்ரீனிவாஸ், சீர்காழி கோவிந்தராஜன், ராகவன், எஸ். சி. கிருஷ்ணன், பி. சுசீலா, ஜானகி, டி. வி. இரத்தினம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையின் மூலம்....

## சிங்களக் ....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் எடுக்கவேண்டாமென்று பேட்டுக் கொண்டது அரசாங்க அதிபருக்கு மூச்சலைபோட்டு விழுந்தது. வன்னியனாரின் ஒரு தந்தியைக் கண்டு அமைச்சர் அலுவலகம் அலறியடித்துக்கொண்டு அரசாங்க அதிபருக்கு தந்தி கொடுத்திருக்கிறதென்ற இரகசியம் எங்களில் ஒரு சிலருக்குத் தான் தெரிந்திருந்தது.

இது நடந்த ஒருவார காலத்துக்குள் மீண்டும் ஒரு காணி அறிக்கை வெளிவந்தது. முன்பு வெளிவந்த அறிக்கை அழிக்கப்பட்டு 10 வருடகால விதியும், கடற்படைத் தொழிலாளர்களுக்கு விசேஷ சலுகை வழங்கும் விதியும் சேர்க்கப்பட்டிருந்தன. இது யாரால் ஏற்பட்டன என்று சொல்லவும் வேண்டுமா?

இந்த இரண்டு விதிகள் மட்டும் முன்பு நடந்தது போல் அமுலாக்கப்படாமல் விட்டிருந்தால் அந்த விளைவு பாரதூரமாக இருந்திருக்கும். இன்று 600 தமிழ்க் குடும்பங்கள் குடியேறியுள்ள இத்திட்டத்தில், 60 குடும்பங்களையாவது குடியேற்றி இருக்க முடியுமா என்பது சந்தேகந்தான். இந்த உண்மையைத் திருமலை மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

மறைந்த தலைவரது பணி இத்தோடு முடியவில்லை. பல வேலைகளுக்கு மத்தியில் மூதூர், திருகோணமலை, இந்த இரண்டு இடங்களிலும் நடந்த காணிக் கச்சேரிகளுக்கு நேரில் வருகைதந்து ஒவ்வொரு விண்ணப்பமும், சரியாகக் கவனிக்கப்பட்டு, நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்தினார்கள்.

திருமலைக்கு அம்முறை வந்தபொழுது கச்சேரிக் காணிப்பிரிவுக்குப் போய், திருமலை மாவட்டத்தில் நடந்தேறிய,—நடக்கின்ற குடியேற்றத் திட்டங்களைப் பற்றிய விபரங்களைக் கேட்டுக்கொண்டிருந்தார் ஆனால் அங்கிருந்த உத்தியோகத்தர்களுக்கு, இந்த வன்னியனுக்கு தெரிந்திருந்த 'விபரங்களில் பாதியளவு கூட தெரிந்திருக்கவில்லை.' பூட்டி வைத்திருந்த பைல் கட்டுகளை இரவோடு இரவாக எப்படியோ படித்துவிட்டு—இப்போது வந்து எங்களைக் குறுக்கு விசாரணை செய்கிறார் என்று தான் அவர்கள் நினைத்திருப்பார்கள். அந்த அளவு தூரம் திட்டங்களின் பெயர்கள் இடம், பரப்பு, மக்கள் தொகை,நீர்ப்பாசன வசதி, இன்னோரன்ன விபரங்கள் அவருக்குத் தண்ணீர் பட்டபாடு.

### வன்னியசிங்கபுரம்

எனவே மொறவேவா திட்டத்தை முதலிக்குளத்திட்டமாக மாற்றி, அது முழுக்க முழுக்கத் தமிழர் குடியேற்றத்திட்டமாக அமைக்கக் காரணகர்த்தாவாக இருந்தவர் மறைந்த தலைவர் வன்னியனார் ஒருவரே. அவரையே அந்தப் பெருமை சாரும். சிறப்பாக திருமலை மாவட்டமும், குறிப்பாக இத்திட்டத்தில் குடியேறிய, இனிமேல் குடியேறப் போகிற, மக்களும் அவருக்கு மிகக் கடப்பாடு உடையவர்கள். தங்கள் கட்டுப்பாட்டை உலகத்துக்கு எடுத்துக் காட்டுமாறு, முதலிக்குளத் திட்டத்தின் பெயரை மாற்றி, 'வன்னிய மாநகர்' என்றோ அல்லது 'வன்னிய சிங்கபுரம்' என்றோ அழைப்பது, மறைந்த தலைவரது பெயரை மட்டுமல்ல அவரது புகழையும் பணியையும் என்றென்றும் நாம நினைவு கூர ஏதுவாக இருக்கும்.

## மூலம்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் அவரை ஒரு லட்சிய அரசியல்வாதியாக மதித்துப்போற்றுவதில் ஆச்சரியமில்லை. ஏனென்றால், மட்டக்களப்பு மக்கள் மனதில் ஓர் உயரிய இடத்தைத் தமது பணிகளின் மூலமும், மட்டக்களப்பு மக்கள் வளர்ச்சியில் காட்டிய அக்கறை மூலமும், சேவையின் மூலமுமே அவர் ஸ்தாபித்துக் கொண்டார்!

மட்டக்களப்பு மக்களை எண்ணி அவர்களது வாழ்க்கையையும் நெருக்கடியையும் எண்ணி அமரர் கு. வ. உள்ளம் உருகிச் சோர்ந்திருந்த காட்சியொன்று எனக்கு ஞாபகம் வருகின்றது.

### கவலைதரும் செய்திகள்

தமிழரசுக் கட்சியினரின் 1958-ம் ஆண்டு வவுனியா மகாநாடு முடிவடைந்த மறுதினம் முல்லைத்தீவில் ஒரு பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அப்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும், மட்டக்களப்பிலிருந்து மிக்க சிரமத்துடன் சென்று மகாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட திரு. மு. மாணிக்கம் தம்பதிகளுடன் நானும் சென்று எல்லோரும் முல்லைத்தீவில் நடைபெற்ற கூட்டத்திலும் கலந்து கொண்டோம். எல்லோருமாக முல்லைத்தீவு வாடி வீட்டில் பேசிக்கொண்டிருக்கையில், வகுப்புக் கலவரம் பற்றிய செய்திகள் பலவும் எட்டவாரம்பித்தன. குறிப்பாக மட்டக்களப்பு நிலைபற்றி ஏராளமான திடுக்கிடும் கவலை தரும் செய்திகள் அறிவிக்கப்பட்டன.

அந்த நேரத்தில் இரு பக்கமும் சிங்கள வெறியர்களால் சூழ்ந்திருந்த மட்டக்களப்பு மக்களின் நெருக்கடியான நிலை குறித்து அமரர் கு. வ. ஆழ்ந்து சிந்தித்து வருந்தியது இன்னும் பசுமையாக எனது மனதில் இருக்கின்றது.

### யந்திரப் படகு

மட்டக்களப்பிலிருந்து மக்கள் நிலையைக் கண்காணிக்க அப்போது எவ்வளவு சீக்கிரம் திரு. மு. மாணிக்கம் மட்டக்களப்பு திரும்ப முடியுமோ அவ்வளவு நல்லது என்று அமரர் கூறியதுடன், மிகவும் குறுகிய காலத்தில் எங்களைக் கடல் மார்க்கமாக மட்டக்களப்பு கொண்டு சேர்க்க ஒரு இயந்திரப் படகையும் ஆயத்தம் செய்து கொடுத்ததுடன், தளபதி ஏ. அமிர்தலிங்கம் தம்பதிகளையும் உடன் அனுப்பி வைத்தார்கள்!

### 1956

1956ம் ஆண்டில், அம்பாறை வகுப்புக் கலவரத்தின் போதுகூட, கலவர செய்திகளைக் கேள்வியுற்றதும் மட்டக்களப்புக்கு ஓடோடி வந்து, துணிகரமாக அம்பாறை சென்று, அல்லலுற்ற தமிழர் குடும்பங்களுக்கு உதவியதையும், கலவர செய்திகளைத் திரட்டிச் சென்று, பாராளுமன்றத்தில் விவரித்து, உண்மையாக தமிழர் அனுபவித்த துன்பத்தின் கொடுமையை அகில உலகமே அறியச் செய்த பணியையும் நாம் எப்படி மறக்க முடியும்...?

### ஒப்பந்த விளக்கம்

1957-ம் ஆண்டின் பிரசித்தம் வாய்ந்த தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மகாநாட்டின்போது, அமரர் கு. வ. ஆற்றிய நீண்ட கருத்தும் விளக்கமும் மிக்க பேச்சு இன்னும் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது. பண்டாரநாயகா செல்வநாயகம் ஒப்பந்தத்தை 'காந்தி-இர்வின்' ஒப்பந்தத்துடன் ஒப்பிட்டு விளக்கம் கொடுத்து அவர் நிகழ்த்திய உரையை முக்கியத்துவம் கொடுத்து வெளியிடாத தேசியப்பத்திரிகைகளே அப்போது இருக்கவில்லையே...!!

### வெள்ள நிவாரணம்

1957-ல் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால், மட்டக்களப்பு மக்கள் வீடு வாசல்களை இழந்து இன்னல் பட்டபோது, மிக்க சிரமத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து உடை உணவு முதலிய நிவாரணப் பொருட்களை ஒரு லொறி வண்டி நிறையக் கொண்டு வந்து, தாமாகவே நேரில் சென்று வெள்ள அகதிகளுக்கு அநேக இடங்களில் வழங்கிய நினைவு கூட இன்னும் பசுமையாகவே இருக்கின்றதே!

### ஸ்ரீ எதிர்ப்பு

சிங்கள ஸ்ரீ எதிர்ப்பை, மட்டக்களப்பு மக்கள் வியக்கத்தக்க முறையில் நடாத்தினார்களல்லவா? அந்த உணர்ச்சி மிக்க சூழ்நிலையில், தலைவர் கு. வ. மட்டக்களப்புக்கு விஜயம் செய்து, பெரியதொரு தமிழ் ஸ்ரீ பொறித்த மோட்டார் காரி ஊர்வலமொன்றை மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை தலைமைதாங்கி நடாத்திச் சென்றதுடன் ஆங்காங்கே ஸ்ரீ பிரச்னை குறித்தும் காரசாரமான உரைகளையும் நிகழ்த்தினாரே!

சுதந்திரனை பகிஷ்கார [illegible] பித்தார்! விழாக்களா? அழைப்பை ஏற்றுப் பறந்து வந்து பணியாற்றினார்! பிரசாரமா? கரும்பென மட்டக்களப்பு மக்கள் சுவைத்து தமிழரசுவாதிகளாக மாறும் வகையில் அவர் பிரசாரம் செய்தார். சுருக்கமாகச் சொல்லப் போனால் அமரர் வன்னியசிங்கம் மட்டக்களப்பையும் மக்களையும் தமது கண்களில் ஒன்றாக மதித்துப்போற்றியதுடன் மக்களுக்கும் பிரமிக்கத்தக்க முறையில் பணி செய்தார்!

### அண்ணலின் அடிச்சுவட்டில்...

அமரர் கு. வ. இன்று நம்மிடையே இல்லைத்தான்! ஆனால் அவர் ஊட்டிய அரசியல் உணர்ச்சி பல்கிப் பெருகியுள்ளது. அவர் விதைத்த கருத்துக்கள் தழைத்து ஓங்கி மக்களை விழிப்படைய உதவியுள்ளன. அவர் வகுத்த திட்டங்கள் புனிதமானவை—பலனை நாம் உணர்ந்து அனுபவிக்கிறோம்!

அமரர் வன்னியசிங்கம் வாழ்ந்து காட்டிய புனித லட்சிய வழியில் இன்று போல் நாம் என்றும் உறுதியாக—ஒன்றுபட்டுச் சென்றால்......தமக்கு அரசியல் விடுதலை கிடைப்பது அதிக தூரத்திலில்லை! நமது காலத்திலேயே நாம் தமிழர்கள் என்று தலை நிமிர்ந்து சகல உரிமைகளுடனும் சுதந்திரத்துடனும் வாழ முடியும்!!




# அமரரான அண்ணல் வன்னியசிங்கம்

## வீரன் நாமம் வாழ்க!

வாழ்க! வாழ்க! வாழ்கவே!
வளம் கொழித்து வாழ்கவே!
ஈழ நாட்டின் ஜோதியாம்,
எந்தை நாமம் வாழ்கவே!

அன்பு பொங்கும் மேதை, நீ!
அருள் கனிந்த ஜோதி, நீ!
பண்பு உயர்ந்த தூயன், நீ!
பணிவு கொண்ட தொண்டன், நீ!

பொறுமை, நீதி, வாய்மையே,
போற்றும் புண்ய சீல னே!
அறம் உணர்ந்த நெஞ்ச னே!
அமரர் வன்ய சிங்க மே!

ஈழத் தாயின் மடியி லே,
இதய மற்றூர் பிடியி லே,
மாளும் தமிழர் துயரையே,
மாற்ற வந்த மேதை, நீ!

எந்த மிழ்த் தாய் வாழ வே,
இறுதி மூச்சு வரையு மே,
கொந்தளித்து, விடுதலைக்
குரல் கொடுத்த தியாகி யே!

உனையே நம்பித் தமிழர், நாம்
உறுதி கொண்டு நிற்கையில்,
தனி யே பிரிந்து எம்மை, நீ
தவிக்க வைத்த தென கொ லோ?

வாழ்க! வாழ்க! வாழ்கவே!
மறத்த மிழன் நாம மே!
வேழ மொத்த தீர நெஞ்ச
வீரன் நாமம் வாழ்க வே!

—சி. பொன்னுத்தம்பி

தன்னுடைய வாழ்நாட் காலத்துக்குள் எவ்வளவு தன் உடல், பொருள், திறமை, அறிவு அனைத்தையும் தமிழனுக்கு அர்ப்பணம் செய்து ஈழத்தின் அனாது செல்வக் குழந்தைகளுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுக்க அரும்பாடுபட்ட அண்ணல் வன்னியசிங்கம் அவர்கள் அமரராகி ஓர் ஆண்டு பூர்த்தியான தினத்தைத் தமிழர்களாகிய நாம் இன்று நினைவுகூருகிறோம்;

தமிழர்கள், தமிழாட்சியின்றி, மொழியுரிமையின்றி போதிய பலமின்றி இருக்கும் இக்காலத்தில், அவர்களுக்கு அவ்வுரிமைகளைப் பெற்றுக் கொடுக்கச் சத்தியப் போராட்டத்தில் ஈடுபடும் தலைவர்களுக்குத் தமிழினம் என்றும் தலைகுனியத்தான் வேண்டும். அரசியல் ஞானியாகவும், தமிழ் அறிஞராக

**செல்வி. சி. புஷ்பம்**

வும், சட்டமேதையாகவும் சிறந்து விளங்கிய அண்ணலவர்கள், பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர்களின் தனிப்பெருந் தலைவராக, இன்று பலபேர் பகிர்ந்து செய்யும் பணியை அவரொருவரே தனித்துச் செய்து வந்தார். அத்தன்னிகரில்லாத் தலைவருக்கு எமது அஞ்சலிகள்!

தமது அயராத சத்தியப் போராட்டத்தின் பயனைத் தமிழர்கள் தம்முள் வேற்றுமையில்லாது அனுபவித்து மகிழ வேண்டுமே என ஏக்கப்பட்ட தீர்க்கதரிசி, தமிழர்களது அத்தகைய ஒற்றுமைக்காகவும் பாடுபட்டார். எனவேதான், சமூகத்தின் சாபக்கேடான சாதிப் பிரிவினைக்கும், யாழ்ப்பாணத்து மட்டக்களப்பு, மலைநாட்டுத் தலைவர்கள் என்ற வேற்றுமைக்கும் முடிவு காணச் சலியாது உழைத்தார். கோப்பாய்க் கோமானை அந்த உற்றுமைச் சின்னத்தின் நினைவுநாளை இன்று நாம் ஞாபகப்படுத்துகிறோம்.

எங்கெல்லாத் தமிழனது அபயக்குரல் கேட்டதோ அங்கெல்லாம் தைரியமூட்ட வந்த தமிழ்த் தளபதியல்லவா அவர்? தமிழரது சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அண்ணலுக்கு ஏனைய தமிழ்த் தலைவர்களோடு அடியும் உதையும் விழுந்து. அவர் தலை வெடித்து வழிந்த உதிரத்தைத் தனிசுகரத்தால் வடித்து எதிர்த்தவண்ணம் தமிழரைமென் மேலும் ஊக்கப்படுத்தி அவர்களது தைரியத்தைத் தலைதூக்கி நிறுத்திய அக்காட்சியை நாம் மறக்க முடியுமா!

இன்று சிம்மாசனப் பிரசங்கம் தமிழில் வாசிக்கப்படும், எமது உற்ற சகோதரர்கள் வாக்குரிமையற்றிருக்கும் நிலையில் அவர்களுள் ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டிருத்தலையும் நினைக்க நாம் மட்டிலே மகிழ்ச்சியடைகிறோமல்லவா? இந்த மகிழ்ச்சி இன்று தமிழர் இதயத்தில் பூரிப்பதற்கு அன்று அவராது உழைத்தவர் எங்கள் அண்ணலல்லவா!

ஆகவே, 'உய்வுண்டு செய்நன்றி கொல்வாத மகற்கு'

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் கடையடைப்புக் கடை திறப்புக் காட்சியில் வன்னியர்

# எதிராளி பணிந்த பின்னரே "சோடா" அருந்தினர்

## 'நன்றும் தீதும் பிறர் தரவாரா' என்பது அவர் தாரக மந்திரம்

"சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிப்போம். கடைகளை, பாடசாலைகளை மூடி கறுப்புக் கொடி தொங்கவிட்டு ஆட்சியாளருக்குத் துக்கத்தைக் காட்டுவோம். உரிமையற்ற தமிழ் பேசு மினத்துக்கு, சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை யென்பதை உலகறிய அறவழியில் நம் எதிர்ப்பைக்காட்டுவோம்" என இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆண்டாண்டு சுதந்திர தினத்தைப் பகிஷ்கரித்து வந்தது;, வருகின்றது.

### திறப்பா? அடைப்பா?

"கடைகளைத் திறப்போம், அதுவே சுதந்திர தின பகிஷ்காரம். சங்கரப்பிள்ளை கடையையாவது திறந்தே தீரவேண்" எனக் கூறிக் கடை கடையாகச் சென்று கடையைச் சுதந்திர தினத்தின் போது திறவுங்கள் எனக் கோரினர், தமிழ்க்காங்கிரஸ் கட்சி சார்பில் திரு. பொன்னம்பலம் அன்று......!

யாழ்ப்பாண ஸ்டேஷனில், கொழும்பு மெயில் கறுப்புக் கொடியுடன் வந்து நின்றது. பல்கலைக்கழகத் தமிழ்மாணவர் கையில் கறுப்புக் கொடியுடன், வாயில் 'தமிழ் வாழ்க' ஒலியுடன் இறங்கினர்.

அப்பப்பா! சனத்திரள் ஸ்டேஷனை மறைத்தது.

### அவர் வருவார்! கடை திறப்பார்!!

ஊர்வலம் அங்கிருந்து தொடங்கிற்று. அதற்கு முன்பே பெரிய கடையெங்கும் தமிழர் கூட்டம் வெள்ளம் போல அலைமோதிந்தது.

இரண்டு மூன்று பஸ்கள் ஓட ஆரம்பித்தன. அதன் முன்பு பெண் தொண்டர்களும் ஆண் தொண்டர்களும் உட்கார்ந்து விட்டனர். பஸ்கள் புறப்பட்ட இடங்களிலேயே தங்கின.

யாழ்ப்பாணம் பெரிய கடை பஸ்தானம். எள் போட்டால் எண்ணெயாகும் கூட்டம். சங்கரப்பிள்ளை கடையின் முன் தமிழ்க் காங்கிரஸ் தலைவர். சங்கரப்பிள்ளை வருவார், கடையைத் திறப்பார் என அவர் எதிர்பார்த்து நின்றார் ஏமாந்தார்.

### குமாரசாமி கடை

சனத்திரள் முட்டியது; மோதியது; திரள்...திரள்!

மக்கள் சக்தி முன்பு துரோகம் பஞ்சாகப் பறந்தது. பொலிசாரின் தலையீடு இல்லாது விடில்......!

அதே நேரம்......!

சங்கரப்பிள்ளை கடைக்கு மேற்குப்புறமாகச் சில கடைகள் தள்ளி......குமாரசாமி என்பவரது கடை. இவர் அன்று பொன்னம்பலத்தைப் பின்பற்றினர். இன்று தமிழரசுக் கட்சியை ஆதரித்து நிற்கின்றார் அக்கடை அரைவாசி திறந்திருந்தது. திருவாளர்வன்னியசிங்கம், திருமதி வன்னியசிங்கம், பல பெண் தொண்டர்கள் ஆகியோர் திரு. குமாரசாமி கடையைப் பூட்டுமாறு கோரினர். குமாரசாமி மறுத்தார். அப்பொழுது வன்னியசிங்கமும் பெண் தொண்டர்களும், பல ஆண் தொண்டர்களும் கடைக்கு முன் உட்கார்ந்து விட்டனர். பூட்டும் வரை அசையோம் எனக் கங்கணங் கட்டி உட்கார்ந்தனர்.

குமாரசாமி, கட்சி வேறுபாடிருந்த பொழுதிலும், பண்பு கொண்டவர். ஆகவே வன்னியசிங்கம் அவர்களுக்கும் தொண்டர்களுக்கும் 'சோடா' கொடுத்தார். திரு

**புதுமைலோலன்**

வாளர் வன்னியசிங்கத்துடன் பலர் ஏதேதோ பேசினர். எதற்குமே பதிலில்லாதுவிடாப்பிடியாக-உடும்புப் பிடியாக...அப்படியே 'நம் வன்னியர்' உட்கார்ந்திருந்தார்.

### வன்னியர் அசைந்தார்

சனத்திரள் குமாரசாமி கடையின் முன் திரண்டது. 'தமிழரசுக் கட்சிக்கு ஜே' என்ற ஒலி எங்கும் பாய்ந்தது.

இந்நிலையில் திருமதி குமாரசாமி வந்து கணவனைக்கேட்டு...முடிவில் கடை சாத்தப்பட்டது! உண்மை வென்றது! தமிழரின் ஏகோபித்த குரல் மதிப்பைப் பெற்றது.

அதன் பின்புதான் திருவாளர் வன்னியசிங்கம் சோடா குடித்தார்; புறப்பட்டார்; —முகத்தில் புது ஒளி காணப்பட்டது.

எதையும் தாங்குமிதயத்துடன் போராட்டத்தை நடத்தக் கூடிய தன்மை—தன்னல மறுப்பு—நிறையக் கொண்ட தலைவர் திருவாளர் வன்னியசிங்கம் என்பதை யாருமே ஒப்புக் கொள்வர்.

அன்று மாலை......!

யாழ்ப்பாண முற்றவெளி காணாத கூட்டம். பலர் சொற்பெருக்காற்ற வந்திருந்தனர். பல்கலைக் கழக மாணவர்கள், யாழ்ப்பாணத் தமிழர் சார்பில் ஏகமனதாக ஒரு பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றினர்.

### போதும்! வெளியேறு!!

"தமிழ் பேசுமினத்தின் இடுக்கண் நிறைந்த இந்த நேரத்தில் தமிழுக்காகவோ, தமிழ் பேசுமினத்துக்காகவோ, உழைக்காது, எதையும் எதிர்ப்பதையே தமது அரசியல் எனக்கொண்ட யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அரசியலிலிருந்து ஓய்வு பெற வேண்டும்" என்பதே அப்பிரேரணை. முற்றவெளியில் நிறைந்திருந்த அத்தனை பேரும், கையுயர்த்தி, ஆரவிட்டு அப்பிரேரணையை ஏற்றுக் கொண்டனர்.

### வேலனும் விருத்தனும்

அவ்வமயம்தான் வித்துவான் வேலன் உணர்ச்சியுடன் பேசும்போது...... "பொன்னம்பலம் எங்கள் பலம்" என்ற காலம் மலையேறி......பொன்னம்பலம் எங்கள் மலம்" என்றாகி விட்டது எனக் கரகோஷத்துடன் பேசினர். அந்த வேலன் இன்று விருத்தனுகி, ஆசையென்ற 'பணவள்ளி'யை நோக்கி ஓடி விட்டார்......!

அந்தக் கூட்டத்தில் வன்னியசிங்கம் குறிப்பிட்ட ஒரு வாக்கியம்......!

அவ்வாக்கியம் அர்த்த புஷ்டி மிக்கது. உண்மையை உலகுக்குணர்த்தும் பழந்தமிழிலக்கிய உயர் வரி:

"நன்றும் தீதும் பிறர் தரவாரா" அரசியலில் துரத்தப் பட்டோர், துரோகம் செய்தோர், அதே நேரத்தில் நேர்மையுடன் உழைத்த அரசியல் வாதிகள் எம்போன்றோர் யெல்லாம் எண்ணினால், அவர்களது இன்றைய நிலையை எண்ணினால்...... நன்மையோ தீமையோ அவர்களால ஏற்றுக்கொள் ளப்பட்டதென்பதை உணரலாம்.

### கோமானின் கனவு

தமிழரசுக் கட்சி மக்களின் அபிமானம் பெற்றது, அதன் நன்மைச் செயலால்; நேர்மைப்போக்கால்......!

ஏன் வன்னியசிங்கம் மறைந்தும் மறையாது மக்கள் உள்ளத்தில் வாழ்கிறார்! எப்படி?

அவர் தம் கூற்றைச் செயலாக்கினர்.

ஆம்! "நன்றும் தீதும் பிறர் தரவாரா" என்பதை நமது வன்னியசிங்கம் பொது நல வாழ்வு உணர்த்துகிறது.

கூறியதை உணர்த்திய கோப்பாய்க் கோமான் அதோ செல்கிறார்...... கொள்கை நடை போடுகிறார்......நன்மை செய்வோம், நன்னிலையடைவோம்......அமரரின் கனவை நனவாக்குவோம்!

## இறந்தும்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விலையாம் போராடியே எமது அரசியலில் உரிமையைப் பெறவேண்டும்" என்பதை இன்றுவது தமிழ் பேசும் இனம் நினைவில் வைத்தல் நலம்.

### தமிழ்ப் பல்கலைக் கழகப் பகுதி ஒன்றிற்கு வன்னியசிங்க மன்றம் எனப் பெயர் இடுவோம்

எமக்கு வாழ்வளித்த வன்னியசிங்கம் அவர்களுக்கு யாம் எழுப்பத்தக்க அழியாத நினைவுச் சின்னம் அவர் தம் வாழ்விற் கொண்ட குறிக்கோள் அதாவது உரிமை பெற்ற அரசியல் வாழ்வே என்பதை மறக்க முடியாது. திருமலையில் அமையவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழக கட்டடப் பகுதிகளின் ஒன்றிற்கு "வன்னியசிங்க மன்றம்" எனப்பெயரிட்டு அழைக்கத் தமிழ்பேசும் இனம் துடிப்போடு பணம் சேர்த்து தமிழ் பல்கலைக் கழக இயக்கத்திற்குகொடுக்குமாயின் நிச்சயம் நன்றியுள்ள தமிழ் பேசும் இனம் என நானிலம் வாழ்த்தியே திரும்.

# கழகச் செய்திகள்

### கொழும்புத்துறை பழைய மாணவர் சங்கம்

கொழும்புத்துறை அர்ச் சூசையப்பர் பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் கடந்த 3-9-60-ல் நடைபெற்றது. அவ்வமயம் அரசாங்கம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைப் பொறுப்பேற்பது பற்றி ஆராயப்பட்டபோது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கம் மத ஸ்தாபனப்பாடசாலைகளை எடுத்து நடத்துவதற்கு முன்பு கல்வி நிபுணர்கள் கொண்ட ஒரு ஆலோசனைச் சபையினரால் இவ்விடயம் பரிசீலனை செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட வேண்டுமென்று கௌரவ பிரதம மந்திரியையும் கல்வி மந்திரியையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

### திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றத்தின் செயற்குழு கூட்டம் அணிமையில் மன்றப் பணிமனை "அண்ணு" இல்லத்தில் மன்றத் தலைவர் திரு. க. சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

மன்ற வளர்ச்சிக்கான பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதும் திருவாளர்கள் கே. எஸ். சிவலிங்கம், எம். சரீபு, வே. கா. திராவிடமணி, இரா. செல்வராசு, என். எஸ். கே. நாகையா, இரா. சபாபதி, முல்லை ரகுநாதன் முதலியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

### திம்பிரிக்கசாயா இ. தி. மு. க. கிளை

திம்பிரிக்கசாயாவில் இ. தி. மு. க. கிளை யொன்று அமைக்கும் முகமாக கடந்த 28-8-60-ல் டொரிக்டன் பாதை அண்ணு இல்லத்தில் ஓர் அமைப்புக் கூட்டம் திரு ம. க. கரிகாலன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கிளைக்கு கீழ் கண்டவர்கள் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:-

செயலாளர்: திரு. இரா. சபாபதி, துணைச் செயலாளர்: திரு. ஏ. கலைமணி, பொருளாளர்: திரு. புரட்சிப்பித்தன், செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### கந்தரோடை ஜன சமூக நூல் நிலையம்

கந்தரோடை ஸ்ரீசுப்பிரமணிய சனசமூக நிலையத்தின் 11-வது ஆண்டு வருடாந்தக் கூட்டம் அணிமையில் நிலையத் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசிங்கம் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவர், சென்ற ஆண்டு உத்தியோகத்தர்கள் உற்சாகமாகவும் ஒத்துழைப்புடனும் கடமை புரிந்தார்கள் என்றும் இவ்வாண்டு அங்ஙனமே கடமையாற்ற வேண்டுமெனக் குறிப்பிட்டார். நிலையத்திற்கு மின்சார வசதி புரிந்து தருவதாக கூறிய மக்களாட்சி மன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கத்தின் சேவை மிகவும் பாராட்டத் தக்கதெனக் குறிப்பிட்டார்.

திரு. எஸ். ஆர். பாலசிங்கத்தை மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது மிகவும் பாராட்டத்தக்கதென [illegible] ஏனைய உத்தியோகத்தர்கள் தெரிவு பின் வருமாறு:—

நிலையப் போஷகர்கள்: டாக்டர் எஸ். சுப்பிரமணியம், திரு. எஸ். எம். அப்புத்துரை, திரு வி. தருமலிங்கம் எம். பி., உப தலைவர்: செல்வன் செ. இரத்தினம், காரியதரிசி: செல்வன் சு. கந்தசாமி, உப காரியதரிசி: க சோதிநாதன், தனாதிகாரி, செல்வன் ந. சுகேந்திரன்; உப தனாதிகாரி; மூ. பாலச்சந்திரன்.


## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

### ப்ரம்மீகேச ரஞ்சன தைலம் (A)



கண்சூடு, கண்எரிச்சல், தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடிவிழுதல், நரையுண்டாகுதல், ஞாபகசக்தி குறைதல் முதலிய வியாதிகளை நீக்கி, தலைமயிரை அழகான கருநிறத்தில் இடை நெருங்க வளரச் செய்கிறது. அகாலத்திலுண்டாகும் நரைமயிரை முன் போல் கறுப்பு நிறமாக மாற்றுகிறது. இந்தத்தைலம் தொடர்ந்து பாவித்து வந்தால் 100 வயதானாலும் "நரையும்" வழுக்கையும் உண்டாகாது. பெண்மணிகள் சேர்க்கை முடிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படாது.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் 3-50.

### (B) அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

இந்த விசேஷத் தயாரிப்பிலும் மேலே சொன்ன எல்லா குணங்களும் அதேபடி அமைந்திருக்கிறது. கூடுதலான நரை மயிரை விரைவில் கருநிறமாக்கி வளரச் செய்யும்படி சக்தி வாய்ந்த திவ்விய மூலிகைகளை பிரத்தியேகமாச் சேர்த்திருப்பதே இதன் முக்கியத்துவம்.

விலை: 6 அவுன்ஸ் 4-50.

S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET,
COLOMBO—13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான 4-வது வாரம்!

## கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்

[கொழும்பு] [வெள்ளவத்தை] [யாழ்ப்பாணம்]

## லக்ஷ்மி ஸ்ரீ கிருஷ்ண

[இரத்தினபுரி] [திருகோணமலை]

## விஜிதா தீவொளி

[மஸ்கேலியா] [நுவரெலியா]



வாழ்க்கையில் நிகழும் இன்ப துன்பங்களை எப்படி கையாண்டு இன்பமாக வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் இலட்சிய திரைக் காவியம்.

சிந்தை குளிரும் சிறந்த கீதங்களும் ஒருங்கே அமையப் பெற்ற அருமையான திரை ஓவியம்.

கண்ணைக் கவரும் காட்சிகளில், எண்ணத்தை ஈர்க்கும் இணையற்ற இன்பச் சித்திரம்.

பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பாங்கான பைந்தமிழ் திரைவிருந்து.

ஒவ்வொருவரும் பார்த்து மகிழவேண்டிய திரைக் களஞ்சியம்.

**ஜெமினி கணேசன்-பி. சரோஜாதேவி**
**எஸ். வி. சுப்பையா-பி. கண்ணாம்பா**
**வி. ஆர். ராஜகோபால்-டி. பி. முத்துலெட்சுமி**
**டி. எஸ். பாலையா-வி. கே. ராமசாமி**
**கே.மாலதி, ஜி.சகுந்தலா, டி.எஸ்.முத்தையா**
**சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பாதேவர்,**
**மாஸ்டர் முரளி, ஆகியோர் நடித்த**





### தேவர் பிலிம்சாரின்

# வாழவைத்த தெய்வம்



இசை: கே.வி.மகாதேவன் | கதை-வசனம்: ஆரூர் தாஸ் | டைரக்ஷன்: எம்.ஏ. திருமுகம் | ஸ்டுடியோ: விஜயா-வாஹினி

நடனம் : பத்மினி பிரியதரிசினி—ரீடா ● தயாரிப்பு : சாண்டோ சின்னப்பாதேவர்

பின்னணி : சௌந்திரராஜன்—எஸ். சி. கிருஷ்ணன்—சுசிலா—ராஜேஸ்வரி ரத்னமாலா—ஜமுனா ராணி.

ஆயிரக்கணக்கான அபிமான ரசிகர்களின் ஆசையை நிறைவேற்ற திரும்பவும்

**மைலன் (கொழும்பு) திரையில் காண்பிக்கப்படுகிறது!**

பி. சரோஜாதேவி—ஜெமினி கணேசன்—ஏ. நாகேஸ்வரராவ்—விஜயகுமாரி—தங்கவேலு—எம். சரோஜா முதலியோர் நடித்த

# வீனஸ் பிக்சர்ஸ் கல்யாண பரிசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்த, ... சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ... பண்டாரநாயக்க மாவத்த சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 செப். 18-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.